விலை ரூபா: 20.00

# தமிழ்நாதம்
Thamil Naatham

புகைத்தலை தவிர்ப்போம்

இராகம் 01 | தாளம் 63 | வள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி 29 வெள்ளிக்கிழமை (14.09.2012) | பக்கங்கள்: பதினாறு + 4

# காணாமல்போன தமிழ் இளைஞர்கள் பற்றி பிளேக்குடன் கூட்டமைப்பு பேச்சு

## சம்பந்தன், சுமந்திரன் எம்.பி.கள் நிலைமைகளை விளக்கினர்



கொழும்பு வந்துள்ள றொபேட் ஓ பிளேக் வெளிவிவகார அமைச்சிற்கு சென்ற போது எடுக்கப்பட்ட படம்.

(கொழும்பு)

தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களின் விடுதலை குறித்தும், காணாமல் போனோர் சம்பந்தமாகவும் இலங்கைக்கு வருகை தந்திருக்கும் அமெரிக்காவின் மத்திய மற்றும் தெற்காசிய விவகாரங்களுக்கான உதவி இராஜாங்கச் செயலாளரான ரொபேர்ட் ஓ பிளேக்குடன் நேற்று பேச்சுவார்த்தை நடத்தியதாக தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தன் தமிழ்நாதத்துக்குத் தெரிவித்தார்.

நேற்றுக் காலை நட்சத்திர விடுதியொன்றில் இடம்பெற்ற இந்த சந்திப்பு சுமார் ஒரு மணித்தியாலம் வரை நீடித்தது.

இந்த சந்திப்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், மற்றும் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

02

## மத்தியில் ஆளும் கட்சியே கிழக்கிலும் ஆட்சியமைக்குமாம்

கிழக்கு, வடமத்திய, சப்ரகமுவ மாகாணங்களில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, தனது தோழமைக் கட்சிகளுடன் சேர்ந்து ஆட்சியை அமைக்கும் என ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார். கிழக்கில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசுடன் இணையுமா? அதன் ஆதரவை அரசுக்கு வழங்குமா? முஸ்லிம் காங்கிரஸிடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப் படுகின்றனவா? என கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## கூட்டமைப்புடன் பேசிய விடயங்கள் குறித்து பீரிஸ் - பிளேக் பேச்சு

(கொழும்பு)

அமெரிக்காவின் மத்திய மற்றும் தெற்காசிய விவகாரங்களுக்கான உதவி இராஜாங்க செயலாளர் ரொபர்ட் ஓ பிளேக்கிற்கும் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸிற்கும்

02

## வடக்கில் பொதுநலவாய குழு யுத்தத்துக்குப் பின்னரான நிலைமைகளை பார்த்தது

(கொழும்பு)

பொதுநலவாய பாராளுமன்ற மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இலங்கை வந்துள்ள வெளிநாட்டு பிரதிநிதிகள் நேற்று வடபகுதிக்கு விஜயம்செய்து, யுத்தத்திற்குப் பின்னரான நிலைமைகளை நேரில் கண்டறிந்தனர்.

குறுகிய காலத்திற்குள் வடக்கில் முன்னெடுக்கப் பட்டுள்ள வீதியபிவிருத்தி, மீள்குடியேற்றம், வீடமைப்பு உள்ளடங்கலாக துரித அபிவிருத்தியை பார்வையிட்டு ஆச்சரியமடைந்த அவர்கள் மனமகிழ்ச்சியையும் ஆதரவையும் வெளியிட்டனர்.

மீள்குடியேற்றப்பட்ட மக்களுடன்

02

## மிருக பலிக்கு ஆதரவாக ஜனாதிபதியின் குடும்பத்தினர் செயற்படுவதாக காளியம்மன் கோயில் குரு கூறியது தவறு

(கொழும்பு)

**ஜனாதிபதியின் செயலாளர் அறிக்கை**

புத்தரின் கபிலவஸ்து புனித தாது காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த காலத்தில் முன்னேஸ்வரம் காளி கோவிலில் மிருக பலியை நிறுத்துமாறு ஜனாதிபதி விடுத்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட மைக்காக கோவில் நிர்வாகத்துக்கு அரசாங்கத்தின் பாராட்டை நான் தெரிவித்தன். இதனை மிருக பலி பூஜையை மேற்கொள்வதற்கான உடன்படிக்கையாக எவ்விதத்திலும் கொள்ள முடியாது. ஜனாதிபதியின் செயலாளர் என்ற வகையில் நான் இதனைச் செய்தேன். ஆனால் மிருக பலி பூஜைக்கு ஆதரவாக ஜனாதிபதி அவர்களும் நானும் செயற்பட்டதாக முன்னேஸ்வரம் கோயிலின் பிரதம குரு காளிமுத்து சிவபாதசுந்தரத்தினால் விடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் கூற்றுகள் இந்த மிருக பலி பூஜையைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லும் நோக்கில் தெரிவிக்கப்பட்டதாகத் தெரிகிறது" இவ்வாறு

02

## ஐ.நா.பிரதி நிதிகள் குழு, வடக்குக்கும் வருகிறது

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக் குழுத் தலைவர் நவநீதம்பிள்ளையின் பிரதிநிதிகள் குழு இன்று இலங்கை வருகிறது. அரசாங்கத்தின் அழைப்பினையேற்று இலங்கை வரும் இக்குழு வடக்கு, கிழக்கு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கும் விஜயம் செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது.

02

## நாடுகளின் உள் விவகாரங்களில் ஐ.நா. தலையிடக் கூடாது

(கொழும்பு)

**பாலித கொஹன**

பாதுகாப்பதற்கான பொறுப்பு என்ற முறையை அரசியல் நோக்கங்களுக்காக எவரும் பயன்படுத்தக் கூடாது என இலங்கை அரசாங்கம் ஐக்கிய நாடுகள் அமைப்பிடம் கோரியுள்ளது.

பூவியியல் காரணிகளின் அடிப்படையில் பாதுகாப்பதற்கான பொறுப்பு என்ற ஆயுதத்தை பயன்படுத்திக் கொள்வதோ அல்லது தெரிவு அடிப்படையில் நடவடிக்கை எடுப்பதோ ஏற்றுக்கொள்ளமுடியாது என்று ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கான இலங்கை வதிவிடப் பிரதிநிதி பாலித கொஹன தெரிவித்துள்ளார்.

02

## இலங்கை அகதிகளை நௌருவுக்கு அனுப்பியது ஆஸி.

இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்களை நௌரு தீவுகளுக்கு அவுஸ்திரேலியா இடமாற்றம் செய்துள்ளது.

சட்டவிரோதமான முறையில் படகு மூலம் அவுஸ்திரேலியாவிற்குள் பிரவேசித்த இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்களே இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

02

## சிங்கள யாத்திரிகர்களுக்கு இடையூறு செய்ய வேண்டாம்

(திருச்சி)

**ஜெயலலிதா கோரிக்கை**



தமிழகத்துக்கு பயணம் மேற்கொள்ளும் சிங்களவர்களுக்கு இடையூறு ஏற்படக் கூடாது என்பதில் தமிழக அரசு உறுதியாக இருக்கிறது என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா கூறியுள்ளார்.

ஸ்ரீரங்கத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் முதல்வர் ஜெயலலிதா உரையாற்றும் போதே ஜெயலலிதா இதனைக் கூறினார். அவர் மேலும் கூறியதாவது, தமிழக மக்களுக்கு மட்டுமல்லாமல், முகாம்களில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களுக்கும் தமிழக மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தற்போது இலங்கை முகாம்களில்

02

தமிழ் பேசும் மக்களின் எழுச்சிக் குரல்

# யேமனிலுள்ள அமெரிக்க தூதரகமும் தாக்கப்பட்டது

அமெரிக்காவில் வெளியான இஸ்லாத்துக்கு எதிரான திரைப்படத்துக்கு எதிராக அரபு உலகில் ஆர்ப்பாட்டங்கள் நடக்கின்றன.

அமெரிக்காவில் இஸ்லாமிய மதத்துக்கு எதிரான படமொன்று வெளியானதால் ஆத்திரமடைந்துள்ள ஆர்ப்பாட்டக்காரர்கள் யேமன் தலைநகர் சனாவில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தையும் முற்றுகையிட்டு கலகத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ஆர்ப்பாட்டக்காரர்களை கட்டுக்குள் வைத்திருக்க காவல்துறையினர் ஆகாயத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியும், அவர்கள் தூதரக வளாகத்துக்குள் நுழைந்து அங்கிருக்கும் வாகனங்களுக்கு தீயிட்டுள்ளனர். பலர் காயமடைந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை, லிபியாவில் பெங்காஸி நகரிலுள்ள தூதரகம் தாக்கப்பட்டதில் அந்நாட்டுக்கான அமெரிக்கத் தூதுவர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

நேற்று மீண்டும் யேமனிலும் அமெரிக்கத் தூதரக வளாகத்துக்குள் ஆர்ப்பாட்டக்காரர்கள் நுழைந்துள்ள நிலையில், அவர்களை வெளியேற்ற பாதுகாப்புப் படையினர் கண்ணீர்ப்புகை மற்றும் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியுள்ளனர்.

தற்போது ஆர்ப்பாட்டக்காரர்களை தூதரக வளாகத்தில் இருந்து காவல்துறையினர் விரட்டிவிட்ட போதிலும், வெளிப்புறத்தில் தொடர்ந்தும் ஆர்ப்பாட்டம் நடந்துவருகின்றது.

எகிப்து தலைநகர் காய்ரோவிலும் ஆர்ப்பாட்டங்கள் நடந்துள்ளன.

நேற்று புதன்கிழமை, காய்ரோவிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தின் சுவர்களை சேதப்படுத்தி அமெரிக்க கொடியையும் கிழித்தெறிந்துள்ளனர்.

இன்று அதிகாலையும் காவல்துறையினருடன் ஆர்ப்பாட்டக்காரர்கள் கலகத்தில் ஈடுபட்டுள்ளார்கள்.

# யாழ்ப்பாணத்தில் பொதுநலவாய நாடுகளின் பிரதிநிதிகள் குழு

பொதுநலவாய நாடாளுமன்ற சங்கத்தின் கூட்டத்தொடரில் கலந்துகொள்வதற்காக இலங்கை வந்த பொதுநலவாய நாடுகளின் பிரதிநிதிகள் குழு யாழ்ப்பாணத்திற்கான விஜயத்தை நேற்று வியாழக்கிழமை மேற்கொண்டுள்ளது.

காலை 9.00 மணிக்கு பலாலி விமான நிலையத்தை வந்தடைந்த இக்குழுவினரை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் உள்ளிட்டோர் வரவேற்றனர்.

பொதுநலவாய நாடுகளின் பிரதிநிதிகள் குழுவுக்கு யாழ். நகரிலுள்ள ரிக்கோ ஹோட்டலில் விருந்துபசாரம் வழங்கப்பட்டது.

இதன் பின்னர் வடமாகாணத்தில் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படுகின்ற அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் வடமாகாண ஆளுநரின் செயலாளர் இளங்கோவன் விளக்கமளித்தார்.

இக்குழுவினர் மீள்குடியேற்றம், மக்களின் வாழ்வாதாரம், மிதிவெடி அகற்றுதல் ஆகியன தொடர்பிலும் கேட்டறிந்துகொண்டனர்.

இவர்களுடனான சந்திப்பில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், வடமாகாணசபையின் பிரதம செயலாளர் விஜயலட்சுமி, ஆளுநரின் செயலாளர், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# புவியியல் செயலமர்வு

மருதனார்மடம்

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளில் 10ஆம் 11ஆம் தரங்களுக்கு புவியியல் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு 15ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.00 மணி முதல் மாலை 4.30 மணிவரை மானிப்பாய் ஆசிரிய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பங்குகொள்ளும் ஆசிரியர்கள் பாடநூல், அறிவுறுத்தல் வழிகாட்டி என்பவற்றை தவறாது எடுத்து வருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள். (01)

## ஐ.நா. ... (தொடர்)

மோதல்களுக்குப் பின்னர் நாட்டில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்திகள், கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு பரிந்துரைகளின் அமுலாக்கம் ஆகியவற்றை நேரில் பார்வையிடும் நோக்கிலேயே இக்குழுவின் விஜயம் அமையவுள்ளதாக வெளி விவகார அமைச்சு தெரிவித் தது.

ஆணைக் குழுத் தலைவர் நவநீதம் பிள்ளையின் இலங்கை விஜயத்திற்கு முன்னர் கள நிலைமையை பார்வையிடும் நோக்கில் இன்று இக்குழுவினர் இலங்கை வருவ தாகவும் அமைச்சு கூறியது.

# வதிரி கண்ணகை அம்மன் மகோற்சவம்

மருதனார்மடம்

வதிரி வல்லியன் ஒல்லை கண்ணகை அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் கடந்த 4ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது.

எதிர்வரும் 17ஆம் திகதி (திங்கட்கிழமை) தேர்த் திருவிழாவும் மறுதினம் (செவ்வாய்க்கிழமை) தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

மகோற்சவகிரியைகளை சிவாசாரியமணி சிவஸ்ரீ பா. சோமசுந்தரக்குருக்கள் நடத்தி வருகிறார். (01)

## சிங்கள யாத்திரிகர்களுக்கு... (தொடர்)

உள்ள தமிழர்கள் அனைவரும், தங்களது சொந்த இடங்களுக்கு திரும்பி கண்ணியமாக வாழ வகை செய்யும் வரையில் அனைத்து குடியுரிமைகளையும் தமிழர்கள் பெறும் வரையில் மற்ற நாடுகளுடன் இணைந்து மத்திய அரசு வலியுறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கை இராணுவத்தினருக்கு தமிழ்நாடு உட்பட இந்தியாவில் எங்கும் பயிற்சி அளிப்பதை மத்திய அரசு கைவிட வேண்டும் என்றும் வலியுறுத்தினேன். இலங்கைத் தமிழர்களுக்கு நியாயம் இன்னமும் கிடைக்கவில்லை என்பதால், அதற்கு நம் தமிழகத்தின் எதிர்ப்பை, உணர்வுகளை தெரிவிக்கும் வகையில் இலங்கையைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களுக்கு தமிழகத்தில் பயிற்சி அளிப்பதை தடை செய்தேன்.

இவை காரணமாக, தமிழக மக்கள் மட்டுமல்லாமல், உலக வாழ் தமிழர்களும் எனது அரசின் நடவடிக்கைகளை பாராட்டி வருகின்றனர். எனினும் இலங்கையிலிருந்து சுற்றுலா, ஆன்மீகப் பயணம் போன்றவற்றிற்காக தமிழ்நாட்டிற்கு வருகை தரும் சிங்களவர்களுக்கு எந்தவித இடையூறும் ஏற்படக் கூடாது என்பதில் எனது அரசு உறுதியுடன் செயல்பட்டு வருகிறது.

ஆனால், தன்னலம் காரணமாக தன்மானத்தை இழந்து இலங்கையில் தமிழினம் அழியக் காரணமாயிருந்தவர், இலங்கைத் தமிழர்களுக்காக குரல் கொடுப்பது போல் நாடகமாடுகிறார்.

இலங்கையில் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட போது, இலங்கை அரசிற்கும், இராணுவத்திற்கும் ஆதரவாக மத்திய அரசு செயல்பட்டது. தமிழக மீனவர்கள் தங்களது பாரம்பரிய இடங்களில் மீன் பிடிப்பதை தடுக்கும் வகையில் அவர்கள் மீது இலங்கை கடற்படை தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிற நிலையில், அதற்கு ஒரு வலுவான எதிர்ப்பினை மத்திய அரசு தெரிவிக்கவில்லை.

இருப்பினும், மத்திய அரசை எதிர்த்து கேள்வி கேட்க இயலாதவர், இலங்கைத் தமிழர்களுக்காக என கூட்டப்பட்ட கூட்டத்தின் பெயரையே மாற்றிவிட்டார். இவ்வாறு தமிழர் மானத்தை காப்பாற்றுபவர்தான் இலங்கைத் தமிழர் நலன் காக்கும் எனது அரசின் நடவடிக்கையை கண்டிக்கிறார்.

தன்மானம் உள்ளவர்கள் இலங்கைத் தமிழர்களைப் பற்றி பேசலாம். மற்றவர்கள் பேசாமல் இருப்பது நல்லது. தன்னலம் காரணமாக தன்மானத்தை இழந்தவர்கள் இலங்கைத் தமிழர்கள் நலனை சீர்குலைக்கும் இலங்கை அரசுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் எனது நடவடிக்கைகளுக்கு களங்கம் கற்பிக்காமல் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் என்றார் ஜெயலலிதா.

## வடக்கில்... (தொடர்)

உரையாடிய அவர்கள் வடக்கில் முன்னெடுக்கப்பட்டுள்ள அபிவிருத்தியையும் பார்வையிட்டனர்.

58ஆவது பொதுநலவாய பாராளுமன்ற மாநாட்டில் பங்குபற்றுவதற்காக இலங்கை வந்துள்ள சுமார் 60 பேர் கொண்ட எம்.பிக்கள் குழு நேற்றுக்காலை இரு விசேட விமானங்கள் மூலம் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி பகுதிகளுக்கு விஜயம் மேற்கொண்டது.

ஏனைய வெளிநாட்டுப் பிரதிநிதிகள் சீகிரிய, கொக்கலை, கண்டி மற்றும் கொழும்பிலுள்ள முக்கிய இடங்களுக்கு விஜயம் செய்தனர்.

இரத்மலானையிலிருந்து பலாலி விமான நிலையத்தை வந்தடைந்த வெளிநாட்டுப் பிரதிநிதிகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மஹிந்த ஹத்துருசிங்க தலைமையிலான குழுவினர் வரவேற்றனர்.

## இலங்கை... (தொடர்)

கிறிஸ்மஸ் தீவுகளிலிருந்து குறித்த இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்களை ஏற்றிய விமானம் நௌருவிற்கு புறப்பட்டுச் சென்றுள்ளது.

40 இலங்கையர்களே இவ்வாறு நௌருவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எந்தவிதமான எதிர்ப்பும் இன்றி இலங்கையர்கள் விமானத்தில் ஏறியதாகக் குறிப்பிடப்படுகிறது.

இதேவேளை, சிரியாவிலிருந்து புகலிடம் கோருவோருக்கு கூடுதல் சந்தர்ப்பம் வழங்க அவுஸ்திரேலியா தீர்மானித்துள்ளது.

மேலும் ஆயிரம் சிரிய புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு புகலிடம்வழங்குவதற்கு அவுஸ்ரேலிய அரசாங்கம் தீர்மானித்துள்ளது. மனிதாபிமான அடிப்படையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

## காணாமல்போன... (தொடர்)

ரொபர்ட் ஓ பிளேக்குடனான சந்திப்பு மிகவும் திருப்பதிகரமான-தாக அமைந்திருந்தது என்று இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தல் தொடர்பிலும், கிழக்கில் நடைபெறுகின்ற விடயங்கள், மற்றும் நடைபெறவேண்டிய விடயங்கள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

அத்துடன் கிழக்கு மாகாணசபைத் தேர்தலின் பின்னரான நிலைமைகள் மற்றும் விளைவுகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

அரசாங்கத்தின் தற்போதைய செயற்பாடுகள் குறித்தும் அதிலுள்ள குறைப்பாடுகள் குறித்தும் விளக்கமளிக்கப்பட்டது.

முக்கியமாக காவலில் உள்ள தமிழ் இளைஞர்கள் குறித்தும், காணாமல் போனோர் குறித்தும் அதிக கவனம் செலுத்தப்பட்டதுடன், காணி சுவீகரிப்பு, அரசியல் தீர்வு விடயம், நாடாளுமன்றத் தெரிவுக்குழு என்பன தொடர்பிலும் அதிக கரிசனையுடனான பேச்சுக்கள் இடம்பெற்றதாகவும் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கூறினார்.

## மிருக பலிக்கு ஆதரவாக... (தொடர்)

ஜனாதிபதியின் செயலாளர் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

சில ஊடகங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளதைப் போன்று, சிலாபம் முன்னேஸ்வரம் கோயிலில் மிருகப் பலி பூஜையை நிறைவேற்றுவதற்கு அனுமதி வழங்கும் எந்தவொரு உடன்பாட்டுக்கும் அரசாங்கம் வரவில்லையென்றும் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. அதில் கூறப்பட்டுள்ளது.

இந்த பலிப்பூஜைக்கு நான் பல முறை விஜயம் செய்திருப்பதாகத் தெரிவிக்கப்படுவதும் முற்றிலும் பிழையானதும் உண்மைக்குப் புறம்பானதுமாகும்.

இங்கோ அல் லது வேறு எந்த இடத்திற்கோ இது போன்ற நிகழ்வுகளுக்கு நான் விஜயம் செய்தது கிடையாது.

அரசாங்கம் இந்தப் பலிப் பூஜைகளில் இடம் பெறும் மிருகவதைக்கு கொள்கை மற்றும் கோட்பாட்டு ரீதியாக எதிரானதாகும்.

மிருக வதைப்பற்றிய இவ்விடயம் தற் போது நீதித்துறையிடம் சமர்ப்பிக் கப்பட்டுள்ளதை அரசாங்கம் அறியும்.

இவ்விடயத்தில் மேலதிக நடவடிக்கையை எடுக்கும் வரை நீதித்துறை நடைமுறைகளின் முடிவை அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது.

அகில இலங்கை இந்து மன்றத்தினால் மிகத் தெளிவாக குறிப்பிட்டுள்ளதன்படி மிருகப் பலிபூஜையை இந்து சமூகம் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத ஒரு பாவ காரியமாகக் கருதுகின்றது என்பதையும் அரசாங்கம் அறியும் என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கூட்டமைப்புடன்... (தொடர்)

இடையிலான சந்திப்பு நேற்றுக் காலை வெளிவிவகார அமைச்சில் நடைபெற்றது.

மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நேற்று முன்தினம் இலங்கை வந்துசேர்ந்த அமெரிக்காவின் மத்திய மற்றும் தெற்காசிய விவகாரங்களுக்கான உதவி இராஜாங்க செயலாளர் ரொபர்ட் ஓ பிளேக் நேற்றுக் காலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை சந்தித்த நிலையில் வெளிவிவகார அமைச்சரையும் சந்தித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சருடனான சந்திப்பின் போது கூட்டமைப்பினருடன் பேசப்பட்ட காணி சுவீகரிப்பு, அரசியல் தீர்வு, நாடாளுமன்றத் தெரிவுக்குழு, அரசியல் கைதிகள், காணாமல்போனோர், கிழக்கு மாகாணசபைத் தேர்தல் குறித்த விடயங்கள் குறித்தும் ஆராயப்பட்டதெனத் தெரிவிக்கப்பட்டது.

## நாடுகளின் உள் விவகாரங்களில்... (தொடர்)

பாதுகாப்பதற்கான பொறுப்பு என்ற கோட்பாடு சர்ச்சைக்குரியதாக மாறியுள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடுகளின் இறைமை பாதுகாக்கப்பட வேண்டும் என்ற கோட்பாடு மிகவும்முக்கியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் ஐக்கிய நாடுகள் அமைப்புதேவையின்றி தலையீடு செய்யக் கூடாது என்பது தொடர்பில் ஐக்கிய நாடுகள் பிரகடனத்தின்இரண்டாம் பகுதி ஏழாம் சரத்தில் தெளிவாக வரையறுக் கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பதற்கான பொறுப்பு என்னும் ஐக்கிய நாடுகள் அமைப்பின்கோட்பாடானது அநேக சந்தர்ப்பங்களில் உலக சமாதானத்திற்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளது எனஅவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பயங்கரவாதத்திலிருந்து நாட்டையும் நாட்டு மக்களையும் பாதுகாக்கும்முனைப்புக்களுக்கு சர்வதேச சமூகம் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். பாதுகாப்பதற்கான பொறுப்பு என்னும் கோட்பாடு இரட்டை நிலைப்பாட்டைஉடையாகக் காணப்படுகின்றது என பாலித கொஹன சுட்டிக்காட்டியுள்ளார்.

இப்பத்திரிகை இன்ஃபோமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 14.09.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

# அங்கத்துவ நாடுகளின் சுயாதீனத்தில் திணிப்புகள் மேற்கொள்ளப்படக் கூடாது

## அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்

அங்கத்துவ நாடுகளின் சுயாதீன விவகாரங்களில் திணிப்புகளை மேற்கொள்வதில் ஐ.நா.வின் நடத்தையை பொதுநலவாயம் பின்பற்றக்கூடாது என வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் நேற்றுமுன்தினம் கூறினார்.

பொதுநலவாயமானது ஐ.நாவிலிருந்து வேறுபட்டது. எனவே ஐ.நா.வின் கொள்கைகள், நடத்தைகளை பொதுநலவாயம் பின்பற்றினால் அது பாரிய தவறாகிவிடும் என நேற்று நிகழ்த்திய லக்ஷ்மன் கதிர்காமர் ஞாபகார்த்த நினைவுப்பேருரையின்போது அவர் கூறினார்.

பொதுநலவாயத்தின் தன்மைக்கு புறம்பான செயற்பாடுகளை அதன்மீது சுமத்த முயற்சிப்பதானது இந்த அமைப்பின் அடிப்படை கொள்கைகளை ஆபத்தில் தள்ளக்கூடும் என அவர் தெரிவித்தார்.

பொதுநலவாயமானது அரசுகளுக்கிடையிலான, தன்னார்வ அடிப்படையில் இணையக்கூடிய ஓர் அமைப்பாகும். எனவே அது ஏனைய நாடுகளின் செயற்பாடுகள் தொடர்பாக தீர்ப்பளிக்கும் தோரணையை ஏற்படுத்துவது சரியானதோ சாத்தியமானதோ அல்ல என அவர் கூறினார்.

என்ன செய்ய வேண்டும் என ஏனைய நாடுகளை பணிக்கும் நிலைப்பாட்டை பின்பற்ற முடியாது என அவர் தெரிவித்தார்.

# இலங்கை போக்குவரத்து சபைக்கு 3000 சீன பஸ்கள்

அரச போக்குவரத்து சேவையை வலுப்படுத்தும் வகையில் 3000 பஸ்களை சீனாவில் இருந்து இறக்குமதி செய்ய திட்டமிட்டுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

இலங்கை போக்குவரத்து சபையின் கீழ் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள சுமார் 3500 பஸ்கள் 15 வருடங்கள் பழையது என அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே இலங்கை போக்குவரத்து சபையை வலுப்படுத்த புதிய பஸ்கள் தேவை என அமைச்சர் தெரிவித்துள்ளார். இதன் காரணமாக இலங்கை போக்குவரத்துச் சபைக்கென 3000 பஸ் வண்டிகள் சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படவுள்ளன.

# போதையில் வாகனம் செலுத்திய 317 சாரதிகள் ஒரு நாளில் கைது

நேற்றுமுன்தினம் காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் குடிபோதையில் வாகனம் செலுத்திய 317 சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையில் இவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எஸ்.பி அஜித் ரோஹண தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டோரில் 268 பேர் முச்சக்கரவண்டி மற்றும் மோட்டார் சைக்கிள் செலுத்தியவர்கள் என அவர் குறிப்பிட்டார்.

மேலும் குடிபோதையில் இருந்த தனியார் பஸ் சாரதி ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

எதிர்வரும் நாட்களிலும் நாடு முழுவதும் குடிபோதையில் வாகனங்களை செலுத்தும் சாரதிகள் கைது செய்யப்படுவர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

# உயிரிழப்பு

வடமத்திய மாகாண சபைத் தேர்தலின்போது ஐ.தே.க. ஆதரவாளர்களுக்கு இடையில் இடம்பெற்ற மோதலில் காயமடைந்த ஒருவர் உயிரிழந்துள்ளார். கடந்த 10ஆம் திகதி இரவு இம்மோதல் ஏற்பட்டது. இதில் மூவர் காயமடைந்து அநுராதபுரம் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், அதில் ஒருவர் நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்துள்ளர்.

# களனியில் விரிவுரையாளர்கள் அடையாள பணிப்பகிஷ்கரிப்பு

களனி பல்கலைக்கழகத்தின் வைத்திய பீட விரிவுரையாளர்கள் நேற்று அடையாள பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடுகின்றனர்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சம்மேளனம் மேற்கொண்டு வரும் பணிப்பகிஷ்கரிப்பிற்கு ஒத்துழைப்பு வழங்குவது இதன் நோக்கமாகும்.

இதேவேளை, பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்க சம்மேளனத்திற்கு பல தொழிற்சங்கங்கள் தமது ஆதரவை வழங்கியுள்ளன.

# கிழக்கு மாகாணத்தில் சுழல் காற்று: பொத்துவிலில் 20 வீடுகள் சேதம்

பொத்துவில் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை வீசிய திடீர் வேகமான சுழல் காற்றினால் அங்கு மக்களிடையே ஒருவகை பதற்றம் நில வியது.

மக்கள் அச்சத்தில் வீட்டுக்குள் முடங்கி இருந்ததாகவும் நேற்று மாலை மின்சாரம், தொலைபேசிகள் இயங்கவில்லை என்றும் பொத்துவில் மக்கள் தெரிவிக்கின்றனர்.


எனினும் இது குறித்து கால நிலை அவதான நிலையத்துடன் நாம் தொடர்பு கொண்டு கேட்ட போது, மழைக் காலம் காரணமாக 30-40 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசியதாக தெரிவித்தனர்.

இந்த சுழல் காற்றினால் பொத்துவில்-சர்வோதயபுரம் பகுதியில் 20 வீடுகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

சேதமடைந்த வீடுகளை திருத்தி அமைக்கும் பணிகளை அரச சார்பற்ற நிறுவனத்துடன் இணைந்து செயற்படுத்தி வருவதாக அந்த நிலையம் குறிப்பிட்டுள்ளது.

# இலங்கையில் ஜனநாயகத்திற்கு பற்றாக்குறையே இல்லை

## பொதுநலவாய செயலாளர் நாயகம்



இலங்கையில் ஜனநாயகத்திற்கான பற்றாக்குறையை தான் காணவில்லை என பொதுநலவாய செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மா கூறியுள்ளார்.

இலங்கையில் ஜனநாயகத்திற்கான பற்றாக்குறை இருப்பதாக நான் கருதவில்லை. ஆனால், ஜனநாயகம் என்பது ஒரு தொடர்ச்சியான செயன்முறை என்பதை கருத்திற்கொள்கையில், முன்னேற்றத்திற்குள்ளாக வேண்டிய விடயங்கள் நிச்சயமாக உள்ளன என அவர் கூறினார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

2013 ஆம் ஆண்டில் இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர்களின் உச்சி மாநாட்டில் பங்குபற்றுவதற்கு கனடா தயக்கம் காட்டுவது குறித்து கேட்டபோது, பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் அனைவரும் இதில் கலந்துகொள்வார்கள் என தான் நம்புவதாக கூறினார்.

ஜனநாயகம், சட்டத்தின்ஆட்சி, மனித உரிமைகள் ஆகியவற்றுக்காக ஆணையாளர் ஒருவரை நியமித்தல் குறித்த கேள்வி தற்போது இல்லை எனவும் இவ்வாறான அதிகாரி ஒருவரை நியமிக்காமல் இச்செயற்பாடுகளை எவ்வாறு மேற்கொள்வது என்பது குறித்து பொதுநலவாயம் பின்னர் கலந்துரையாடும் எனவும் கமலேஷ் சர்மா கூறினார்.

பொதுச்சேவை. இளைஞர் தொழில்முயற்சியாண்மை, மற்றும் உள்ளூராட்சி அரசாங்கம் ஆகிய துறைகளில் இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து பல திட்டங்களை ஆரம்பிப்பதற்கு பொதுநலவாயம் எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

# யாத்திரிகர் மீதான தாக்குதலால் விமான நிறுவனங்கள் பாதிப்பு

இந்தியாவின் தஞ்சாவூரில் இலங்கை யாத்திரிகர்கள் தாக்கப்பட்ட சம்பவத்தின் பின்னர் கொழும்பிலிருந்து திருச்சிக்கு விமான மூலம் பயணம் மேற்கொள்வோரின் எண்ணிக்கை கணிசமாக குறைவடைந்துள்ளது. இதனால் ஸ்ரீலங்கன் ஏயார் லைன்ஸ், மிஹின் லங்கா ஆகிய விமானக் கம்பனிகள் பெரும் நட்டத்தை எதிர்நோக்கி வருகின்றன.

இக்கம்பனிகள் திருச்சிக்கான தமது விமான சேவையை மேலும் விஸ்தரிக்க திட்டமிட்டிருந்த வேளையில் இலங்கை யாத்திரிகர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலினால் ஸ்ரீலங்கன் ஏயார் லைன்ஸ், மிஹின் ஏயார் லைன்ஸ் ஆகியவற்றின் வருமானம் பெரும் வீழ்ச்சியைக் கண்டுள்ளது.

ஈழ யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் இந்தியாவுக்கு யாத்திரை மேற்கொள்ளும் சிங்கள யாத்திரிகர்கள் முதலில் கொழும்பிலிருந்து திருச்சிக்கு பயணமாகினர். இவர்கள் பின்னர் திருச்சியிலிருந்து பௌத்த தலங்களான புத்தகாயா, சர்னாத் ஆகிய பகுதிகளுக்கும் பயணித்தனர். இப்பயணத்தின்போது இவர்கள் பல இந்துக் கோவில்களையும் தரிசித்துச் சென்றனர்.

இப்போது இவர்கள் கொழும்பிலிருந்து திருச்சி செல்லும் திருவனந்தபுரத்துக்கு விமானத்தில் பயணிக்கின்றனர்.

இதேபோல கொழும்புக்கு வரும் தமிழ்நாட்டு சுற்றுலாப் பயணிகள் இப்போது சிங்கப்பூர் அல்லது கோலாலம்பூருக்கு செல்கின்றனர். இதனால் இலங்கை சுற்றுலாத் துறையும் பாதிக்கப்பட்டுள்ளது.

# தங்க பிஸ்கட்டுகளுடன் ஒருவர் கைது

இந்தியாவின் பெங்களூருக்கு செல்லவிருந்த 47 வயதான வர்த்தகரொருவர் தங்க பிஸ்கட்டுக்களை கடத்திய குற்றச்சாட்டின் பேரில் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் சுங்க அதிகாரிகளினால் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்நபர் 10 மில்லியன் ரூபா பெறுமதியான 12 தங்க பிஸ்கட்டுக்களை தனது உடம்பில் மறைத்து வைத்திருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர் வர்த்தக நடவடிக்கைகளுக்காக இந்தியாவுக்கு அடிக்கடி சென்றுவருவதாகவும் இந்நிலையில் இவர் 5 தடவைகள் தங்க பிஸ்கட்டுக்களை கடத்தியதாகவும் விசாரணையிலிருந்து தெரிய வந்துள்ளது.

# மின்சாரம் தாக்கி இளைஞன் பலி

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூரில் மின்சாரம் தாக்கி இளைஞரொருவர் நேற்று வியாழக்கிழமை காலை பலியாகியுள்ளதாக ஏறாவூர்ப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஏறாவூர் ஓடாவியார் வீதியைச் சேர்ந்த அபூபக்கர் முகமட் இர்பான் (வயது 22) என்பவரே இவ்வாறு பலியானவராவார்.

இவர் வீடொன்றில் தொழிலில் ஈடுபட்ட வேளையில் மின்சாரத் தாக்குதலுக்குள்ளானதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர் காலில் செருப்பு அணிந்திருக்கவில்லை யெனவும் இவ் வீட்டின் மாடியில் நீர் தேங்கி நின்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஏறாவூர் மாவட்ட வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி எஸ்.ஏ.சி.பழில் பிரேத பரிசோதனை நடத்தி அறிக்கை சமர்ப்பித்த நிலையில், இப்பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.எஸ்.எம்.நஸீர் மின்சாரம் தாக்கியதால் ஏற்பட்ட மரணமெனக் கூறினார்.

# இன்றைய இராசி பலன் (14.09.2012)

**நந்தன வருடம் ஆவணி திங்கள் 29 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**நட்சத்திரம்** : மகம் பின்னிரவு 4.31 வரை அதன் பின் பூரம்
**திதி** : திரயோதசி முற்பகல் 10.24 வரை. அதன் பின் சதுர்த்தசி
**சுபநேரம்** : 6.03 - 7.33
**இராகுகாலம்** : 10.33 - 12.03
(இந்த நேரங்கள் இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்)
**மேடம்** : சிறுலாபம், கடின முயற்சி மனவேதனை
**இடபம்** : ஆரோக்கியக் குறைவு, வாகன நஷ்டம், தாயவழி சஞ்சலம்
**மிதுனம்** : காரிய அனுகூலம், தொழில் விருத்தி, சகோதர உதவி
**கடகம்** : பொருள் வரவு, போசன சுகம், வாக்கு பலிதம்
**சிங்கம்** : வீண் பிரச்சினை, மனக்கஷ்டம், யோசனை மிகுதி
**கன்னி** : வீண் விரயம், ரோக பயம், மறைமுக எதிர்ப்பு
**துலாம்** : பொருள் இலாபம், நற்செய்தி, மூத்தோர் உதவி
**விருச்சிகம்** : காரிய தாமதம், பயனற்ற சேர்க்கை, தொழிலில் சிறுவிருத்தி
**தனுசு** : பொருள் சேர்க்கை, இளையோர் நட்பு, தந்தை வழி நன்மை
**மகரம்** : தேகசுகக் கேடு, மனக்கஷ்டம், குறைகேட்டல்
**கும்பம்** : இனசனக்கொண்டாட்டம், திருமண முயற்சி, நண்பர் ஆதரவு
**மீனம்** : கடன்தொல்லை, வழக்கு விவகாரம், சத்துருபயம்

- **ஜோதிடர் பால.இரத்தினசேகர்**

# யுத்தத்துக்குப் பின்னரான இலங்கையின் அனுபவங்களை அறிய பாகிஸ்தான் ஆர்வம்

## -பாக் எம்.பி. கலாநிதி நபீஷா ஷா

ஜனநாயகத்தைப் பலப்படுத்துதல், அரசியல் ஸ்தரத்தன்மை போன்ற இலங்கை பெற்றுள்ள அனுபவங்களை பாகிஸ்தானும் பெற்றுக் கொள்வது தொடர்பாக கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக பாகிஸ்தானின் பாராளுமன்ற உறுப்பினரும், பொதுநலவாய பாராளுமன்ற ஒன்றியத்தின் நிறைவேற்றுக் குழு உப தலைவருமான கலாநிதி நபீஷா ஷா தெரிவித்துள்ளார்.

இலங்கை பெற்றுக் கொண்டுள்ள அனுபவங்களைக் கொண்டு பாகிஸ்தானும் ஜனநாயகத்தை பலப்படுத்தல், மனித உரிமைகள், அரசியல் ஸ்தரத்தன்மை போன்றவற்றை ஏற்படுத்தல் தொடர்பாக இலங்கையின் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ, பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி ஆகியோருடன் கலந்துரையாடியதாகவும் அவர் தெரிவித்தார்.



அமரர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் நேற்று முன்தினம் ஊடகவியலாளர்களை சந்தித்து பேசிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், மாநாட்டின் முதல் நாளில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச உரையாற்றியபோது மனித உரிமைகள் என்ற பதத்தைப் பயன்படுத்தி சில நாடுகளின் மேல் அழுத்தம் கொடுக்கப்படுவது குறித்து எதிர்ப்புத் தெரிவித்தார். இதனை தான் வரவேற்பதாக பாக் எம்.பி. கூறினார்.

30 வருடங்களாக இலங்கையில் பிரச்சினை இருந்து வந்தது. இதனை முடிவுக்கு கொண்டு வருவதற்கு பல பிரயத்தனங்களை இலங்கை அரசு எடுத்திருந்தது. பேச்சுவார்த்தைகளுக்கு அழைப்பு விடுத்திருந்தது. சர்வதேச மத்தியஸ்தத்தையும் அழைத்திருந்தது. இறுதியில் யுத்தம் மூலம் பிரச்சினைக்கு முடிவு காணப்பட்டது. அவசியமான வேளையில் அவசியமான உதவிகளை எமது பாகிஸ்தான் அரசம் செய்தது என்றும் கலாநிதி நபீஷா ஷா தெரிவித்தார்.

# தமிழகத்தில் சிங்கள மக்கள் தாக்கப்பட்டமைக்கு

## இந்து மாமன்றம் கண்டனம்

தமிழகத்திற்கு வழிபாட்டிற்குச் சென்ற சிங்கள மக்கள் தமிழகத்தில் தாக்கப்பட்டமைக்கு அகில இலங்கை இந்துமா மன்றம் கண்டனம் தெரிவித்துள்ளது. இந்துமா மன்றத் தலைவர் வி.கயிலாச பிள்ளை அவர்களும். பொதுச் செயலாளர் கந்தையா நீலகண்டன் அவர்களும் கூட்டாக விடுத்த கண்டன அறிக்கை பின்வருமாறு:

மத ரீதியான வழிபாட்டுத் தலங்களைத் தரிசிக்கச் சென்ற இலங்கையர்கள் மீது தமிழகத்தில் அண்மையில் இடம்பெற்ற வன்முறைகள் மனவேதனைக்குள்ளாக்கிய துரதிஷ்டவசமான சம்பவமாகும். "வந்தாரை வாழ வைக்கும் தமிழகம்" என்ற பெருமையுறும் தமிழகத்தின் பண்பாடு, கலாசாரம், நாகரீகம் என்பன இவ்வாறான ஊறு விளைவிக்கும் செயல்களால் தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல முழு இந்தியாவுக்குமே களங்கத்தை ஏற்படுத்தும் செயலாக அமைந்துவிடுகிறது.

அனைத்துக்கும் மேலாக இலங்கையிலிருந்து தமிழகம் செல்லும் பொதுமக்கள் எந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், சாதார பொதுமக்கள் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். உல்லாசப் பயணிகள் இரு நாடுகளுக்கும் பயணம் செய்கிறார்கள். இந்நிலையில் நல்லுறவை வளர்க்க வேண்டுமே தவிர அதனைக் குலைக்க எவரும் முயலக் கூடாது என்பதை அழுத்திக் கூற விரும்புகின்றோம். இச்சம்பவத்தினால் அகில இலங்கை இந்து மாமன்றம் கவலையும், வேதனையும் அடைகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாற அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கூடங்குளம் மின் நிலையத்தினால் வடபகுதி மக்களுக்குப் பாதிப்பில்லை

தமிழ் நாட்டின் கூடங்குளம் அணு மின்சக்தி நிலையத்திலிருந்து அணுக்கதிர்க் கசிவு ஏற்படக் கூடிய சாத்தியம் எதுவும் இல்லையென்ற அணுசக்தி அதிகார சபையின் தலைவர் டாக்டர் ரஞ்சித் விஜயரட்ன தெரிவித்திருக்கிறார். இந்த அணு மின்சக்தி நிலையம் தொடர்பாக வட மாகாண மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லையென்றும் அவர் சொன்னார். ஏதாவது அணுக்கதிர் கசிவு ஏற்படும் பட்சத்தில் உடனடியாகவே உதவக்கூடிய நிலையில் தாம் இரு[illegible]பதாகவும் அவர் சொன்னார்.

கூடங்குளம் அணுமின்சக்தி நிலையத்தை மூடிவிடுமாறு இந்தியாவை நிர்ப்பந்திக்க எம்மால் முடியாது.

இரு தரப்பு ஒப்பந்தம் மூலம் பாதுகாப்பு நடவடிக்கையை மேற்கொள்வதே நாம் செய்யக் கூடிய நடவடிக்கையாகும் என்றும் அவர் சொன்னார்.

# கும்பாபிஷேக தின திருவிழா

(பருத்தித்துறை)

புலோலி தெற்கு அருள்மிகு பெரிய வளவு வீரபத்திரர் ஆலய கும்பாபிஷேக தின திருவிழா நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்றது.

காலை 8.00மணிக்கு வீரபத்திரப் பெருமானுக்கு விசேட அபிஷேக பூசை ஆராதனைகளுடன் இத் திருவிழா சிறப்புற நடைபெற்றது.

# கோண்டாவில் அற்புத நர்த்தன விநாயகர் ஆலய மஹோற்சவம்

(உடுவில்)

கோண்டாவில் பலாலி வீதி அருள்மிகு அற்புத நர்த்தன விநாயகர் ஆலய மஹோற்சவம் கடந்தம் 10ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

எதிர்வரும் 18ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

இவ் மஹோற்சவ காலங்களில் ஆன்மீக சொற்பொழிவினை இந்து கலாசார அலுவல்கள் திணைக்கள ஓய்வு பெற்ற உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் நிகழ்த்தி வருகின்றார்.

# 'வேலணை ஒரு வரலாற்று அறிமுகம்' நாளை நூல் வெளியீடு

"வேலணை ஒரு வரலாற்று அறிமுகம்" என்ற நூல் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொன் பாலசுந்தரம் பிள்ளை தலைமையில் நிகழ்வுகள் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகமும் கௌரவ விருந்தினராக யாழ் பல்கலைக்கழக துணை வேந்தர் வசந்தி அரசரட்ணமும் கலந்து கொள்ளவுள்ளனர்.

# யாழ் முஸ்லிம்களின் பிரச்சினைகள் பற்றிய கூட்டம் நாளை

(யாழ் நிருபர்)

யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நாளை சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு பிரதிநிதிகள் கூட்டம் நடைபெறும். மீள்குடியேறியுள்ளவர்கள், மீள்குடியேற விரும்புபவர்கள், மீள்குடியேறித் திரும்பிச் சென்றவர்கள் ஆகியோரின் நிலைமையைப் பற்றி இக் கூட்டத்தில் ஆராயப்படும். எமது தாய் மண்ணின் இருப்பை உறுதி செய்தல்,

தாய் மண்ணில் வாழ்வதா? அகதி அந்தஸ்துடன் திரும்பிச் [illegible]வதா போன்ற விடயங்கள் பற்றி ஆழமாகக் கலந்துரையாடிக் கருத்துப் பரிமாறல் செய்யும் நோக்கில் இக் கூட்டம் இடம்பெறவுள்ளது.

சம்மேளனத்தின் பிரதிநிதிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பொதுச் செயலாளர் எம்.எம்.எம். ரமீஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# மன்னாரில் மாதிரி கிராமிய விவசாயப் பண்ணை

(மருதனார்மடம்)

இலங்கை அரசாங்கம் இலங்கை முழுவதிலும் பதினான்கு மாதிரி கிராமிய விவசாயப் பண்ணைகளை அமைக்கும் முயற்சியினை ஆரம்பித்துள்ளது. வட மாகாணத்திற்கான பண்ணை மன்னார் மாவட்டத்தில் அமையவுள்ளது. இதன்மூலம் இளைஞர்களிடையே விவசாய ஊக்குவிப்பை ஏற்படுத்துவதும் விவசாயத்தில் புதிய தொழில் நுட்பங்களைப் புகுத்துவதும் இவற்றினூடாக விவசாயத்தில் தன்னிறைவு பெறுவதும் நோக்காகக் கொண்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

# விவசாயப் பண்ணைப் போட்டி

(மருதனார்மடம்)

"சிசு சவியென் ரண் அஸ்வனு" எனும் மாணவ சக்தியுடன் பொன்னான விளைச்சல் எனும் பெயரில் பாடசாலைகளுக்கிடையிலான விவசாயப் பண்ணைப் போட்டி நடைபெற்றது.

வலிகாமம் கல்வி வலயத்தில் ஆரம்பப் பிரிவில் முதலாமிடம் மூளாய் சைவப் பிரகாச வித்தியாசாலை இரண்டாமிடம் உடுவில் அ.மி.த.க. பாடசாலை இடைநிலைப் பிரிவில் முதலாமிடம் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, இரண்டாமிடம் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி, மூன்றாமிடம் சுன்னாகம் ஸ்கந்தவ ரோதயாக் கல்லூரி ஆகியன வெற்றி பெற்றுள்ளன என வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்திருக்கிறார்.

# முன்பள்ளி ஆசிரியர்கள் கௌரவிப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை மக்கள் வங்கி, வங்கியின் கல்வி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பருத்தித்துறைப் பிரதேசத்திலுள்ள 40 முன்பள்ளி ஆசிரியர்களையும் பாராட்டிக் கௌரவித்துள்ளது. பருத்தித்துறை மக்கள் வங்கியின் முகாமையாளர் எஸ்.கிருஸ்ணானந்தன் தலைமையில் இக் கௌரவிப்பு விழா நடைபெற்றது. முன்பள்ளி ஆசிரியைகளை ஊக்குவிக்குமுகமாக பரிசில்களும் வழங்கப்பட்டன.

# யாழ் - ஊர்காவற்றுறை வீதியில் பாலங்கள் புனரமைப்பு

(உடுவில்)

யாழ்ப்பாணம் - ஊர்காவற்றுறை பிரதான வீதியில் மூன்று பாலங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. குறிப்பிட்ட மூன்று பாலங்களும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் திட்டமிடலின் கீழ் நிர்மாணிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

# தமிழகப் பயணத் தடை ஆலோசனை விரைவில் நீக்கப்படும்

"தமிழ் நாட்டுக்கு இலங்கையர்களை விஜயம் செய்ய வேண்டாம் என்று இலங்கை அரசாங்கம் விடுத்த பயணத் தடை ஆலோசனை இன்னும் சில வாரங்களில் நீக்கப்படலாம்" என்று வெளிவிவகார அமைச்சுக் காரியதரிசி கருணாதிலக அமுனுகம தெரிவித்தார். தமிழகத்தின் நிலைமைகளை சென்னையிலுள்ள எமது உயர் ஸ்தானிகராலும் உன்னிப்பாக அவதானித்து வருகிறது.

தமிழ்நாட்டில் நூற்றி எண்பத்தி நான்கு சிங்கள யாத்திரிகர்கள் தாக்கப்பட்ட சம்பவத்துக்குப் பின்னால் இதுவரை எவ்வித அசம்பாவிதங்களும் நடைபெறவில்லை என்றும் அவர் சொன்னார்.

# கே.ஆர்.டேவிட்டின் 'பாடுகள்' சிறுகதைத் தொகுதி நாளை வெளியீடு

கே.ஆர்.டேவிட் எழுதிய "பாடுகள்" என்ற சிறுகதைத் தொகுதியின் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு யாழ்.பலநோக்கு கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக் கழக விரிவுரையாளர் வி.ரி.கணேசலிங்கமும், ஆய்வுரையை முன்னாள் தினகரன் ஆசிரியர் சிவா சுப்பிரமணியமும் நிகழ்த்தவுள்ளனர்.

நூலின் முதற் பிரதியை வைத்திய கலாநிதி குமாரவேள் பெற்றுக் கொள்வார்.

# பதவி, சிறப்புரிமைகளே ஸ்ரீல.மு.கா.வின் எதிர்பார்ப்பு: கூட்டுச்சேர்வதால் ஆபத்து !

## - தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் எச்சரிக்கை

முஸ்லிம் காங்கிரஸ் எப்போதும் பதவி, சிறப்புரிமை ஆகியவற்றை எதிர்பார்த்தே செயற்பட்டு வருகின்றது என தேசியப்பற்றுள்ள தேசிய இயக்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் ஆட்சியை கைப்பற்ற அரசாங்கம் முஸ்லிம் காங்கிரஸை இணைத்து கொள்ள நடவடிக்கை எடுக்குமானால் ஆபத்தானது.

அத்துடன் அது பலனளிக்க கூடியதுமான நடவடிக்கை ஆக அமையாது என இவ் இயக்கத்தின் செயலாளர் வசந்த பண்டார தெரிவித்துள்ளார்.

முழு நாட்டுக்கும் எதிராகவும் பிரிவினைவாத யோசனைகள் பலவற்றை நிறைவேற்றி கொள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முயற்சித்து வரும் சந்தர்ப்பத்தில் முஸ்லிம் காங்கிரஸ் அவர்களுடன் இணைவது நிச்சயமானது.

பதவி, சிறப்புரிமைகளை வழங்குவதன் மூலம் அரசாங்கம், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசுடன் கூட்டணிக்கு செல்ல முடியும். எனினும் ஒரு தீர்மானகரமான கட்டத்தில் அந்த கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் கட்டாயம் இணையும். வடமாகாண சபை ஸ்தாபிக்கப்பட்ட பின்னர் இது நடக்கும்.

இவர்களின் தேவை வடக்குக் கிழக்கை இணைப்பதாகும். அதுவரை இவர்கள் அரசாங்கத்துடன் விளையாடிக் கொண்டிருப்பார்கள்.

இதன் பின்னர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து அவர்களின் அதிகார திட்டத்தை மேற்கொள்வதற்கு தேவையான யோசனைகளை நிறைவேற்றிக் கொள்வார்கள்.

இதனால் அரசாங்கம் வரப்பிரசாதங்களை வழங்கி முஸ்லிம் காங்கிரசுடன் கூட்டணி அமைக்குமாயின் அது ஆபத்தானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எதிர்க்கட்சிகளுக்கு பெருபான்மை இருந்தாலும் ஆளுநரின் விருப்பதற்கு அமைய தனியாக அதிக ஆசனங்களை கொண்ட கட்சிக்கு ஆட்சியமைக்க முடியும்.

அரசாங்கம் முஸ்லிம் காங்கிரசுடன் இணைந்து கூட்டணியாக கிழக்கு மாகாணத்தில் ஆட்சியமைப்பது என தீர்மானிக்குமாயின் அது தந்திரோபாயமான வகையில் தவறான தீர்மானமாகும். என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஆணின் சடலம் ஆற்றிலிருந்து மீட்பு

திருக்கோவில் - கஞ்சிக்குடியாறு - சாவாறு ஆற்றில் உடல் அழுகிய நிலையில் நேற்று (13) காலை ஆண் ஒருவரின் சடலம் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்டவர் திருக்கோவில் மைதான குறுக்கு வீதியைச் சேர்ந்த 33 வயதுடைய சிவசிதம்பரம் நந்தகுமார் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவரை கடந்த புதன்கிழமை தொடக்கம் காணவில்லை என உறவினர்கள் திருக்கோவில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

சிவசிதம்பரம் நந்தகுமார் பதிவுத் திருமணம் முடித்து ஒரு மாதங்களே ஆகியுள்ள நிலையில் அவருக்கு எதிர்வரும் 15ம் திகதி திருமணம் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. திருக்கோவில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## காணாமற்போனோர் விவகாரம்:

# யாழ். குடாநாட்டில் 17ம் திகதி தொடக்கம் விசாரணை

காணாமல் போனோர்கள் தொடர்பான தற்போதைய நிலமைகள் குறித்து ஆராயப்பட்டவர்களுக்கான விசாரணைகள் எதிர்வரும் 17ஆம் திகதி நடைபெறவுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் ரி.கனகராஜ் தெரிவித்தார்.

2006ஆம் ஆண்டு காலப்பகுதியில் காணாமல் போனோர்கள் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டு அத்தாட்சி படுத்தப்பட்டவர்கள், மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டு தற்போதைய நிஇமைகள் குறித்து ஆராயப்பட்டு கடிதங்கள் அனுப்பப்பட்டவர்களுக்கு இலங்கை மனித உரிமைகள் அதிகாரிகளினால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் எதிர்வரும் 17ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை விசாரணைகள் இடம்பெறவுள்ளது.

இந்த விசாரணைகள் ஒவ்வொரு பொலிஸ் பிரிவுகளிலும் இடம்பெறவுள்ளன. அந்தவகையில், 17ஆம் திகதி யாழ். உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பிரிவு 1 - யாழ்ப்பாணம், மானிப்பாய், சுன்னாகம், 18ஆம் திகதி யாழ். உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பிரிவு 3 கோப்பாய், சாவகச்சேரி, கொடிகாமம், 19ஆம் திகதி கே.கே.எஸ் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பிரிவு 3 - பருத்தித்துறை, நெல்லியடி, வல்வெட்டித்துறை, 20ஆம் திகதி யாழ். உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பிரிவு - 2 ஊர்காவற்துறை, வட்டுக் கோட்டை, 21ஆம் திகதி கே.கே.எஸ் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பிரிவு 1 - அச்சுவேலி, இளவாளை ஆகிய பிரிவுகளில் விசாரணைகள் நடத்தப்படவுள்ளன.

# இலங்கையிலிருந்து தமிழ்நாட்டுக்கு தங்கம் கடத்துவோர் தொகை அதிகரிப்பு

ஒரே நாளில், 38 இலட்சம் ரூபாய் மதிப்பிலான தங்கக் கட்டிகளை கடத்தி வந்த ஏழு பேரை சென்னை விமான நிலையத்தில் சுங்கத் துறை அதிகாரிகள் கைது செய்தனர்.

கொழும்புவில் இருந்து அதிகளவிலான தங்கக் கட்டிகள், சென்னைக்கு கடத்தி வரப்படுவதாக, சென்னை விமான நிலையச் சுங்கத் துறையினருக்குத் தகவல் கிடைத்தது.

கடந்த 11 ஆம் திகதி இரவு முதல், கொழும்புவில் இருந்து, சென்னை வந்த விமானப் பயணிகளை சுங்கத் துறை அதிகாரிகள் கண்காணித்தனர்.

நேற்று முன்தினத் அதிகாலை 2.30 மணிக்கு வந்த ஸ்ரீ "லங்கன் ஏர்லைன்ஸ் விமானப் பயணி, அகமது மொய்தீன் (39) மீது அதிகாரிகளுக்குச் சந்தேகம் ஏற்பட்டது.

அவர் தன்னிடம் வரி செலுத்தும் பொருட்கள் ஏதும் இல்லை எனக்கூறி, கிரீன் சேனல் வழியாக வெளியேற முயன்றார். அவரைச் சுற்றிவளைத்த அதிகாரிகள், தனி அறையில் சோதனை நடத்தினர்.

அப்போது அவரது உள்ளாடைக்குள் ஏதோ ஒரு பொருள் மறைத்து வைக்கப்பட்டிருந்தது தெரியவந்தது. ஆடைகளை களைந்து பார்த்த போது, கறுப்பு நிற கார்பன் காகிதத்தில் சுற்றி, 237 கிராம் தங்கக் கட்டிகளை மறைத்து வைத்திருந்தார்.

அதே போல காலை 10.30 மணிக்கு, கொழும்புவில் இருந்து வந்த மற்றொரு விமானத்தில், இலங்கையைச் சேர்ந்த பொன்னுசாமி, ஐயாதுரை, கந்தன், தமிழ்நாடு தஞ்சாவூரைச் சேர்ந்த சிவகுமார் உட்பட, ஆறு பேர் வந்தனர்.

இவர்களை தனி அறையில் அதிகாரிகள் சோதனை செய்தனர். இதில், அனைவரும் உள்ளாடைக்குள் வைத்து தங்கக் கட்டிகளை கடத்தி வந்தது தெரியவந்தது. ஆறு பேரிடம் இருந்து, 880 கிராம் தங்கக் கட்டிகள் பறிமுதல் செய்யப்பட்டன.

சுங்கத் துறையினர் அவர்களை கைது செய்து விசாரணை நடத்தினர்.

இதில், சென்னையிலுள்ள மண்ணடியில் உள்ள தங்க நகை வியாபாரியிடம் கொடுக்குமாறு கடத்தல் கும்பல், தங்களிடம் கொடுத்து அனுப்பியதாக அவர்கள் தெரிவித்தனர். கடத்தலின் முழுப் பின்னணி குறித்து, அதி காரிகள் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

தங்கம் விலை கடந்த சில வாரங்களாக உச்சத்தில் இருப்பதால், தங்கம் கடத்தலும் விமான நிலையத்தில் அதிகரித்து வருகிறது. இலங்கையில் இருந்து தங்கம் கடத்துவது அதிகரித்துள்ளது.

தங்கம் விலை ஏற்றம் காரணமாகக் கடத்தல் தங்கங்கள் அதிகளவில் கைமாறும் என்பதால், விமான நிலையச் சுங்கப் பிரிவு, தீவிரக் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுள்ளது.

# மிருகபலியை தடுக்க விரைவில் சட்டமூலம்

## ஜாதிக ஹெல உறுமய

மிருக பலியை தடுப்பதற்கு மிக விரைவில் பாராளுமன்றத்திற்கு சட்ட மூலமொன்றை கொண்டு வரவுள்ளதாகவும் ஹெல உறுமய தெரிவித்தது.

இது தொடர்பாக ஜாதிக ஹெல உறுமயவின் மத்திய குழு உறுப்பினரும், ஊடகப் பேச்சாளருமான நி'ாந்த ஸ்ரீ வர்ணசிங்க மேலும் கருத்து தெரிவிக்கையில்,

இந்து மதமும் மிருக பலியை அனுமதிக்கவில்லை. மிலேச்சத்தனமான காட்டுமிறாண்டித்தனமான மிருக பலியை நாம் கடுமையாக எதிர்க்கின்றோம்.

இதனை தடுப்பதற்கு ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டோம், மக்களை தெளிவுபடுத்தினோம்.

நீதிமன்றம் சென்றோம். ஆனால் முடியாமல் போய் விட்டது. எனவே இலங்கையில் மிருக பலியை தடுப்பதற்காக பாராளுமன்றத்திற்கு சட்ட மூலமொன்றை கொண்டு வரவுள்ளோம்.

மிருக பலி நடத்தப்படுவதை தடுத்து நிறுத்த வேண்டும். பொறுப்புள்ளவர்கள் இவ் விடயத்தில் தலையிட வேண்டும்.

நாட்டுக்கு ஆசி வேண்டியே மிருக பலி நடத்தப்படுவதாக முன்னேஸ்வரம் காளி கோவில் பூசகர்கள் தெரிவிக்கின்றனர். அப்படியானால் மிருக பலி இடம்பெறும் தினத்தன்று அங்கு என்ன நடக்கின்றது என்பது மக்களுக்கு தெரிய வேண்டும்.

எனவே, ஊடகவியலாளர்களை அனுமதிக்க வேண்டும். அங்கு இடம்பெறும் நிகழ்வுகளை மக்கள் தொலைக் காட்சிகள் மூலம் பார்ப்பதற்கான நடவடிக்கைகளை கோவில் நிர்வாகத்தினர் முன்னெடுக்க வேண்டும். ந்தச் சவாலை கோவில் நிர்வாகத்தினர் ஏற்றுக் கொள் ளத் தயாரா என்றும் நிஷாந்த ஸ்ரீ வர்ணசிங்க தெரிவித்தார்.

# தொ.பேயில் காதல் அழைப்பு விடுத்தவருக்கு பொலிஸ்வலை

கொள்ளுபிட்டியிலுள்ள ஹோட்டலொன்றில் பணியாற்றும் யுவதியொருவருக்கு அநாமதேய தொலைபேசி அழைப்பு விடுத்து, அந்த யுவதியை தான் காதலிப்பதாகவும் அவரை சந்திக்க விரும்புவதாகவும் கூறியதாக குற்றம்சுமத்தப்பட்ட நபர் ஒருவரை கைது செய்வதற்காக பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். அந்நபர் தனது தொலைபேசி இலக்கத்தை எவ்வாறு பெற்றுக்கொண்டார் எனத் தெரியவில்லை எனவும் வெள்வேறான ஐந்து தொலைபேசி இலக்கங்களிலிருந்து தனக்கு அழைப்பு கிடைத்ததாகவும் பொலிஸாரிடம் குறித்த மேற்படி யுவதி தெரிவித்துள்ளார்.

இத்தொலைபேசி இலக்கங்கள் தொடர்பான விபரங் களை வழங்குமாறு செல்லிடத் தொலைபேசி சேவை வழங்கும் ஐந்து நிறுவனங்களுக்கு கொழும்பு கோட்டை நீதவான் கனிஷ்க விஜேரட்ன உத்தரவிட்டார்.

# சமுர்த்தி பயனாளிகளுக்கு காசோலை வழங்கும் நிகழ்வு

சமுர்த்தி அபிவிருத்தி லொத்தர் சபையினால் குலுக்கல் முறையில் வீட்டு திட்டத்திற்கு தெரிவாகிய சமுர்த்தி பயனாளிகளுக்கு காசோலை வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்றது.

இந் நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா மற்றும் யாழ். மவாட்ட செயலாளர் சுந்தரம் அருமைநாயகம் ஆகியோரால் காசோலை வழங்கி வைக்கப்பட்டன. யாழ். மாவட்ட செயலக கேட் போர் கூடத்தில் யாழ். மாவட்ட சமுர்த்தி ஆணையாளர் எஸ். மகேந் திரன் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

யாழ். மாவட்டததின் 9 பிரதேச செயலக பிரிவுகளிலுள்ள 36 சமுர்த்தி பயனாளிகளுக்கு தலா 150,000 ரூபா வீட்டுத் திட்டத்திற்கான காசோலை வழங்கப்பட்டன.

# தமிழ்க் கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கு அக்கரைப்பற்றில் வரவேற்பு விழா

கிழக்கு மாகாணசபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்று மாகாணசபை உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட தவராஜா கலையரசனுக்கு அக்கரைப்பற்று மக்களினால் கடந்த திங்கட்கிழமை வரவேற்பளிக்கப்பட்டது.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற தேசிய காங்கிரஸின் வெற்றியாளர்களைக் கௌரவித்து அக்கரைப்பற்று மாநகர மற்றும் பிரதேசசபை மக்களால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊர்வலமும் வாக்களித்த மக் களுக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்வும் நடைபெற்றது.

அக்கரைப்பற்று இசங்கடிச்சீமை கிராம பள்ளிவாசலிலிருந்து துஆப் பிரார்த்தனையுடன் ஆரம்பித்த இதற்கான ஊர்வலம் அக்கரைப் பற்றின் முழுநகரையும் சென்றடைந்தது.

இந்நிகழ்வில் தேசிய காங்கிரஸின் தேசிய தலைவரும் உள்ளூராட்சி மாகாணசபைகள் அமைச்சருமான ஏ.எல்.எம். அதாவுல்லா, வெற்றிபெற்ற வேட்பாளர்களான எம்.எல்.ஏ.அமீர், சட்டத்தரணி ஆரிப் சம்சுதீன், எம்.எஸ். உதுமாலெப்பை, அக்கரைப்பற்று மாநகர முதல்வர் ஏ.அஹமட் சக்கி, பிரதி முதல்வர் எம்.எம். எம்.ரிஸாம், தவிசாளர் றாசீக் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

தமிழ்நாதம்
Thamil Naatham
செப்ரெம்பர் மாதம் 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை

## 1008 சிதறு தேங்காய்கள், காணாமல் போனோரை மீட்டுத் தருமா?

தமிழ் அரசியல் கைதிகள் என்று கூறப்படுவோரின் விடுதலையை வலியுறுத்தியும், காணாமல் போனோரை மீட்டுத் தரும்படி வேண்டியும் 1008 சிதறு தேங்காய்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் அடிக்கப்பட்டன. வவுனியா குருமண்காடு காளி கோவிலில் இந்த நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. சர்வதேசக் கைதிகள் தினத்தையொட்டியே ஒரு பிரார்த்தனை நிகழ்வாக இது நடாத்தப்பட்டிருக்கிறது.

யுத்த சூழ்நிலையில் காணாமல் போனவர்களை மீட்டுத் தரும்படி கோருவது மனிதாபிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினை. ஆயுத மோதலில் ஈடுபட்டபோது தமிழர்கள் கைது செய்யப்பட்டார்களா? அல்லது அவர்கள் அரசியல் கைதிகளா? என்ற பிரச்சினை ஒரு புறம் இருக்கட்டும். ஆனால் சட்டம் தனது கடமைகளை சரிவரச் செய்து இந்தக் கைதிகளை இயன்றவரை விரைவாக விடுவிக்க வேண்டும். அல்லது தண்டனை வழங்க வேண்டும் என்ற கோரிக்கை நியாயமானதுதான்.

ஆயுத மோதலில் ஈடுபட்ட இரு தரப்புகளைச் சார்ந்தவர்களும் இழப்புகளை சந்தித்திருக்கிறார்கள், காணாமல் போயிருக்கிறார்கள், கை கால்களை இழந்திருக்கிறார்கள், ஏன் உயிரைக் கூடப் பறிகொடுத்திருக்கிறார்கள். இந்த இழப்புகளைச் சந்தித்தவர்களின் உடன் பிறப்புகளும், நெருங்கிய உறவுகளும் அனுபவிக்கும் துயரம் வார்த்தைகளால் வடிக்க முடியாதவை. இலங்கையில் யுத்த காலத்தில் சுமார் பதினைந்தாயிரம் பேர் காணாமல் போயுள்ளார்கள் என்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் கமிட்டி அண்மையில் விடுத்த அறிக்கையொன்றில் தெரிவித்திருந்தது. காணாமல் போனவர்களில் 750 பேர் பெண்கள் என்றும், 1494 பேர் பிள்ளைகள் என்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க கமிட்டி தெரிவித்திருந்தது. வழமைபோல இந்த புள்ளி விபரங்களைத் தவறானது என்று அரசாங்கம் மறுதலித்திருந்தது.

யுத்தம் எங்கு நடந்தாலும், எவருக்கிடையில் நடைபெற்றாலும் உயிர் இழப்புகள், உடைமை இழப்புகள், அங்கவீனங்கள் ஆகியன ஏற்படும். ஆட்கள் காணாமல் போவார்கள், கடத்திச் செல்லப்படுவார்கள். இதுவெல்லாம் சகஜம். ஆனால் மனித உரிமைகள் சம்பந்தமான ஒப்பந்தங்கள் இவ்வாறான அக்கிரமங்கள் இடம்பெறக் கூடாதென்றே வலியுறுத்துகின்றன. இந்த நியாயங்கள் ஆயுதமேந்தியவர்களின் காதுகளுக்குள் செல்வதில்லை. ஹிட்லர், ஸ்லோபோடன் மிலோசோவிக் போன்ற மனித மிருகங்களுக்கு இத்தகைய சமாச்சாரங்கள் எல்லாம் காதுகளுக்கு ஏறாத விவகாரங்கள்.

பால்கன் நாடுகளில் இடம்பெற்ற மோதல்களின்போது 14,000 பேர் காணாமல் போனார்கள் என்று சர்வதேச மன்னிப்புச் சபை குற்றம் சாட்டியிருந்தது. ஆட்கள் காணாமல் போவதற்கு காரணமானவர்களை தண்டிக்கும்படியும் சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்தியது. யுத்தம் ஆரம்பித்து இரண்டு தசாப்தங்கள் கடந்துவிட்ட நிலையிலும் காணாமல் போனவர்களின் பிரச்சினையை கையாள்வதற்கு பால்கன் நாட்டு அரசாங்கங்களுக்கு அரசியல் உறுதிப்பாடு இல்லையென்றும் சர்வதேச மன்னிப்புச் சபை குற்றம் சாட்டியது. சர்வதேச மன்னிப்புச் சபை என்பது ஏதோ நீதி தேவதையல்ல. பக்கச் சார்பாக கருத்துக்களை வெளியிடுவதில் பலே கில்லாடி எனப் பெயர் பெற்றது இந்த மன்னிப்புச் சபை. குவாண்டனாமோ தடுப்பு முகாமில் அமெரிக்கப் படைகள் செய்த அக்கிரமங்களைப் பற்றி மௌனம் சாதித்தது இந்த மன்னிப்புச் சபை.

அப்பாவித் தமிழ் மக்களை ஆயுதம் ஏந்தியவர்கள் கொன்றது போல், அப்பாவிச் சிங்கள, முஸ்லிம் மக்களை ஆயுததாரிகள் கொன்றதையும் வன்மையாகக் கண்டிக்க வேண்டும். அதுவே மனிதாபிமானம். யுத்தத்தில் கொல்லப்பட்ட படையினரின் ஒன்பது சடலங்களை நல்லூர் கோவில் வீதியில் வைத்து மக்களுக்கு காட்சிப்படுத்தியது போன்ற சம்பவங்கள் கண்டிக்கப்பட வேண்டிய அடாவடித்தனம். இதேபோன்று அப்பாவித் தமிழர்கள் கடத்திச் சென்று கொல்லப்பட்டிருக்கிறார்கள். அதுவும் அடாடித்தனம் தான்.

மாற்றுக் கருத்துக்களை முன்வைத்ததற்காக வடக்கிலும், கிழக்கிலும் சுட்டுக் கொல்லப்பட்ட அப்பாவித் தமிழர்கள் எத்தனை பேர்? 1990ஆம் ஆண்டு அக்டோபரில் சுமார் 78 ஆயிரம் முஸ்லிம்கள் வடக்கிலிருந்து விரட்டப்பட்டார்களே, அது மனித உரிமை மீறல் இல்லையா? யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் பலர் ஆயுததாரிகளால் பலியெடுக்கப்பட்டிருக்கிறார்கள். மாற்றுக் கருத்தை முன் வைத்த ஒரேயொரு காரணத்திற்காக யாழ் பல்கலைக்கழக மாணவி செல்வி, அவரது வீட்டிலிருந்து ஆயுததாரிகளால் கடத்திச் செல்லப்பட்டாள். 1991ஆம் ஆண்டு இந்தக் கொடூரம் நிகழ்ந்தது. இன்றுவரை அவளுக்கு என்ன நடந்தது என்று எவருக்குமே தெரியாது. சர்வதேச விருது பெற்ற கவிஞர் அவர். கொடியவர்களுக்கெதிராக கொதித்தெழுந்ததால் கடத்திச் செல்லப்பட்டவர் அவர்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு 1008 சிதறு தேங்காய்களை அடித்ததால் காணாமல் போனவர்கள் மீண்டு வரப்போவதில்லை. மனிதத் துயரங்களை அரசியலாக்கும் ஓர் நடவடிக்கையாக இது இருந்தாலும் இந்த சமயச் சிறப்பு வழிபாடு, உறவுகளைப் பறிகொடுத்த அப்பாவி மக்களுக்கு ஏதோவொரு வகையில் துயரங்களை வெளிப்படுத்தும் ஒரு வடிகாலாக இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
ஆசிரியர் பீட தொலைபேசி/பக்ஸ் 021-2219505,
விளம்பரம்/விநியோகம் : 021-2219506
e-mail: tnaatham@yahoo.com

# கேணல் ஹரிகரனின் பார்வையில் இலங்கைப் பிரச்சினை

19 மே.2009 இல் ஸ்ரீலங்கா இராணுவம் 25 நீண்ட வருடங்களாக ஒரு தேசிய சோதனையாக எல்.ரீ.ரீ.ஈ யினரது கைகளில் அகப்பட்டு தத்தளித்த பிரச்சினையை முடித்து வைத்த பிறகு ஏற்பட்டுள்ள மீள் எழுச்சியில் ஸ்ரீலங்கா தன்னை அகத் தூய்மைப்படுத்தி வருகிறது. 1983இலிருந்தே ஸ்ரீலங்கா, எல்.ரீ.ரீ.ஈயினருக்கு எதிராக மூன்று கட்டப் போரை முன்னெடுத்த போதிலும், அவை ஒரு இக்கட்டான நிலையையே அதற்கு ஏற்படுத்தியிருந்தது.

இறுதி வெற்றி 2006 நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட நான்காவது கட்ட ஈழப்போரிலேயே பெறப்பட்டது. அந்த வெற்றி மிகப்பெரிய விலை கொடுத்தே பெறப்பட்டது. மில்லியன் ரூபாக்கள் பெறுமதியான உட்கட்டமைப்புகள், பொருட்கள், மற்றும் குடியிருப்புகள் என்பன இதன்போது அழிக்கப்பட்டன.

உலக அளவில் ஸ்ரீலங்காவின் வெற்றி எப்படி ஒரு உறுதியான தேசியவாத தலைமை, வலுவான, சர்வதேச வலையமைப்பை கொண்ட ஆயுதம் தாங்கிய கிளர்ச்சிக் குழுவினரை உறுதியாகத் தோற்கடிக்க முடியும் என்பதை எடுத்து விளக்குவதாக இருந்தது. ஒரு ஆற்றல்மிக்க இராணுவத் தலைமை, சோர்வுற்ற நிலையிலிருந்த இராணுவத்தை, வெற்றி பெறும் சக்தியாக மாற்றி, எட்டுக்கும் மேற்பட்ட மாவட்டங்களில் 16,000 சது.கிலோ மீற்றருக்கும் மேலான பரப்பளவு கொண்ட பிரதேசங்களை திரும்ப கைப்பற்றமுடியும் என்பது இதன்மூலம் நிரூபணமானது. எல்.ரீ.ரீ.ஈ யினர் ஜுலை 2001 இல் கட்டுநாயக்கா விமானத் தளம் மீது வியத்தகு தாக்குதல் நடத்தி 17 விமானங்களை தகர்த்ததின் மூலம் தங்கள் ஆற்றலை வெளிப்படுத்தினர். மேலும் யுத்த வெற்றி சிங்கள பேரினவாதத்தின் வெற்றிப் பெருமிதத்தின் எல்லை மீறிய உயர்ச்சி மற்றும் அடிப்படைவாத பௌத்த சக்திகள் அரசியலில் தங்கள் இடத்தை மீள்பரப்பு செய்யவும் இடமளித்தது. இது வெளிப்படுத்துவது, சிறுபான்மை இனத்தவர்களின் தீர்க்கப்படாத பிரச்சினைகள் மற்றும் அவற்றை தீர்ப்பதற்காக உலகம் கூறும் பரிந்துரைகள் என்பனவற்றை ஸ்ரீலங்கா பாதிக்கப்படத்தக்க விதமாகவே பார்க்கிறது என்பதையே.

நாடானது போரினால் சீரழிந்த வடக்கு மற்றும் கிழக்கு மற்றும் ஏனைய பகுதிகளில் மிகப் பாரிய கட்டமைப்புகளையும் மற்றும் புனர்வாழ்வு திட்டங்களையும் மேற்கொண்டிருந்தது. சட்டத்தை அமுல்படுத்தும் அதிகாரிகளும் தொடர்ந்தும் பொறுப்புக்கூறும் தன்மையற்று நடந்து கொள்கிறார்கள். சிவில் சமூகங்களையும் மற்றும் எதிர்கட்சியையும் பொறுத்த மட்டில் இந்த வரைவிலக்கணங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளது, அல்லது அவைகளுக்கு பாவமன்னிப்பு வழங்கப்பட்டு விட்டது எனக் கருத வேண்டியுள்ளது. இந்த நடவடிக்கைகள் அரசாங்கத்தின் சில சாதகமான நடவடிக்கைகளுக்கு குறிப்பாக பொருளாதாரத்தை நிர்வகித்தல் மற்றும் சுற்றுலாத்துறை வர்த்தகத்தை சீராக்குதல் போன்றவைகளுக்கு பாதிப்பாக அமையும்.

தொடரான யுத்த முயற்சிகள் நாட்டின் பொருளாதாரத்தை வற்றச் செய்துள்ளதுடன், வளர்ச்சியையும் கட்டுப்படுத்தியுள்ளன 300,000க்கும் மேலான வட மாகாண மக்கள் சகலதையும் இழந்து ஆதரவற்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள். பில்லியன் கணக்கிலான ரூபா மதிப்பிலான உட்கட்டமைப்புகள், பொதுச் சேவை வசதிகள், மற்றும் வீடமைப்புகள் யாவும் அநேகமாக திரும்பத் திரும்ப அழித்து நாசமாக்கப்பட்டுள்ளன. 90,000 பெண்கள் விதவைகளாகியுள்ளனர். போரினால் பாதிக்கப்பட்ட தாக்கம் இன்னும் பல ஆண்டுகளுக்கு ஒலித்துக் கொண்டேயிருக்கும்.

மூன்று வருட சமாதான காலத்தில் ஸ்ரீலங்காவின் செயல்பாடுகள் ஒரு கலவையான வெற்றி என்றே கூறவேண்டும். புனர்வாழ்வு முயற்சிகள் ஒரு பகுதியளவே வெற்றியடைந்துள்ளன, ஏனெனில் அதில் வெளிப்படைத்தன்மை மற்றும் சிறுபான்மை தமிழர்களின் அபிலாஷைகளின் உணர்வு என்பன குறைவாகவே உள்ளன. போருக்கான மூல காரணம் - சிறுபான்மை தமிழர்களிடம் காணப்படும் சமத்துவமற்ற உணர்வு - இன்னமும் தீர்க்கப்படாமலேயே உள்ளது.

இவை அனைத்துக்கும் மையமாக இருப்பவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச அவர்கள். இராணுவ வெற்றியின் தலைமைச் சிற்பியான இவர், முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா அவர்களை தேர்தலில் தோற்கடித்து தேசிய ரீதியாக தத்துப் பிள்ளையாக மாறிய பின்னர், யாராலும் சவால் விடுக்க முடியாத தேசிய தலைவராக உருவெடுத்துள்ளார். 2010ல் ராஜபக்ச தனது இரண்டாவது ஆறு ஆண்டு பதவிக் காலத்துக்கான ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தான் பெற்றிருந்த புகழை கணிசமான அளவு பயன்படுத்தினார். அவர் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் (யு.பி.எப்.ஏ) தலைவராக இருந்தவேளை முன்னெப்பொழுதும் இல்லாத வகையில் 2011 பாராளுமன்றத் தேர்தலில் அந்தக் கட்சி மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெறும்படியாக தன்னை வலுப்படுத்திக் கொண்டார். பாராளுமன்றத்தில் தனக்கிருந்த இந்த மகத்தான வலிமையை பயன்படுத்தி அரசியலமைப்பில் ஜனாதிபதியின் பதவிக் காலம் இரண்டு தடவைகள் மட்டுமே என்று கட்டுப்படுத்தியிருந்த முன்னைய திருத்தத்தை அகற்றும் வகையில் 18வது அரசியலமைப்பு திருத்தம் ஒன்றை மேற்கொண்டார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது இரண்டு சகோதரர்களான பசில் மற்றும் கோத்தபாயா என்பவர்களை தேசிய அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு என்பனவற்றில் தனது திட்டங்களை நிறைவேற்றுவதற்காக பயன்படுத்திக் கொண்டுள்ளார் தனது கூட்டணியில் உள்ள 17 கட்சிகளுக்கும் அமைச்சரவையில் இடம் கொடுத்து அவர்கள் பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கவுடன் சேரும் எண்ணத்தை தோன்றவிடாமல் முன்னெச்சரிக்கையாக தடுத்து வருகிறார். அவர் ஏற்கனவே சிங்கள இடதுசாரி கட்சியான ஜே.வி.பி.யின் அங்கத்தவர்களை தனது கூடாரத்துக்குள் கவர்ந்து இழுத்து அதனையும் நடுநிலையாக்கியுள்ளார். அதன்படி அவர் இப்பொழுது யாராலும் வெல்ல முடியாத, அதிகாரத்தை மத்தியில் கொண்டுள்ளவராக விளங்குகிறார். உண்மையில் இன்று நாட்டில் நாளுக்கு நாள் வெளிப்படையாக காண்பிக்கப்படும் விவகாரங்கள் மூலம் இது தெளிவாகிறது. எனவே இந்தியா - ஸ்ரீலங்கா எதிர்கால உறவுகளை கணிப்பிடும்போது, அவரது அரசியல் மற்றும் ஆட்சி நடத்தும் பாணி என்பனவற்றை நன்கு விளங்கிக் கொள்வது அவசியம்.

2010ஆம் ஆண்டு முதல் ராஜபக்ச தனது இரண்டாவது பதவிக் காலத்தில் உள்ளார். 2005ஆம் ஆண்டு ஐ.தே.க.வை சேர்ந்த ரணில் விக்கிரமசிங்கவை மிகச் சிறிய பெரும்பான்மை மூலம் தோற்கடித்து அவர் ஜனாதிபதியாக தெரிவானார். எல்.ரீ.ரீ.ஈ க்கு நன்றி சொல்லும் விதமாக அதன் தயவுடன், அதன் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் நடந்த தேர்தல்களை பகிஷ்கரிக்கும் செயல்பாடுகள் காரணமாக விக்கிரமசிங்காவுக்கு தமிழ் வாக்குகள் கிடைப்பதில் இழப்பு உண்டானது,

ஜனாதிபதி ராஜபக்ஷ தனது தேர்தல் பிரச்சாரங்களில், விக்கிரமசிங்க பிரதமராக இருந்தபோது ஏற்படுத்தப்பட்ட 2002 சமாதான நடவடிக்கைகள் பற்றி மக்களிடம் வளர்ந்திருந்த மாயத் தோற்றத்தை தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார். திறமையற்ற சமாதான நடவடிக்கைகளுக்கு ஒரு முடிவுகட்டி எல்.ரீ.ரீ.ஈயினரை ஒரு வழிக்கு கொண்டுவருவதாக அவர் சபதம் ஏற்றிருந்தார். அவருக்கு முன்பு பதவியிலிருந்தவர்கள் எல்.ரீ.ரீ.ஈ அரசுக்கு எதிராக விடுக்கும் சவால்கள் யாவற்றையும், சுயாட்சி கோரிப் போராடும் தமிழ் இனத்தவர்களின் போராட்டத்தின் ஒரு பகுதியாகவே கருதினார்கள். எனவே அவர்களது அணுகுமுறை இராணுவ நடவடிக்கை மற்றும் தமிழ் சிறுபான்மையினருடன் அதிகாரத்தை சமமாக பகிர்ந்தளிக்கும் பரந்த விடயத்துக்கு தீர்வுகாண்பதை இலக்காக கொண்டு நடத்தப்படும் சமாதான பேச்சு வார்த்தைகள் ஆகிய இடையே அலைந்தது.

தனது இரண்டாவது பதவிக் காலத்துக்கான ஜனாதிபதி தேர்தலை, ஒரு வருடம் முன்பாகவே 2010 இல் நடத்தினார். இதற்கிடையில் எதிர்கட்சிகளின் பொது வேட்பாளராக தேர்தலில் போட்டியிட்ட அவரது எதிராளியான ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு எதிரான முயற்சிகள் இடம்பெற்றன. தேர்தல் சமயத்தில், வாக்களிப்பு முடிவடைவந்து கொண்டிருக்கும் போதே அவர்மீது ஊழல் குற்றச்சாட்டுகள், சேவையில் உள்ளபோதே அரசியலில் ஈடுபட்டமை, அரசாங்கத்தை கவிழ்க்க சதி செய்தமை, மற்றும் இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களுக்கு அடைக்கலம் கொடுத்தமை போன்ற பல வழக்குகள் அவர் மீது தொடரப்பட்டன.

இதனால் ஜெனரல் தனது பதவித் தரங்களை இழந்ததோடு அவருக்கு இரண்டரை வருட சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.

# யாழ்ப்பாணம் புற்றுநோய் வைத்தியசாலைக்கு நாளை சனிக்கிழமை அடிக்கல் நாட்டல்

யாழ்ப்பாணம் புற்றுநோய் வைத்தியசாலைக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நாளை 15 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளதென யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் அலுவலக வட்டாரத்தினர் தெரிவிக்கின்றனர்.

கடந்த ஆண்டு யாழ்ப்பாணத்தில் புற்றுநோய் வைத்தியசாலை அமைக்கவென தென்னிலங்கையில் உள்ள தெய்வேந்திரமுனையிலிருந்து வடக்கிலுள்ள பருத்தித்துறைமுனை வரையான நடைபயணத்தின் மூலம் பணத்தை சேகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இந்தப் பணம் சேகரிக்கப்பட்டு ஒரு வருடம் நிறைவடையும் நிலையிலும் புற்றுநோய் வைத்தியசாலை அமைப்பதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படாததுடன் குறிப்பிட்ட நிதியும் உரியவர்களின் கைகளை சென்றடையவில்லையென்ற தகவலும் பரவலாகக் கசியத் தொடங்கியது.

இந்த நிலையில் நாளை புற்றுநோய் வைத்தியசாலைக்கான கட்டடம் அடிக்கல் நாட்டப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காணாமல்போன மீனவர் கண்டுபிடிக்கப்பட்டார்

வல்வெட்டித்துறை

பொலிகண்டி, சின்னாவெளியைச் சேர்ந்த தேவசகாயம் துரைராசா என்பவர் கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை மூன்று மணியளவில் மீன்பிடிக்கக் கடலுக்குச் சென்றவர் மறுநாள் வரை வீடு திரும்பாததால் உறவினர்கள் அவரைத் தேடத் தொடங்கினர்.

இவர் கடலுக்கு சென்ற படகு ஓட்டையானதால்,

படகு மூழ்கும் நிலைமையில் சிரமப்பட்டு திக்கம் கடற்கரைப் பகுதியைச் சென்றடைந்திருக்கிறார்.

ஊர் மக்களும் படையினரும் இணைந்து இவரைத் தேடியதில் புதன்கிழமை மாலை குறித்த மீனவர் கண்டு பிடிக்கப்பட்டு வீட்டுக்கு அழைத்து வரப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# கூடங்குளம் அணு உலையை மூடு! பொலிஸாரைத் திருப்பி அழை!

## சீரங்கத்துக்கு வந்த ஜெயலலிதாவுக்கு கறுப்புக் கொடி!

திருச்சி விமான நிலையத்திலிருந்து சீரங்கத்துக்கு ஜெயலலிதா வந்து கொண்டிருந்தபோது, வரும் வழியில் டோல்கேட்டில் கறுப்புக் கொடிகளுடன் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள் மக்கள் கலை இலக்கியக் கழகம், பெண்கள் விடுதலை முன்னணியினர்.

போராட்டக்காரர்களை அ.தி.மு.க. வினரும், பொலிசாரும் தடுத்து அகற்றினர் என்றும் 25 இற்கும் மேற்பட்டோரை பொலிசார் கைது செய்தனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கூடங்குளம் இடிந்தகரை மக்களுடைய போராட்டத்தை ஆதரித்தும் ஜெயலலிதா அரசின் பொலிஸ் ஆட்சியை எதிர்த்தும் தங்களது போராட்டம் தொடரும் என்று ம.க. இ.கவும் அதன் தோழமை அமைப்புகளும் அறிவித்திருக் கின்றனர்.

# போனஸ் ஆசனங்களுக்கான பெயர்களை முன்வைக்கவும்

## - தேர்தல்கள் செயலகம்!

கிழக்கு, சப்ரகமுவ மற்றும் வடமத்திய மாகாண சபைகளின் போனஸ் ஆசனங்களுக்காக நியமிக்கப்பட்டுள்ள உறுப்பினர்களின் பெயர்களை முன்வைக்குமாறு தேர்தல்கள் செயலகம் அறிவித்துள்ளது.

இந்த மாதம் 18ஆம் திகதிக்கு முன்னர் அது தொடர்பான விபரங்களை அறியத்தருமாறு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளருக்கு அறிவித்துள்ளதாக மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை மூன்று மாகாண சபைகளுக்கும் தெரிவாகியுள்ள உறுப்பினர்களின் பெயர்களை வர்த்தமானியில் அறிவிக்கும் நடவடிக்கையில் தாமதம் ஏற்பட்டுள்ளது. உறுப்பினர்களின் சொத்துக்கள் மற்றும் உடைமைகள் தொடர்பான விபரங்களை சமர்ப்பிக்கும் வரை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கும் தாமதம் நிலவியுள்ளதாக மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்துள்ளார். திருகோணமலை மாவட்டத்தில் மாத்திரமே இதுவரை சொத்துக்கள் மற்றும் உடைமைகள் குறித்த விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் திணைக்களம் குறிப்பிடுகின்றது.

வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண சபைகளுக்கு தெரிவாகியுள்ள சிலரது சொத்துக்கள் மற்றும் உடைமைகள் தொடர்பான விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

அனைவரினதும் இந்த விபரங்கள் கிடைக்கும்வரை வர்த்தமானியில் பிரசுரிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதென மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கால்நடை வளர்ப்போருக்கு சமூக நலனிலும் அக்கறை வேண்டும் விவசாயிகளுக்கு இடைஞ்சல் ஏற்படுத்தக் கூடாது

கால்நடை வளர்ப்போர் சமூக நலனில் அக்கறையுடையவர்களாக செயற்படும் போதே விவசாயத்தின் மூலம் எமது தேசம் தன்னிறைவடையும் என ஈ.பி.டி.பியின் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) தெரிவித்துள்ளார்.

தென்மராட்சி பிரதேசத்தில் விவசாயச் செய்கையை மேம்படுத்தும் வகையில் கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்துவதற்கான விசேட கலந்துரையாடல் தென்மராட்சி பிரதேச செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் திருமதி அஞ்சலிதேவி சாந்தசீலன் தலைமையில் நடைபெற்றது. இதன் போதே பாராளுமன்ற உறுப்பினர் உதயன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், கட்டாக்காலி கால்நடைகளைக் முழுமையாக கட்டுப் படுத்த கால்நடை வளர்ப்போர் சமூக நலனில் அக்கறையுடையவர்களாக செயற்படும் போதே அது சாத்தியமாகும்.

விவசாயச் செய் கையை மேம்படுத்த கால்நடை வளர்ப் போர் தமது முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதன் மூலமே விவசாயத்தினூடு எமது தேசம் தன்னிறைவடையும் என அவர் தெரிவித்தார்.

# தொண்டைமானாற்றில் பஸ் தீ வைப்பு, மூவருக்கு விளக்கமறியல்

வல்வெட்டித்துறை

தொண்டைமானாற்றில் பஸ்ஸொன்று தீவைத்து எரிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட நால்வர் நேற்று பருத்தித்துறை நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர். இவர்களில் மூவரை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

# பாதுகாப்புப் பரிந்துரைகள் அமுல்படுத்தப்படவில்லை

கூடங்குளம் அணு மின் நிலைய பாதுகாப்பு அம்சங்கள் குறித்து, இந்திய அணு சக்தி ஒழுக்காற்று ஆணையம் நியமித்த குழு சமர்ப்பித்த அனைத்து பரிந்துரைகளும் அமுல்படுத்தப்படும் என்று இந்திய அணு சக்தி ஆணையத்தின் முன்னாள் தலைவர் எம்.ஆர். ஸ்ரீநிவாசன் கூறினார்.

கூடங்குளம் அணு மின்நிலையம் குறித்த சர்ச்சை தொடரும் நிலையில், இந்திய அணு சக்தி ஒழுக்காற்று ஆணையம், ஜப்பானின் புக்குஷிமா அணு மின் நிலைய விபத்தைத் தொடர்ந்து, இந்திய அணு மின் நிலையங்களில் பாதுகாப்பு அம்சங்களை வலுப்படுத்துவது குறித்து ஆராய்ந்து, சமர்ப்பித்த அறிக்கையில், கூடங்குள்ம் குறித்து, 17 பரிந்துரைகளை அளித்தது. இதில் இது வரை ஆறு பரிந்துரைகள் மட்டுமே அமுல்படுத்தப்பட்டுள்ளன என்று அந்த ஆணையமே, சென்னை உயர்நீதி மன்றத்தில் கூறியிருக்கிறது. மீதமுள்ள 11 பரிந்துரைகளையும் அமுல்படுத்திய பிறகே, இந்த அணு மின் நிலையம் தொடங்கப்பட வேண்டும் என்று இந்த மின் நிலையத்தை எதிர்ப்பவர்கள் வாதிடுகிறார்கள்.


ஆனால் இந்தப் பரிந்துரைகள் ஒவ்வொன்றுக்கும் அவை எந்தக் கட்ட்த்தில் அமுல்படுத்தப்பட வேண்டும் என்பதற்கான காலக்கெடு இருக்கிறது. அந்த காலக்கிரமப்படி இவை அமுல்படுத்தப்படும் என்று ஸ்ரீநிவாசன் கூறினார்.

இந்தப் பரிந்துரைகள் அனைத்தும் அமுல்படுத்தப்படும் என்று கூறிய அவர், உலகெங்கிலும் உள்ள அணு உலைகைல் இப்படித்தான் பாதுகாப்பு நடைமுறைகள் அமுல் படுத்தப்படுகின்றன என்றார்.

# கூடங்குளம் பிரச்சினை: ஒப்பந்தம் விரைவில்

தமிழகத்திலுள்ள கூடங்குளம் அணு மின்சக்தி நிலையம் இன் னும் சில வாரங்களில் இயங்கவுள்ளதால் அதற்கு முன்னதாகவே இலங் கையின் பாதுகாப் புத் தொடர்பாக இரு தரப்பு ஒப்பந்தம் ஒன்றினை இலங்கையும் இந்தியாவும் கைச்சாத்திடவுள்ளன.

இந்த இரு தரப்பு ஒப்பந்தம் தொடர்பான இறுதி முடிவுகளை மேற் கொள்வதற்காக இலங்கை அதிகாரிகள் குழுவொன்று அடுத்த மாதம் புதுடில்லி செல்லவுள்ளது.



மேலைப்புலோலி மலையந்தோட்டம், தம்பசிட்டி வீதியிலுள்ள ஸ்ரீமுருகன் ஆலய கும்பாபிஷேகம் கடந்த 29ஆம் திகதி இடம்பெற்றது. மேற்படி ஆலயத்தின் பிரதம குருக்களான சிவஸ்ரீ நாககலாதரக் குருக்கள் ஆலய பரிபாலன சபையினர் சார்பாகப் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுவதையும், ஆலயத்தில் முகப்புத் தோற்றத்தையும், கும்பாபிஷேக நிகழ்வின்போது சுவாமி வீதிவலம் வருவதையும் படங்களில் காணலாம். சைவசித்தாந்தப் பண்டிதரும், சைவப் புலவருமான சிவஸ்ரீ நாககலாதரக் குருக்கள், கடந்த வருடம் இடம்பெற்ற மேல்மாகாண சாகித்திய விழாவில் சாகித்திய விருது பெற்றவரும் ஆவார். குருக்கள் அம்பன் அமெரிக்க மிஷன் தமிழ் கலவன் பாடசாலையில் ஆசிரியராகப் பணியாற்றுகிறார்.



# இலங்கை பா

பாராளுமன்ற அலுவல்களின் ஒழுங்குபாராளுமன்ற அலுவலானது 19 ஆம் நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளுக்கமைய பின்வரும் ஒழுங்கில் நடாத்தப்படும்.

1.புதிய உறுப்பினர் ஒருவரால் செய்யப்படும் உத்தியோகபூர்வ சத்தியப்பிரமாணம் அல்லது உறுதிப்பிரமாணம்இது கௌரவ சபாநாயகரினால் நடத்தி வைக்கப்படும்.

2.ஜனாதிபதியின் செய்திகள்

ஜனாதிபதியிடமிருந்து வந்த செய்திகள் கௌரவ சபாநாயகரால் அல்லது பிரதிச் சபாநாயகரால் அல்லது குழுக்களின் பிரதித் தவிசாளரால் அல்லது தலைமைதாங்கும் உறுப்பினரால் வாசிக்கப் படும்.

3.சபாநாயகரின் அறிவித்தல்கள்

சட்ட மூலங்கள் பற்றிய உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கள், சட்ட மூலங்களின் உறுதிப்படுத்தல், பாராளுமன்ற உறுப்பினர்களின் மரணம், தவிசாளர் குழாமில் உள்ள உறுப்பினர்களின் பெயர்கள், குழுக்களின் நியமனம் போன்ற பாராளுமன்றத்துடன் தொடர்புடைய அனைத்து விடயங்கள் பற்றிய அறிவித்தல்களும் கௌரவ சபாநாயகரால் மேற்கொள்ளப்படும்.

4.பத்திரங்கள் சமர்ப்பித்தல்

கௌரவ சபாநாயகரால் அல்லது ஓர் அமைச்சரால் அல்லது ஒரு பிரதி அமைச்சரால் மட்டுமே பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட முடியும்.

5.குழுக்களின் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்

பாராளுமன்றக் குழுக்களின் அறிக்கைகளை அந்தந்தக் குழுக் களின் தவிசாளர் சமர்ப்பிப்பார். ஆலோசனைக் குழுக்களின் அறிக்கைகள் அந்தந்த விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் சமர்ப்பிக்கப்படலாம்.

6. மனுக்கள்

பிரசைகள் தமது நிருவாக ரீதியான இடர்ப்பாடுகளுக்குப் பரிகாரம் தேட, பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருடாகப் பாரா ளுமன்றத்திற்கு மனுக்கள் சமர்ப்பிக்கலாம். அவ்வாறான மனுக்கள் பரிசீலனைக்காகப் பொது மனுக்கள் குழுவிடம் சமர்ப்பிக்கப்படும்.

7. கேள்விகள்

கேள்வி நேரத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரதம அமைச் சரிடமோ அல்லது யாரேனும் ஓர் அமைச்சரிடமோ பொது விடயங் கள் தொடர்பாக குறித்த அமைச்சின் கீழ்வரும் விடயங்கள் மற் றும் செயற்பாடுகள் தொடர்பில் வாய்மூல வினாக்களை முன் வைக்கலாம். உறுப்பினர் ஒருவர் நாளொன்றுக்கு மூன்று வாய்மூல வினாக்களை மட்டுமே கேட்கமுடியும். வினாவுக்கான நேரம் பி.ப. 01.00 முதல் பி.ப. 02.00 வரையாகும்.

8.அனுதாபப் பிரேரணைகள்

மரணமடையும் பாராளுமன்ற உறுப்பினர்கள் குறித்து அனுதாபப் பிரேரணைகளை நிறைவேற்றும் பொருட்டுச் சபையினில் ஒரு நாளை ஒதுக்குவது பாராளுமன்ற நடைமுறையாகும். அனுதாபப் பிரேரணைகளுக்குக் குறித்த கால எல்லை எதுவும் கிடையாது.

9. சமுகமளிக்காதிருப்பதற்கு அனுமதி கோரும் பிரேரணைகள்

தொடர்ச்சியாக மூன்று மாத காலத்திற்கு விடுப்பை வேண்டும் யாரேனும் ஓர் உறுப்பினர் அதற்கான சபையின் அனுமதியைப் பெறவேண்டும். அரசியலமைப்பின் உறுப்புரை 66(ஊ) இன் கீழ், சமுகமளிக்காதிருப்பதற்கு அனுமதி கோரும் பிரேரணையொன்று குறித்த உறுப்பினரின் வேண்டுகோளின் பேரில் யாரேனும் ஓர் உறுப்பினரால் சபையில் பிரேரிக்கப்படலாம். இப்பிரேரணை அமைச்சர் ஒருவரால் சபையில் பிரேரிக்கப்படாதவிடத்து, வழிமொழியப்படல் வேண்டும்.

10. அமைச்சு சம்பந்தமான கூற்றுக்கள்

பொது முக்கியத்துவம் மற்றும் கொள்கை தொடர்பான விடயங்கள் பற்றியும், தமக்குப் பொறுப்பளிக்கப்பட்ட அமைச்சு சம்பந்தமாக, சபையில் முன்வைக்கப்பட்ட தவறான தக வல் ஒன்றை சபையின் முன் திருத்துவதற்கும் அமைச்சு சம்பந்தமான கூற்றுக்கள் அமைச்சர்களால் விடுக்கப்படும். அமைச்சு சம்பந்தமான இக் கூற்றுக்களை மேற்கொள்ள கௌரவ சபாநாயகரின் முன் அனுமதி தேவை. கூற்றினை விடுக்கும் வேளையில் கேள்விகள் எதுவும் அனுமதிக்கப்படமாட்டா. ஆனால் அடுத்து வரும் ஒரு தினத்தில் இது பற்றிய விவாதமொன்றுக்கு அனுமதியளிக்கப்படலாம்.

11.தனிப்பட்ட விளக்கங்கள்

சபையில், தனக்கெதிரான குற்றச்சாட்டொன்று கொண்டுவரப்படுகையில் அல்லது பாராளுமன்ற நிகழ்வு பத்திரிகையில் தவறான விதத்தில் அறிக்கை செய்யப் படுகையில், எவரேனும் ஓர் உறுப்பினர் தனிப்பட்ட விளக்கமொன்றை அளிக்க முடியும். தனிப்பட்ட விளக் கங்கள் பாதிக்கப்பட்ட உறுப்பினரால் நேரடியாக அளிக்கப்பட வேண்டும் என்பதுடன் அவ்வாறான விளக் கங்கள் அளிக்கப்பட முன்னர், உறுப்பினர்கள் கௌரவ சபாநாயகரின் அனுமதியைப் பெறவும் வேண்டும்.

12.சிறப்புரிமைக் கேள்விகள்

19ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் உறுப்பினர் ஒருவர் உரிய அறி வித்தலைக் கௌரவ சபாநாயகரிடம் அளித்ததன் பின்னர் சிறப்புரிமை விடயம் ஒன்றைச் சபையில் எழுப்பலாம். ஆயினும் பாராளுமன்ற சிறப்புரிமைகள் குறித்த அவசர பிரேரணையொன்று மற்றெல்லா அலுவல்களையும் விட முன்னிலை வகிக்கும். சிறப்புரிமை விடயமொன்றை எழுப்புவதற்காக சபையின் நடைமுறைகள் எந்த ஒரு நேரத்திலும் குறுக்கீடு செய்யப்படலாம்.

13.பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போதான முன்னறிவித்தல் தேவைப்படாத பிரேரணைகள் அமர்வு நேரங்களில் மாற்றம் செய் தல், நிலையியற் கட்டளைகளை இடைநிறுத்தல் மற்றும் சிறப்பு ரிமை விடயமொன்றைச் சிறப்புரிமைகள் குழுவுக்கு சமர்ப்பித்தல் போன்ற பிரேரணைகளுக்கு முன் அறிவித்தல் தேவையில்லை. அத்துடன் அவ்வாறான பிரேரணைகள் பாராளுமன்றச் சபைத் தலைவரால் அல்லது அரசாங்க முதற்கோலாசானால் அல்லது அமைச்சரவை அமைச்சர் ஒருவரால் பிரேரிக்கப்படவேண்டும்.

14.பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போதான முன்னறிவித்தல் தேவைப்படும் பிரேரணைகள், பொதுவாக, பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது சமர்ப்பிக்கப்படும் சட்ட மூலங்களுக்கு அறி வித்தல் தேவை. அரசாங்கச் சட்ட மூலங்கள் தனியார் உறுப்பி னர் சட்டமூலங்களுக்கு முன்னதாகச் சமர்ப்பிக்கப்படும்.

15.பொது அலுவல்கள்

அறிவித்தல் வழங்கப்பட்டதும் குறித்த ஒரு தினத்திற்கான ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டதுமான அனைத்து விடயங்களும் "பொது அலுவல்களில்" அடங்கும். சட்ட மூலங் கள், பிரேரணைகள், ஒழுங்கு விதிகள், குறைநிரப்பு மதிப்பீடுகள் மற்றும் தனியார் உறுப்பினர் சட்டமூலங்கள் போன்றவை இவற் றில் அடங்கும்.

**பாராளுமன்ற அமர்வு நாட்களும் நேரங்களும்**

**பாராளுமன்ற அமர்வு நாட்கள்.**

7 ஆம் இலக்க நிலையியற்கட்டளையின்படி, ஒரு மாதத்தின் முதலாவது ஞாயிற்றுக் கிழமையின் பின்னர் ஆரம்பிக்கும் வாரத்தி லிருந்து ஒன்று விட்டு ஒரு வாரம் பாராளுமன்றம் கூடவேண்டும். ஆகவே, ஒரு மாதத்தின் முதலாம், மூன்றாம் வாரங்களில் வரும் செவ்வாய், புதன், வியாழன், வெள்ளிக் கிழமைகளில் பாராளு மன்ற அமர்வுகள் இடம்பெறும்.

ஆயினும், நிலையியற் கட்டளை இலக்கம் 70 இன் படி, ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தை பரிசீலிக்க பாராளுமன்றம் இருபத் தாறு நாட்கள் கூட வேண்டும். எனினும், சபையில் பிரேரிக்கப் பட்டு, இணக்கம் காணப்படும் பட்சத்தில் இவ்வெண்ணிக்கை குறைக்கப்படலாம்.

**பாராளுமன்ற அமர்வு நேரங்கள்**

2010 ஜூலை 09ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் நிறை வேற்றப்பட்ட ஒரு பிரேரணைக்கு அமைவாக, 2010 ஜூலை 20ஆம் திகதியிலிருந்து தற்போது பாராளுமன்றத்தின் அமர்வு நேரங்கள் பி.ப. 1.00 மணி தொடக்கம் பி.ப. 7.30 மணி வரை யுமாகும். எனினும், 2011 ஏப்ரல் 07ஆம் திகதியன்று நிறை வேற்றப்பட்ட ஒரு பிரேரணைக்கு அமைவாக, 2011 ஏப்ரல் 08ஆம் திகதியிலிருந்து வெள்ளிக்கிழமைகளில் பாராளுமன்ற அமர்வு பி.ப. 1.30 மணிக்கு ஆரம்பமாகிறது.

சபையில் ஏற்பட்ட ஓர் உடன்பாட்டையடுத்து, அமர்வுகள் பின் வரும் நேர அட்டவணையின்படி இடம்பெறுகின்றன.

(செவ்வாய், புதன், மற்றும் வியாழக்கிழமைகளில்)

| | | | |
|---|---|---|---|
| பி.ப. 1.00 | முதல் | பி.ப. 2.00 | - வாய் மூல விடைக்கான வினாக்கள் |
| பி.ப. 2.00 | முதல் | பி.ப. 6.30 | - சபையின் பிரதான அலுவல்கள் |
| பி.ப. 6.30 | முதல் | பி.ப. 7.30 | - ஒத்திவைப்பு வேளையின் போதான பிரேரணை |

(வெள்ளிக்கிழமைகளில்)

| | | | |
|---|---|---|---|
| பி.ப. 1.30 | முதல் | பி.ப. 2.30 | - வாய் மூல விடைக்கான வினாக்கள் |
| பி.ப. 2.30 | முதல் | பி.ப. 6.30 | - சபையின் பிரதான அலுவல்கள் |
| பி.ப. 6.30 | முதல் | பி.ப. 7.30 | - ஒத்திவைப்பு வேளையின் போதான பிரேரணை |





**பாராளுமன்ற விவாதங்களுக்கா**
**விதிகளின் முக்கியத்துவம் எ**

பாராளுமன்றத்தின் முறையான
செய்யும் முகமாக விதிகளும் ந
பட்டுப் பின்பற்றப்படுகின்றன. இ
வதன் மூலம் சபையில் விவாத
யும். சட்டங்களை நிறைவேற்றுவ
திட்டத்தை அங்கீகரிப்பதிலும் ஏ
மன்ற உறுப்பினர்கள் பாராளுமன்
வேண்டியிருக்கின்றது. பாராளுமன்
எல்லா நோக்குகளும் க துக்க
படிவங்களும் ஓர் ஒழுங் கிர
அதன் பின்னர் ஏற்றுக் கொள்ள
கின்றன.

பாராளுமன்றத்தில் உரையாற்
விதிகள் எவை?

பேசும் உறுப்பினர் எப்போதும்
வேண்டும். அவர் பேசும்போது எ
னர்கள், தொடர்பற்ற விடயங்கள
கொள்ள வேண்டும். கூறியது கூ
கள் வேண்டிக் கொள்ளப்படுகிற
நோக்கங்களை மற்ற உறுப்பினர்
மன்ற விசாரணையில் உள்ள வி
கூடாது. எந்தப் பிரேரணை மீதும்
ரணை பிரேரித்தவரைத் தவிர்ந்த
வைக்கு மேல் பேச அனுமதிக்க
யின் குழுநிலையில் ஓர் உறுப்பி
அனுமதிக்கப்படலாம். அத்துடன்
வர் சபையில் அதற்கான பிரேரண
விளக்கத்தைச் செய்ய உரித்துள
இந்த விளக்கங்களிலே விவாத
பாராளுமன்றத்திற்கு ஒவ்வாத வ
இருப்பதற்கு உறுப்பினர்கள் வி

உரையாற்றாத உறுப்பினர்க

உறுப்பினர்கள் கண்ணியமான
பதுடன், அவசியமில்லாமல் சபை
யின் உள்ளே புதினப் பத்திரிகை
என்பனவற்றை வாசிக்க அவர்க
அவர்கள் அமைதியாக இருப்பது
கொண்டிருப்பவர் வழிவிட்டாலொ
சபையில் புகைத்தல் தடை செ
தங்கள் வாதங்களை விளக்கிக்
யும் கொண்டு வர முடியாது.
ஒலிப்பதிவு உபகரணங்களும் ச

விவாதங்கள் தொடர்பான ச
யாவை?

இழிவான அல்லது வெறுக்கத்
பெறுமாறு உறுப்பினரை சபாநாய
சொற்களை அதிகாரபூர்வப் பதி

# ராளுமன்ற செயற்பாடுகள்



ன
**ான விதிகள்**
**ன்ன?**
செயற்பாடுகளுக்கு வகை
டைமுறைகளும் உருவாக்கப்
இவ்விதிகளை நடைமுறைப்படுத்து
ங்களின் தரத்தை உயர்த்த முடி
வதிலும், வருடாந்த வரவு செலவுத்
ஏனைய விடயங்களிலும் பாராளு
ன்ற விவாதங்களில் பங்குபற்ற
ன்ற முறைமையில், சபையில்
களும் [illegible]ணங்களும் கருத்துப்
ரமத்தில் [illegible]ழுப்பப்படுகின்றன.
ப்படக்கூடிய முடிவுகள் எட்டப்படு

ற்றும் உறுப்பினர்களுக்கான

சபாநாயகரையே விளிக்க
எழுந்து நிற்க வேண்டும். உறுப்பி
ளைப் பேசுவதைத் தவிர்த்துக்
லில் ஈடுபடக்கூடாது என அவர்
றார்கள். உறுப்பினர்கள் முறையற்ற
ர்கள் மீது சாட்டக்கூடாது. நீதி
விடயங்களைப் பற்றியும் பேசக்
ம் அல்லது சட்டமூலம் மீதும் பிரே
த மற்ற உறுப்பினர்கள் ஒரு தட
கப்படமாட்டார்கள். ஆனால், சபை
பினர் ஒரு தடவைக்கு மேல் பேச
ன் பாதிக்கப்பட்ட உறுப்பினர் ஒரு
ணை இல்லாதவிடத்தும் தனிப்பட்ட
டையவராயிருக்கிறார். ஆனாலும்
ங்கள் அனுமதிக்கப்படுவதில்லை.
வார்த்தைகளைப் பாவியாது
ிசேட கவனம் எடுக்க வேண்டும்.
களுக்கான விதிகள் எவை?
ன முறையில் சபையில் பிரவேசிப்
பையைக் கடக்கவும் கூடாது. சபை
கைகள், புத்தகங்கள், கடிதங்கள்
கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.
துடன் சபையில் உரையாற்றிக்
லாழிய அவரைக் குழப்பவும் கூடாது.
செய்யப்பட்டுள்ளது. உறுப்பினர்கள்
க் காட்டப் பல்வேறு பொருட்களை
கையடக்கத் தொலைபேசிகளும்
சபையினுள் அனுமதிக்கப்படமாட்டா.
சபாநாயகரின் அதிகாரங்கள்

கத்தக்க குறிப்புக்களை வாபஸ்
ாயகர் கேட்கலாம். விரும்பத்தகாத
திவுகளிலிருந்து (ஹன்சாட்) நீக்கவும்

சபாநாயகரால் முடியும். சபை நடவடிக்கைகளைக் குழப்புவதில் அல்லது தடையேற்படுத்துவதில் தொடர்ந்து ஈடுபடும் உறுப்பினரை அவர் எச்சரிக்கலாம். குழப்பும் உறுப்பினரை சபையிலிருந்து அகற்றும்படி படைக்கலச் சேவிதரைக் கேட்டுக் கொள்ளலாம் அல்லது பெயர் குறிப்பிடலாம். ஓர் உறுப்பினர் சில வாரங்களுக்குச் சபையிலிருந்து தடுத்து வைக்கப்படலாம். ஓர் உறுப்பினருடைய நடத்தை முற்றும் ஒழுங்கீனமானதாக இருந்தால் சபாநாயகர் அவரை நாளின் மிகுதியான அமர்வில் பங்குபற்றாது தடை செய்து பாராளுமன்றத்திலிருந்து உடனடியாக வெளியேறுமாறு கட்டளையிடலாம்.

உரையாற்றுவோரின் நிரலைத் தயாரிப்பவர் யார்?

அரசாங்க மற்றும் எதிர்க்கட்சி முதற்கோலாசான்களே உரையாற்றுவோரின் நிரல்களைத் தயாரிப்பதற்குப் பொறுப்பாக இருக்கின்றார்கள். இந்த நிரல்கள் முன்னதாகவே சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டுச் சபாநாயகர் அந்த உறுப்பினர்களைச் சபையில் பேசும்படி அழைப்பார்.

ஒழுங்குப் பிரச்சினைகள் என்றால் என்ன?

சபை நடவடிக்கைகளில் ஒழுங்கு மீறப்பட்டதாக ஓர் உறுப்பினர் உணர்ந்தால், அவ்விடயத்தை அவர் அவ்வப்போது எழுப்ப முடியும். ஒழுங்குப் பிரச்சினை எழுப்பப்படும்போது சபையில் உரையாற்றிக் கொண்டிருப்பவர் அவருக்கு இடமளிக்க வேண்டும். சபாயகரோ தலைமைதாங்கும் உறுப்பினரோ தன் முடிவை அறிவித்த பின்னர் உறுப்பினர் தமது பேச்சை மீண்டும் ஆரம்பிக் கலாம்.

**வாக்கெடுப்புக்குப் பின்னர் ஓர் உறுப்பினர் பேச முடியுமா?**

விவாதத்தின் இறுதியிலே உறுப்பினர்கள் தங்கள் சம்மதத்தை அல்லது எதிர்ப்பை "ஆம்" அல்லது "இல்லை" என்று சொல்வதன் மூலம் வெளிப்படுத்துகிறார்கள். ஓர் உறுப்பினர் வாய்மூலம் முடிவு தெரிவிப்பில் திருப்தி கொள்ளாது விடின் வாக்கெடுப்பைக் கோரலாம். வாக்கெடுப்பானது நிரை நிரையாக சார்பானவர்களையும் எதிரானவர்களையும் எண்ணுவதன் மூலமோ அல்லது அவர்களின் பெயர்களை அழைத்து அவர்களின் விருப்பைப் பதிவு செய்வதன் மூலமோ நடாத்தப்படலாம். எந்த வழியில் வாக்கெடுப்பு நடாத்தப்பட வேண்டும் எனத் தீர்மானிப்பது சபாநாயகரைப் பொறுத்தது.

**கூட்ட நடப்பெண் என்றால் என்ன?**

கூட்ட நடப்பெண்ணானது தலைமைதாங்கும் உறுப்பினர் உட்பட இருபது உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும். கூட்ட நடப்பெண் காணப்படாத சமயத்தில், இந்த விடயம் தலைமைதாங்கும் உறுப்பினரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டால் அழைப்பு மணி ஒலிக்கச் செய்து, பின்பு ஐந்து நிமிடங்களின் முடிவிலும் கூட்ட நடப்பெண் காணப்படாத பட்சத்தில் அவர் பாராளுமன்றத்தை ஒத்தி வைப்பார்.

**வாக்களிப்பு:** எவ்வாறு வாக்களிப்பது?

குறித்த விடயமொன்றிற்கு சபையின் தீர்ப்புத் தேவைப்படுமிடத்து அவ்விடயம் உறுப்பினர்களின் அங்கீகாரத்திற்காக அல்லது நிராகரிப்பிற்காகச் சபைக்கு விடப்படும். ஒவ்வொரு உறுப்பினரினது தீர்ப்பும் வாக்கெடுப்பொன்றின் மூலமாக பெற்றுக் கொள்ளப்படும். வாக்கெடுப்பானது சபை அமர்வில் உள்ளபோது மட்டுமே நடத்தப்படலாம். எந்தவொரு உறுப்பினரும் ஒரு வாக்கிற்கு உரிமையுடையவரென்பதோடு, அவர் அதனைத் தனிப்பட்ட வகையில் பிரயோகிக்கவும் வேண்டும். வாக்களிக்கும்போது, ஓர் உறுப்பினர் தனக்கென ஒதுக்கப்பட்ட ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். எந்தவொரு உறுப்பினருக்கும் வாக்களிப்பதற்கான உரிமை உண்டு. எனினும் ஓர் உறுப்பினர் தான் விரும்பினால் வாக்களிக்காமலும் விடலாம். பாராளுமன்றத்தில், மூன்று வெவ்வேறு வழிகளில் வாக்கெடுப்பு நடத்தப்படலாம். அவையாவன:

அ.குரல் மூல வாக்கெடுப்பு

குரல் மூல வாக்கெடுப்பே மிகவும் பொதுவான வாக்கெடுப்பு முறையாகும். நிலையியற் கட்டளை 42 இன்படி, சபாநாயகர் ஒரு விடயத்தைச் சபைக்கு விடும்போது, ஒரு தீர்மானத்திற்குச் சார்பானவர்கள் "ஆம்" என்பர், எதிரானவர்கள் "இல்லை" என்பர். சபையின் கருத்துப் போதுமான அளவிலும், தெளிவாகவும் வெளிப்படுத்தப்பட்டுள்ளதெனச் சபாநாயகர் உணருமிடத்து, அவர் அதனைச் சபைக்கு அறிவிக்கலாம். சபாநாயகரின் தீர்ப்பில் ஓர் உறுப்பினர் திருப்தி கொள்ளாதவிடத்து, அவர் வாக்கெடுப்பொன்றைக் கோரலாம்

ஆ.பெயர் மூல வாக்கெடுப்பு

பெயர் மூல வாக்கெடுப்பிற்கான கோரிக்கையொன்று விடுக்கப்பட்டவிடத்து, நிலையியற் கட்டளை 42இல் குறிக்கப்பட்டுள்ளவாறு சபாநாயகர் நடவடிக்கை மேற்கொள்வார். இதன்போது, வாக்கெடுப்பிற்கான மணி இரண்டு நிமிடங்களுக்கு ஒலிக்கப்பட வேண்டுமென்பதோடு, வாக்கெடுப்பு, பெயர் மூலம் நடாத்தப்படுதலும் வேண்டும். செயலாளர் நாயகம், ஒவ்வொரு உறுப்பினரும் எவ்வாறு வாக்களிக்க விரும்புகிறார் என்பதை அவர்களிடம் தனித் தனியே கேட்பதன் மூலமும் அதன்படி வாக்குகளைப் பதிவதன் மூலமும் வாக்கெடுப்பை நடத்துவார். செயலாளர் நாயகம் முதலாவதாகப் பிரதம அமைச்சரையும் அதன் பின்னர் அமைச்சரவை அமைச்சர்கள், ஏனைய அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் ஆகியோரை அவரவர் பெயர்களின் அகர வரிசை ஒழுங்கிலும் அதன் பின்னர் ஏனைய உறுப்பினர்களை அவரவர் பெயர்களின் அகர வரிசை ஒழுங்கிலும் கேட்பார். ஓர் உறுப்பினர் தான் வாக்களிக்க மறுப்பதாகக் கூறலாம். அவ்வாறான சந்தர்ப்பத்தில், செயலாளர் நாயகம் அத்தகைய உறுப்பினரின் பெயரை வாக்களிக்க மறுத்தவராகப் பதிவு செய்தல் வேண்டும்.

இ.எழுந்து நின்று வாக்களித்தல்

சபாநாயகர் விரும்பினால் நிலையியற் கட்டளை 43இல் விளக்கப்பட்டவாறு வாக்கெடுப்பை நடத்தலாம். இதன்படி, உறுப்பினர்களைத் தத்தமக்குரிய இடங்களில் எழுந்து நிற்குமாறு சபாநாயகர் கேட்டுக்கொள்ளலாம். செயலாளர் நாயகம், எழுந்து நிற்பவர்களை எண்ணி முடிவைச் சபாநாயகருக்கு அறிவிக்க வேண்டும். சபாநாயகர் முடிவைச் சபைக்கு அறிவிக்க வேண்டும். தாம் தவறாக வாக்களித்துவிட்டதாக அல்லது தமது வாக்குத் தவறாக எண்ணப்பட்டு விட்டதாக ஓர் உறுப்பினர் கருதுமிடத்து, தனது வாக்கைத் திருத்துவிக்க அவர் கோரலாம். எனினும், வாக்கெடுப்பின் முடிவைச் சபாநாயகர் அறிவிப்பதற்கு முன்னரே இதனைச் செய்தல் வேண்டும்

**வாக்களிப்பதன் நோக்கம்**

பின்வரும் பல நோக்கங்களுக்காகப் பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பு பிரயோகிக்கப்படுகின்றது. பாராளுமன்றத்தால் சனாதிபதியைத் தெரிவு செய்தல்

ஜனாதிபதிப் பதவியானது அதன் பதவிக்காலம் முடிவுறுவதற்கு முன்னரே காலியாகுமிடத்து, அரசியலமைப்பின் 40ஆம் உறுப்புரையில் விதித்துரைக்கப்பட்டவாறு ஒரு விசேட நடைமுறை பின்பற்றப்படுதல் வேண்டும். இக்கட்டத்தில் பாராளுமன்றம் அதன் உறுப்பினர்களுள் ஒருவரைக் காலியான இப்பதவிக்குத் தெரிவு செய்தல் வேண்டும். பதவி காலியான தினத்திலிருந்து ஒரு மாதத்திற்கு மேல் பிந்தாமல் அத்தகைய தேர்தல் நடத்தப்பட வேண்டும். அத்தகையதொரு சந்தர்ப்பத்தில் இரகசிய வாக்கெடுப்பொன்று நடத்தப்படுவதோடு, அளிக்கப்பட்ட வாக்குகளில் அறுதிப் பெரும்பான்மையோடு அவர் தெரிவு செய்யப்படுதலும் வேண்டும். வாக்கெடுப்பு ஆரம்பிக்கும்போது செயலாளர் நாயகம் தெரிவத்தாட்சி அதிகாரியாகச் செயற்பட்டு சபாநாயகர் உள்ளிட்ட ஒவ்வொரு உறுப்பினரது பெயரையும் அழைத்து அவர்கள் வாக்களிப்பதற்கு வாக்குச் சீட்டுக்களை வழங்குவார். தான் யாருக்கு வாக்களிக்கின்றாரோ அந்த வேட்பாளரின் பெயருக்கு எதிரே இருக்கும் சதுரக் கூட்டில் 1 என்னும் இலக்கத்தை உறுப்பினர் குறிக்கலாம். தமது விருப்பத் தெரிவுகளை அவர் தாம் விரும்பியவாறு 2, 3 என்னும் இலக்கங்களை இடுவதன் மூலம் குறித்துக் காட்டலாம்.

சபாநாயகர், பிரதிச் சபாநாயகர், குழுக்களின் பிரதித் தவிசாளர் ஆகியோருக்கான தேர்தல், புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்றத்தின் முதல் பணி மூன்று தலைமைதாங்கும் உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்தலாகும். அத்தகைய தேர்தலுக்கு நிலையியற் கட்டளை 3இன் கீழ் விசேட நடைமுறையொன்று விதித்துரைக்கப்பட்டுள்ளது. புதிய பாராளுமன்றமொன்றின் முதலாவது கூட்டத்தில் அல்லது சபாநாயகர் பதவியில் வெற்றிடம் ஒன்று ஏற்படுகின்றபோது சபாநாயகர் தெரிவு செய்யப்பட வேண்டும்.

சபாநாயகர் ஒருவரைத் தெரிவு செய்வதற்கான நடைமுறை நிலையியற் கட்டளை 4இன் கீழ் விதித்துரைக்கப்பட்டுள்ளது. சபாநாயகர் பதவிக்கு ஒருவரின் பெயர் மட்டுமே முன்மொழியப்பட்டு வழிமொழியப்பட்டிருப்பின் அந்தப் பெயர் தெரிவு செய்யப்பட்டதாகச் செயலாளர் நாயகத்தினால் வினாவி ன்றிப் பிரகடனப்படுத்தப்பட வேண்டுமென நிலையியற் கட்டளை 4(3) கூறுகிறது.

(தொடரும்)



கொழும்பில் நடைபெற்ற பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இலங்கை வந்த பொதுநலவாய நாடுகளின் பிரதிநிதிகள் குழுவொன்று நேற்று நண்பகல் யாழ்.குடாநாட்டிற்கு விஜயம் செய்தது. இக்குழுவினரை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாரர்ளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், யாழ்.அரசாங்க அதிபர் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் வரவேற்றனர். இதன்போது யுத்தத்தின் பின்னரான யாழ்.குடாநாட்டின் நிலவரங்கள் தொடர்பில் கருத்துக்கள் பரிமாறப்பட்டன. யாழ்.வந்த இக்குழுவினருக்கு யாழ்.நகரில் உள்ள ஹொட்டல் ஒன்றில் வரவேற்புபசாரம் அளிக்கப்படுவதை மேற்படி படங்களில் காணலாம்.

# துபாயில் நகைகளை திருடிய இலங்கையர் மூவருக்கு சிறை

வயோதிப பெண்ணொருவரை தாக்கிவிட்டு 200,000 டினார் பெறுமதியான நகைகளை திருடிய மூன்று இலங்கையர்கள் மீது விதிக்கப்பட்ட இரண்டுவருட சிறைத் தண்டனையை டுபாய் மேல் முறையீட்டு நீதிமன்றம் உறுதி செய்தது.

இலங்கையை சேர்ந்த இரண்டு பணிப்பெண்கள் மற்றும் ஒரு கடைச்சிப்பந்தி (ஆண்) ஆகியோருக்கு டுபாய் குற்றவியல் நீதிமன்றம் இரண்டு வருட சிறைத் தண்டனையை விதித்திருந்தது.

மகனின் வீட்டில் பேரக்குழந்தையை பார்த்துக் கொண்டிருந்த வேளை, கதவில் தட்டும் சத்தம் கேட்டு கதவை திறந்தபோது இரண்டு பெண்களும் ஒரு ஆணும் வீட்டுக்குள் நுழைந்து கதவை பூட்டியதாக பாதிக்கப்பட்ட வயோதிப பெண் தனது வாக்குமூலத்தில் கூறியுள்ளார்.

ஒரு பெண் பேரக் குழந்தையை பறித்தெடுக்க, ஏனைய இருவரும் தன்னை கீழே விழுத்தி முகத்தை துணியால் சுற்றி தாக்கியபோது தான் மயக்கமடைந்ததாகவும் அரை மணித்தியாலத்தின் பின் தான் மயக்கம் தெளிந்து பார்த்போது வீடு சின்னாபின்னமாக காணப்பட்டதுடன் குழந்தை அறை மூலையில் கிடந்ததாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, வந்தவர்கள் தனது மகனின் நகை, தனது நகை, பிள்ளையின் நகை யாவையும் எடுத்து சென்றுவிட்டதை தான் அறிந்து கொண்டதாக அவர் கூறினார். வந்த பெண்களில் ஒருவர் பல தடவைகள் இந்த வீட்டுக்குள் வந்திருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதை தொடர்ந்து பொலிஸார் இந்த இலங்கையர் மூவரையும் கைது செய்தனர். பாதிக்கப்பட்ட பெண் இவர்களை அடையாளம் காட்டினார்.

# நல்லிணக்கம் குறித்த வாக்குறுதிகளை இலங்கை நிறைவேற்ற வேண்டும்

## பொதுநலவாய அமைப்பின் தலைவர் வேண்டுகோள்

நல்லிணக்கம் தொடர்பாக, சர்வதேச சமூகத்துக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் தவறினால் பொதுநலவாயத்தின் நம்பகத்தன்மை சவாலுக்குள்ளாகும் என பொதுநலவாய அமைப்புத் தெரிவித்துள்ளது.

தனது உள்நாட்டு பிரச்சினையை சமாதானமாகவும், கூட்டாகவும் தீர்ப்பதற்கான இலங்கை அரசாங்கத்தின் மனவுறுதி மற்றும் ஆற்றலில் சர்வதேச சமூகம் நம்பிக்கையை இழந்தால் அது துரதிஷ்டவசமானதாகும் என பொதுநலவாய நாடாளுமன்ற சங்கத்தின் நிறைவேற்றுக்குழுவின் தலைவர் சேர் அலன் ஹஸெல்ஹர்ட் எம்.பி. கூறினார்.

கொழும்பில் நேற்று நிகழ்த்திய லக்ஷ்மன் கதிர்காமர் ஞாபகார்த்த உரையின்போதே ஹஸெல் ஹர்ட் எம்.பி. இவ்வாறு கூறினார்.

நல்லிணக்க செயன்முறைக்கான தொழில்நுட்ப உதவிகளை பொதுநலவாயம் வழங்கும் எனக் கூறிய அவர், தனது பிரச்சினைகளை தீர்த்துக்கொள்வதற்கான இலங்கை அரசாங்கத்தின் ஆற்றலில் பொதுநலவாயம் நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

எனினும், நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் தான் அர்ப்பணிப்புடன் இருப்பதை சர்வதேச சமூகம் நம்பச் செய்வதற்கு அரசாங்கம் தொடர்ச்சியான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் அவர் கூறினார்.

நாட்டின் அனைத்து சமூகத்தினருக்கும் சமத்துவத்தை ஏற்படுத்துவதற்கான செயன்முறைக்கு காலவரையறை ஏற்படுத்தப்பட வேண்டுமெனவும் அவர் கோரினார். வெளிப்படைத்தன்மை, சமாதானம், சமத்துவம் என்பன ஜனநாயக ஸ்திரத்தன்மை மூலம் வலுப்படுத்தப்பட வேண்டும். எமது மாநாட்டின் கட்டமைப்புக்குள், இதற்கான உத்தரவாதத்தை பொதுநலவாய நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்பார்ப்பார்கள் என அவர் கூறினார்.

இலங்கையின் இறையாண்மையை அத்துமீறுவதற்கு பொதுநலவாயம் முற்படவில்லை எனவும் ஆனால் வெற்றிகரமான உள்நாட்டுத் தீர்வு பூர்த்தியாக்கப்படுவதை காண விரும்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

# குளத்திலிருந்து குண்டுகள் மீட்பு

புத்தளம் உடையார்வெளி குளத்திலிருந்து 7 கிறனேட்டுகள் மீட்கப்பட்டுள்ளன. குளத்திலிருந்து சேறுகளை அகற்றியபோது இக்கிறனேட்டுகள் மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுப் பிற்பகல் 12 மணியளவில் இந்த கிறனேட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இக் குண்டுகள் படையினரால் பாதுகாப்பான பகுதியில் வைத்து செயலிழக்க செய்யப்பட்டது.

# சட்ட உதவி, ஒத்துழைப்பு: இலங்கை-ரஷ்யா ஒப்பந்தம்

குற்றவியல் விவகாரங்களில் ரஷ்யாவுடன் பரஸ்பர சட்ட உதவி ஒத்துழைப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திட இலங்கை தீர்மானித்துள்ளது.

இது தொடர்பிலான அமைச்சரவை பத்திரத்தை அமைச்சர் ரவூப் ஹக்கீம் சமர்பித்ததோடு அதற்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

2002ஆம் ஆண்டு 25ஆம் இலக்க சட்டத்தில், குற்ற விவகாரங்கள் தொடர்பாக வெளி நாடுகளுக்கு இலங்கை மூலம் உதவி வழங்குதல் மற்றும் வெளி நாடுகளில் இருந்து உதவிகளை பெறுதல் இந்த உடன்படிக்கையின் மூலம் செயற்படுத்தப்படும்.

இதேவேளை, நாட்டின் சட்ட திட்டங்களை வலுப்படுத்துவதற்கு அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகின்றது.

குறிப்பாக சர்வதேச நாடுகளுகளுடன் சட்ட, நீதி, ஒத்துழைப்புகள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் பல்வேறுபட்ட ஒப்பந்தங்களையும், உடன்படிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது.

# வல்வெட்டித்துறை கடலில் மூழ்கிய மீனவர் மீட்பு

யாழ்.வல்வெட்டித்துறை பொலிகண்டி கடலில் மூழ்கிய மீனவரொருவர் நேற்று வியாழக்கிழமை அதிகாலை பாதுகாப்புடன் மீட்கப்பட்டதாக யாழ்.பிராந்திய கடற்றொழில் மற்றும் நீரியல்வளத்துறை திணைக்களப் பணிப்பாளர் என்.கணேசமூர்த்தி தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை பகல் 2 மணியளவில் பொலிகண்டி கடலில் இரு மீனவர்கள் மீன்பிடித்துக்கொண்டு திரும்பிய போது, படகு கவிழ்ந்த நிலையில் இவ்விருவரும் கடலில் மூழ்கியுள்ளனர்.

இருப்பினும் இவ்விருவரில் ஒருவர் வேறொரு படகில் கரை சேர்ந்த நிலையில், ஏனைய மீனவர்களுக்கு தகவல் வழங்கினார். இதனையடுத்து மீனவர்கள் மற்றும் கடற்படையினரின் உதவியுடன் மற்றைய மீனவர் காப்பாற்றப்பட்டதாகவும் அவர் கூறினார்.

மீன்களின் எடை அதிகமாக காணப்பட்டதன் காரணமாக படகு கவிழ்ந்திருக்கலாமெனவும் யாழ். பிராந்திய கடற்றொழில் மற்றும் நீரியல்வளத்துறை திணைக்களப் பணிப்பாளர் என்.கணேசமூர்த்தி குறிப்பிட்டார்.

# கொமன்வெல்த் அமைப்பின் செயலர் கிழக்கு விஜயம்

பொது நலவாய நாடுகளின் செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மா நேற்றுமுன்தினம் புதன் கிழமை கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்தார்

நேற்று செவ்வாய்க்கிழமை கொழும்பில் ஆரம்பமான பொது நலவாய நாடுகளின் 58 ஆவது மாநாட்டில் கலந்து கொள்வதற்காக கொழும்பிற்கு இவர் வருகை தந்தார்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள திருக்கோவில் பிரதேசத்திற்கு விஜயம் செய்தார்.

அங்கு தொழிற் பயிற்சி நிலையமொன்றை திறந்து வைத்த அவர், போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் மீள்குடியேறிய காஞ்சுரங்குடா கிராமத்திற்கு விஜயம் செய்து மக்களை சந்தித்து உரையாடினார்

போருக்கு பின்னர் சுயமாக மீள் குடியேறிய தங்களுக்கு அரசாங்கத்தினால் அடிப்படை வசதிகள் இது வரை ஏற்படுத்தி தரப்படவில்லை என்பதை பொது நலவாய நாடுகளின் செயலாளர் நாயகத்திடம் தாங்கள் எடுத்துக் கூறியதாக தங்க வேலாயுதபுரம் கிராம் அபிவிருத்திச் சங்கத்தின் தலைவரான நல்லரத்தினம் அருளானந்தமூர்த்தி கூறினார்.

# குளவிகள் தாக்கியதில் 31 பெண்கள் காயம்

ஹப்புத்தளை பிரதேச தோட்டமொன்றில் தேயிலைக் கொழுந்து பறித்துக்கொண்டிருந்த பெண்கள் மீது குளவி தாக்கியதில் 31பேர் பாதிக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஹப்புத்தளை எஸ்டேட்டுக்கு உட்பட்ட 5 மற்றும் ஆறாம் பிரிவுகளைச் சேர்ந்த தோட்டப் பகுதிகளில் வேலைசெய்துகொண்டிருந்தவர்களே சம்பவத்தில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குளவிகளுக்கு பயந்து ஓடும் போது தவறி விழுந்தவர்களே பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று ஹப்புத்தளை பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை மலைநாட்டில் பல பகுதிகளிலும் தோட்டங்களில் வேலைக்குச் செல்லும் ஏராளமானோர் குளவிகளின் தாக்கத்துக்கு இலக்காகி பாதிக்கப்பட்டு வருகின்றனர். எனினும் பாதிக்கப்படுவோருக்கு நஷ்டஈடு வழங்கவோ அல்லது அவர்களின் நலனை பாதுகாக்கவோ தோட்ட நிர்வாகங்கள் முன்வருவதில்லை என தொழிலாளர் தரப்பில் கடுமையான விசனம் தெரிவிக்கப்படுகிறது.

# சுழிபுரம் மீனவர்கள் குற்றச்சாட்டு

சுழிபுரம் அலைமகள் கடற்றொழிலாளர்கள் 35 வருடங்களாக கலங்கட்டி வலை மூலம் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் இடத்தில் மற்றொரு சங்கத்தை சேர்ந்த கடற்றொழிலாளர்கள் அத்து மீறி மீன்பிடிப்பதாக அப்பகுதி மீனவர்கள் யாழ். பிராந்திய கடற்றொழில் மற்றும் நீரியல்வளத்துறை பணிப்பாளர் என்.கணேசமூர்த்தியிடம் முறைப்பாடு செய்துள்ளதாக அலை மகள் கடற்றொழிலாளர்கள் தெரிவித்தனர்.

# ஆரோக்கிய யோகம் என்றால் என்ன?

யோகம் என்ற சொல் "யுஜ்" என்ற சமஸ்கிருத மொழியில் உள்ள சொல்லின் வழியே பிறந்ததாகும். யோகம் என்ற சொல்லுக்கு "ஒருங்கிணைத்தல்" அல்லது "எல்லாவற்றையும் எந்தவிதமான வேறுபாடுமின்றி முழுமைப்படுத்துதல்" என்றும் பொருள் கூறுகின்றனர். யோகம் என்றால் அலையும் மனதை அலையாமல் ஒரு நேர்வழிப்படுத்தும் செயல் என்று எளிமையாகவும் உரைக்கின்றனர். யோகம் தமிழில் தவம் அல்லது உஜபம் எனப்படும்.

**அறிவியல் கலை**

யோகம் என்பது மக்கள் தம் உடலையும் உள்ளத்தையும் அடக்கியாளக் கண்ட ஓர் அறிவியல் கலையாகும். யோகப் பயிற்சியில் சித்திபெற்ற அறிஞர்கள் இயற்கையைத் தன்வயப்படுத்தும் ஆற்றலை அடைவார்கள். யோகக் கலை சாகாக் கலை என்று பல அறிஞர்கள் கூறுவர். யோகப் பயிற்சியால் நீண்ட நாள் வாழலாம். யோகம் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தோன்றிய கலையாகும்.

**யோகக் கலை**

யோகம் பயில்வதற்கு ஆசனப்பயிற்சி இன்றியமையாதது. யோகப் பயிற்சிகளில் யோகாசனம் முக்கியமானது. யோகம் ஒரு கலை கல்வி பயில்வதற்கு எழுத்து எவ்வளவு இன்றியமையாததோ, அவ்வளவு இன்றியமையாதது யோகம் பயில்பவர்களுக்கு யோகாசனம் பயில்வது என்று கூறினால் அது மிகையாகாது.

**சிவயோகம்**

இந்த யோகம் என்னும் அரும்பெரும் ஆன்மீகக்கலை நம் முன்னோர் இன்றைக்கு பலாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே கண்ட அரும்பெரும் கலை. இக்கலை இன்று சைவ சமய சாத்திரங்களில் அழகுற மிக நுணுக்கமாக எடுத்துக் காட்டப் பெற்றுள்ளது. யோகத்தை சிவயோகம் என்பதும், இது சிவனார் மக்களுக்கு உபதேசித்துக் கொடுத்து கலை என்றும் கூறப்படுகின்றது. உலகிலே முதன் முதலாக யோகக் கலையைக் கண்டவர்கள் சிவனை வழிபடும் சிவநெறியாளர்களே.

**யோக முறை**

யோகாசன முறைகளை முறையோடு பின்பற்ற வேண்டும் உள்ளுறுப்புகள்தான் யோகாசனத்தில் முழுக்கப் பயன்படுகின்றன. உள்ளுறுப்புகள் தூய்மை பெறவும் வலிமை பெறவும் பயிற்சி செய்யும் நேரத்தில் மிகவும் நியமத்துடன் பயபக்தியுடன் நெறி பிறழாது செய்ய வேண்டும்.

**யோகப் பயிற்சியின் சிறப்புகள்**

தேகத்திற்கு வந்த நோய்களைப் போக்கியும் இனி நோய்கள் வராமல் காத்தும் ஒருவருக்கு உகந்த உடலை உருவாக்குகிறது. உள்ளுறுப்புகளையும் வெளியுறுப்புகளையும் தூய்மைப்படுத்தி அது தன் பணிகளை அருமையாகவும் திறமையாகவும் அயராமல் செயல்படுத்தத் தூண்டுகிறது. சாதராணமாகச் செயல்படும் ஒருவனுடைய செயலாற்றலை மிகுதிப் படுத்துவதுடன் உடல் நலமும், மனவளமும் பெற்று வாழ உற்சாகப்படுத்துகிறது. அன்றாடம் உடலில் உண்டாகும் கழிவுப் பொருட்களை வெகுவிரைவாக வெளிப்படுத்தவும், உடலைக் கசடற்ற முறையில் வைத்துக்காக்கின்ற சக்தியினையும் உடலுக்குத் தருகின்றது. அதாவது நரம்புகள், மூளை, நுரையீரல், இதயம், ஜீரண உறுப்புகள் போன்ற அவயவங்களுக்குத் திறமையுடன் வேலை செய்கின்ற ஆற்றலை அளிக்கிறது.

**நீண்ட காலம்**

ஆரோக்கியமாக வாழ்வதற்குத் துணை புரிகிறது. மனதாலும், செயலாலும், உயர்ந்த வாழ்வு வாழத் தூண்டுகிறது. இவ்வாறு தேகநலனைப் பற்றியும், சிறந்த ஆரோக்கிய வாழ்வு முறையைப் பற்றியும் யோகமுறை உடற்பயிற்சி முறைகள் நிறைந்து செயல்படுகின்றன.

**ஆசனம் செய்வதால் உண்டாகும் பயன்கள்:**

ஆசனங்களை முறையோடு செய்து வந்தால் உடல்வளம் பெறுவதுடன் மிகவும் சுறுசுறுப்போடும் விரைவாகவும் அன்றாட வாழ்வில் இயங்க முடியும்.

முதுகெலும்பு எளிதில் வளைந்து இயங்கும் ஆற்றலைப் பெறுவதால், எதனையும் சிறப்பாகப் பணியாற்றும் வகையில் உடலில் ஒத்துழைப்பு உயர்ந்த அளவில் கிடைக்கிறது.

பசி நன்றாக எடுக்கிறது. உடலில் பற்றிக் கொள்கின்ற நோய்கள் தொடக்க நிலையிலேயே முறியடிக்கப்படுகின்றன.

மிகவும் முக்கிய உறுப்புகளான இதயம், நுரையீரல்கள் மற்றும் மூளைப்பகுதிகள் செழிப்படைந்து சிறப்புடன் பணியாற்ற முடிகிறது.

தங்கு தடை இல்லா இரத்த ஓட்டம் உடலெங்கும் இயல்பாக ஓடி, உடலைப் பூரணப் பொலிவு பெற வைக்கிறது.

உடல் அவயவங்கள் எல்லாம் விறைப்பாக இருக்காமல், எளிதில் செயலுக்கு இணங்கும் தன்மையின் இருந்திட வழி அமைகிறது.

தோல், நரம்பு, மற்றும் அனைத்துப் பகுதிகளுக்கும் ஆசனப் பயிற்சிகள் உரமூட்டுகின்றன.

"மூளைக்குப் போதிய பிராணவாயு கிடைக்காவிட்டால் படபடப்பும் பதைபதைப்பு உணர்வும் எழுச்சியும் உண்டாவதோடு உடல் அமைப்பையும் மாற்றி, செயல்களையும் சின்னாபின்னாப்படுத்துவதுடன் நோயுற்றவராகவும் ஆக்கிவிடுகிறது." என்கிறார்கள் மருத்துவ நிபுணர்கள். இந்தப் பிராணவாயுவின் பெருமைகள் எல்லாம் நம்முடைய பிராணாயாமம் என்பதில் அடங்கியுள்ளது. உடலுக்குள்ளே பிராணவாயு என்கிற உயிர்க் காற்றைச் சேர்த்து வைத்து, பேராண்மைமிக்க சக்தியினைப் பெருக்கும் வழிதான் பிராணாயாமம் என்றனர்.

**யோகாசனம் பற்றிய சந்தேக விளக்கமும் - கேள்வி-பதிலும்**

**யோகாசனம் எப்போது செய்ய வேண்டும்? எப்போது செய்யக்கூடாது?**

யோகாசனம் அதிகாலை சூரியன் உதயம் ஆகும்போது செய்தால் நல்லது. சுரியன் அதிக உக்கிரமாக இருக்கும்போது யோகாசனம் செய்தால் பலன் கிடைக்காது. அதிகாலை 5 மணியிலிருந்து 7 மணிக்குள்ளும் மாலை 5.30 மணிக்குமேல் 7 மணிக்குள்ளும் செய்தால் நல்லது. யோகாசனம் செய்யும்போது கண்டிப்பாக வியர்வை வரக்கூடாது.

**நேரப் பகர்வு முறையில் வேலை செய்யும் தொழிலாளர்கள் எப்போது யோகாசனம் செய்ய வேண்டும்?**

நேரப் பகிர்வு முறையில் வேலை செய்பவர்கள் தாங்கள் வேலை செய்து விட்டு வீடு வந்த பின் வீட்டில் தூங்கி எழுந்த பின் மற்ற கடன்களை முடித்து, குளித்துவிட்டு யோகாசனம் செய்யலாம்.

**சாப்பிட்ட பின் எவ்வளவு நேரம் சென்றபின் யோகாசனம் செய்யலாம்?**


சாப்பிட்ட பிறகு கண்டிப்பாக 5 மணி நேரமாவது சென்ற பிறகுதான் யோகாசனப் பயிற்சி செய்யவேண்டும். அதிகாலை யோகாசனம் செய்வது நல்லது. புதிதாகப் பழகுபவர்கள் மாலையில் செய்யலாம். காலையில் செய்யும்போது காலைக் கடன்களை முடித்துவிட்டு அதாவது மலம் வெளியேறிய பின் செய்வது நல்லது.

**மலம் வெளியேறாமல் இருந்தால் யோகாசனம் செய்யலாமா?**

காலையில் எழுந்து 2 டம்ளர் பச்சைத் தண்ணீர் குடிக்க வேண்டும். இப்பழக்கத்தை மேற்கொண்டால் காலையில் கண்டிப்பாக மலம் வெளியேறிவிடும். அப்படியும் வெளியேறாவிடில் யோகாசனம் செய்யலாம் ஆரம்பித்த சில விநாடிகளில் மலம் வெளியேற உணர்ச்சி வரும். அப்போது மலம் வெளியேறிய பின் மீண்டும் வந்து யோகாசனம் செய்யலாம்.

**யோகாசனம் வெறும் தரையில் செய்யலாமா?**

வெறும் தரையில் யோகாசனம் செய்யக்கூடாது. அழுத்தாத விரிப்பின் மேல் யோகாசனம் செய்யவேண்டும். சமூக்காளம் அல்லது சற்று அழுத்தமான போர்வையை விரித்து யோகாசனம் செய்யலாம்.





**வெந்நீரில் குளித்துவிட்டு யோகாசனம் செய்யலாமா?**

யோகாசனம் செய்பவர்கள் எந்தக் கடும் குளிராக இருந்தாலும் பச்சைத் தண்ணீரில் குளித்த பின்தான் யோகாசனம் செய்யவேண்டும். வெந்நீரில் குளிப்பதால் வெகு விரைவில் நரம்புத் தளர்ச்சி மற்றும் சோம்பேறித்தனம் வந்துவிடும். மிகவும் பலவீனமானவர்கள் மிகக் குளிர்ப் பிரதேசத்தில் இருப்பவர்கள் இலேசான சூட்டில் குளித்துவிட்டு யோகாசனம் செய்யலாம். ஆனால் இப்பழக்கத்தை நிரந்தரமாக வைத்துக் கொள்ளாமல் காலக் கிரமத்தில் பச்சைத் தண்ணீரையே குளிப்பதற்கு உபயோகிக்க வேண்டும். ஆஸ்துமா, நீரிழிவு நோய் உள்ளவர்கள நோய் கடுமையாக இருந்தாலும் குடிப்பதற்கும் குளிப்பதற்கும் பச்சைத் தண்ணீரையே உபயோகிக்க வேண்டும். ஆசனம் செய்யச் செய்ய நோயின் கடுமை தணிந்து விடும்.

**கடுமையாக உழைப்பவர்களுக்கு யோகாசனம் முக்கியமா?**

கடுமையாக உழைத்தாலும் கண்டிப்பாக யோகாசனம் செய்யவேண்டும். குறிப்பாக விபாகீதகரணி, சர்வாங்காசனம், அர்த்தசிரசாசனம், சிரசாசனம் ஆகியவற்றோடு மாற்று ஆசனங்கள் செய்து நாடி



சுத்தியும் செய்தால் நல்லது.

**எப்போதும் பிரயாணத்தில் இருப்பவர்கள் எப்படி யோகாசனம் செய்வது?**

இவர்கள் கண்டிப்பாக யோகாசனம் செய்யவேண்டும். இவர்கள் தங்கும் விடுதியிலாவது தூங்கி எழுந்தபின் குளித்துவிட்டு குறிப்பாக மேற்சொன்ன ஆசனங்களைச் செய்தால் போதுமானது.

**குறைந்தது எவ்வளவு நேரம் ஆசனங்களைச் செய்ய வேண்டும்?**

யோகாசன பிராணாயாமங்களை அதிக நேரம் செய்யவேண்டும் என்ற நியதி கிடையாது. தினமும் எந்தச் சூழ்நிலையிலும் 10 நிமிடம் செய்தால் போதுமானது. சில நாட்கள் மணிக்கணக்காக செய்து பின் சில நாட்கள் விட்டு விட்டு பின் தொடர்வது நல்லதல்ல. இதனால் பலன் அதிகம் கிடைக்காது. தினமும் விடா முயற்சியுடன் சில நிமிடங்களாவது ஆசன பிராணாயாமங்களைச் செய்வதால் அதிக பலன் கிடைக்கும்.

**நோய்வாய்ப்பட்டவர்கள் எவ்வளவு நேரம் செய்யவேண்டும்?**

நேரம் உள்ளவர்கள் ஆரம்பத்தில் காலை மாலை ஒரு மணிநேரம் கண்டிப்பாக செய்யவேண்டும். நோய் தணிந்த பின் 5 முதல் 10 நிமிடங்கள் செய்தால் போதுமானது.

**யோகாசனம் செய்பவர்கள் கடுமையான உணவுக் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டுமா?**

நோய் உள்ளவர்கள் நோய் தீரும்வரை யோகாசன பிராணாயாமத்துடன் கடுமையாக உணவுக் கட்டுப்பாட்டில் இருந்தால் நல்ல பலன் விரைவில் கிடைக்கும். சாதாரணமாக ஆரோக்கியமாக வாழவேண்டும் என்று எண்ணுபவர்கள் கடுமையாக உணவுப் பத்தியம் இருக்க வேண்டியதில்லை. நடைமுறையில் உப்பு, புளிப்பு, காரம் ஆகியவற்றை மிதமாக வைத்துக் கொண்டால் நல்லது. உடல் வளையும் தன்மை ஏற்படும்.

**யோகாசனம் செய்வதற்கு வயது வரம்பு உண்டா?**

யோகாசனம் செய்வதற்கு வயது வரம்பு கிடையாது. எந்த வயதிலும் யோகாசனம் செய்யலாம். வயது அதிகமானவர்கள் நேரத்தை மிகவும் குறைத்து யோகாசனம் செய்யவேண்டும்.

**எப்போது யோகாசனம் செய்யக்கூடாது?**

உடல் களைப்பாக இருக்கும்போது நாடிசுத்தி செய்துவிட்டு யோகாசனம் செய்யலாம். உடல் உறவு கொண்ட மறுநாள், பெண்களாக இருந்தால் மாதவிடாய் காலங்களில் மற்றும் கர்ப்பமான 3 மாதத்திற்குப் பின் யோகாசனம் செய்யக்கூடாது. சாப்பிட்டவுடன் யோகாசனம் செய்யக்கூடாது. 5 மணி நேரம் சென்ற பின் தான் யோகாசனம் செய்ய வேண்டும். காய்ச்சல், அதிக மண்டைபிடி இந்த வேளைகளில் யோகாசன ஆசியர்களிடம் ஆலோசனை. பெற்று நேரடியாகப் பழகினால் விரைவில் நோய் குணமாகிவிடும்.

**மாமிச உணவு சாப்பிடுகிறவர்கள் யோகாசனம் செய்யலாமா?**

செய்யலாம். ஆனால் இவர்களுக்கு உடல் வளையும் தன்மை மிகவும் குறைவாக இருக்கும். ஆகவே ஆசனங்களை இவர்கள் வலுக்கட்டாயப்படுத்தி செய்யக்கூடாது. ஆசனத்தின் முழு நிலை மெதுவாகவே இவர்களுக்கு வரும். ஆகவே இவர்கள் யோகாசனங்களை மெதுவாகச்செய்யவேண்டும். ஆசனத்தில் பூரண நிலை அடைய உடல் வலி மேலும் சுளுக்கு ஆகியன ஏற்படும். மாமிசம் சாப்பிடுவர்கள் அவற்றைக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைப்பது நல்லது.

# ஆரோக்கியமான உலகத்தை நோக்கிய ஒரு வெற்றிப்பயணம்



உலகத் தரம் வாய்ந்த ஆரோக்கியமான இயற்கை உணவுக் குறை நிரப்பிகளை (Natural Health Supplements), FKC International தமது தெற்காசியப் பிராந்தியக் காரியாலயமான FKC I Asia (Pvt) Ltd மூலம் இப்பொழுது இலங்கை வாழ் மக்களுக்காகத் தருவித்திருக்கிறது.

உற்பத்திகள்,

i) கலிபோர்னியா பொது சுகாதார திணைக்களம்
ii) அமெரிக்க உணவு மற்றும் மருந்துகள் அதிகார சபையின் அங்கீகாரம் பெற்ற GMP
iii) ISO 9001:2008
iv) இலங்கை ஆயர்வேததண் திணைக்களம்
v) அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் ஹலால் பிரிவு

ஆகிய உயர் அமைப்புக்களால் தர நிர்ணயிக்கப்பட்டது.




- இவ்வுயர்தரமான உற்பத்திகள் உலகிலுள்ள அனைவருக்கும் ஒரே நேரத்தில் கிடைக்கும் வகையில் இணையத் தளத்தினூடாக கொள்வனவு செய்யப்படக்கூடியது.

- உற்பத்திகள் வீட்டுக்கு வீடு நேரடியாக வினியோகிக்கப்படக்கூடியது.

## fkc யின் ஆரோக்கியத்தீர்வுப் பொதிகள்

ட்ரை என்டி ஒக்சிடன்டின் மூலப்பொருட்கள் இயற்கை விற்றமின்களை (C மற்றும் E) விட 20-50 மடங்கு சக்தி வாய்ந்தது.



**01) வயதாதலைக் கட்டுப்படுத்தவும் உடல் நச்சகற்றலுக்குமான ஆரோக்கியத் தீர்வுப்பொதி**


- தோல் சுருக்கம், கண் கீழ் கரு வளையம், இள நரை, முடியுதிர்தல், பார்வைக் குறைபாடு போன்ற வயதாதல் அறிகுறிகளிலிருந்து மீட்சி பெற உதவுகிறது.
- உடலின் நச்சகற்றல் செயன்முறையை இலகுபடுத்த உதவுகின்றது.
- உடலுக்குத் தேவையான விற்றமின் மற்றும் கனியுப்புக்களை வழங்குகிறது.



**02) ஆரோக்கியமான இதயத்திற்கான தீர்வுப்பொதி**

- இதயக் கலங்களை வலுப்படுத்தி அதன் ஆரோக்கியத்தைப் பேணுவதற்கான இயற்கையான அணுகுமுறை.


ரிஜெனசிஸ் - ஒரு வில்லையில் அடங்கியுள்ள உடலுக்கு நன்மை செய்யும் பற்றீரியாக்களின் அளவு 24 யோகட்டுக்களின் அடங்கியுள்ள எண்ணிக்கையாவுக்குச் சமமானது.



**03) ஆரோக்கியமான வயிறு மற்றும் சமிபாட்டிற்கான தீர்வுப்பொதி**

- சமிபாட்டுத் தொகுதியின் நோயெதிர்ப்புச் சக்தியை அதிகரிக்க உதவுகிறது.
- வயிறு சம்பந்தமான ஆரோக்கியக் கோளாறுகளான கேஸ்ட்ரைடிஸ், குடற்புண் மற்றும் குடற்புற்று நோயிலிருந்து மீட்சி பெற உதவுகிறது.


ஜொயின்ட் ஈசேன் - மூட்டுக்களின் இயற்கையான உராய்வு நீக்கியாகத் தொழிற்படுகிறது.



**04) ஆரோக்கியமான என்பு, தசை மற்றும் மூட்டுகளுக்கான தீர்வுப்பொதி**

- மூட்டு, என்பு மற்றும் தசைகளின் முழுமையான ஆரோக்கியத்திற்குத் தேவையான போஷணையை வழங்க உதவுகிறது.
- தசை நார்களைக் கட்டியெழுப்பவுதவும் உயர்தரமான (கொலஸ்ட்ரோல் மற்றும் பால் வெல்லம் அற்ற) சுத்திகரிக்கப்பட்ட பாற்புரதம் மற்றும் சோயாப்புரதம் கொண்ட சமனிலைக் கலவையினால் ஆனது.

ஷொண்டமீல்- ஒரு ஸ்கூப்பினால் கிடைக்கும் சக்தியினளவு (38kCal) மிகக் குறைவானது.



**05) உடல் எடைக்குறைப்பிற்கான தீர்வுப் பொதி**

- உடலுக்குக் குறைந்தளவு சக்தியை வழங்கி சிறந்த நார்ப்பொருட்களினுதவியுடன் பசியின்மையை ஏற்படுத்துவதோடு ஒரு காலை ஆகாரத்திற்கு சிறந்த மாற்றீடாக அமைகின்றது.

மேலதிக விசாரணைகளுக்கு, எமது அலுவலகத்தின் கடமையாற்றும் முழு நேரப் போசணையியலாளர்களை (Health Consultants) தொடர்பு கொள்ளவும்.

இவ்வாரோக்கியப் பொதிகள் பாவனை சம்பந்தமான அறிவுரை மும்மொழிகளிலும் வழங்கப்படும்.

**Hot Line 2 34 00 40**






**fkc I ASIA (PRIVATE) LTD**

Sayuru Sewana, South Wing, 4th Floor, Nawam Mawatha, Colombo 02

Tel: +94 11 4380170, Fax: +94 11 4641789

Web: www.fkcn.com

Sri Lanka Ayurveda · GMP · FDA · ISO 9001

இப்பத்திரிகை இன்ஃபோமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 14.09.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

# fkc உலக மக்களின் ஆரோக்கியத்தின் காவலன்

ஐக்கிய அமெரிக்காவின் கலிபோர்னியாவைத் தளமாகக் கொண்ட F(riendship) K(indness) C(are) International ஆனது ஏறக்குறைய கடந்த ஒரு தசாப்த காலமாக உலகத்திற்கு ஆரோக்கியத்தைக் கொண்டுவரும் ஒரு தூர நோக்கு சிந்தையுடன் தமது இயற்கையான மூலப்பொருட்களிலிருந்து தயாரிக்கப்பட்ட ஆரோக்கியமான உணவுக்குறை நிரப்பிகளை முழு உலகத்திற்கும் அறிமுகம் செய்து வைத்து அதன் பலாபலன்களை, வாடிக்கையாளர்களின் ஆரோக்கியத்திலேற்பட்ட குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம் மூலமாக இமாலய வெற்றியையும் காண வைத்துள்ளது. இக்குறிக்கோளை அடைவதற்குப் பாரிய பின்னணியாக நாற்பதிற்கு மேற்பட்ட நாடுகளில் இப்பன்னாட்டுக் கம்பனி இயங்கி வருவதுடன் இலங்கையுட்பட ஆறு நாடுகளில் தமது பிராந்திய அலுவலகங்களையும் நிறுவியுள்ளது. மேலும் உலகெங்கிலுமுள்ள மக்கள் ஒரே நேரத்தில் நேரடியாக இணையத்தளமூடாக FKC உற்பத்திகளைக் கொள்வனவு செய்ய இங்கு இலகு வழிவகை செய்யப்பட்டிருப்பதுடன் அவற்றை வீட்டுக்கு வீடு விநியோகிக்கவும் (Door to door delivery) வசதிகளாக்கப்பட்டுள்ளது.

FKC யின் உலகத் தரம் வாய்ந்த இயற்கையான உணவுக்குறை நிரப்பிகள் (Natural Health Supplements) எமது அன்றாட உணவில் ஏற்படுகின்ற போஷணைக் குறைபாடுகளை பக்க விளைவுகளைத் தோற்றுவிக்காத வகையில் நிவர்த்தி செய்து நீண்ட மகிழ்ச்சியான ஆரோக்கியமான வாழ்விற்கு எங்களை இட்டுச் செல்ல பேருதவி புரிகின்றது என்றால் அது மிகையாகாது. இன்று எங்கள் மத்தியிலுள்ள பொதுவான ஆரோக்கியப் பிரச்சினைகளான துரித வயதாதல், நீரிழிவு, உயர் குருதி அழுக்கம், உயர் கொலஸ்ட்ரோல், உடல் எடை அதிகரிப்பு, மூட்டுவாதம் போன்ற மூட்டு சம்பந்தமான பிரச்சினைகள், இருதயக் கோளாறுகள், கேஸ்ட்ரைடிஸ், குடற்புண் மற்றும் குடற்புற்று நோய் போன்ற வயிறு மற்றும் குடல் சம்பந்தமான பிரச்சினைகள், கல்லீரல் சம்பந்தமான பிரச்சினைகள், ஒஸ்டியோபொரோசிஸ், கட்காசம், மூலநோய் மற்றும் இன்னோரன்ன ஆரோக்கியம் சம்பந்தமான பிரச்சினைகளிலிருந்து ஆரோக்கியத்தை இயற்கையான ரீதியில் விருத்தி செய்ய உதவுகிறது. இதற்கு மேலதிகமாக உலகளாவிய ரீதியில் நாம் அனைவரும் எதிர்நோக்கும் இன்னொரு பிரச்சினை சூழல் மாசடைதலாகும். இயற்கையற்ற மேலதிக சேர்க்கைகளைக் (Additives) கொண்டு தயாரிக்கப்பட்ட உணவுப்பொருட்களால் எமதுடல் குறை போஷணையை (Undernourished) எதிர்நோக்குகிறது. ஆனால் அதிஷ்டவசமாக FKC யின் உறுதுணையுடன் எங்கள் மத்தியில் இன்றுள்ள தெரிவானது, வயதாதலின் விளைவுகளைக் குறைக்கவும், சில சந்தர்ப்பங்களில் இழந்த உடற் தேகாரோக்கியத்தை மீளப் பெற்றுக் கொள்ளவும் உதவுகிறது.

மேற்கண்ட ஆரோக்கிய விளைவுகளை சிறந்த வினைத்திறன் வாய்ந்த முறையில் உடலுக்கு வழங்குவதற்கு FKC பின்வரும் ஆறு(06) ஆரோக்கியத் தீர்வுப் பொதிகளைத் தமது விஞ்ஞானிகள், வைத்தியர்கள் மற்றும் போஷணைவியலாளர்கள் கொண்ட நிபுணர் குழுவொன்றின் தீவிர முயற்சி மற்றும் கண்காணிப்பின் கீழ் வடிவமைத்து வாடிக்கையாளர் பாவனைக்குத் தந்துள்ளது.


## FKC யின் ஆரோக்கியத் தீர்வுப் பொதிகள்

**01)வயதாதலைக் கட்டுப்படுத்தவும் உடல் நச்சகற்றலுக்குமான ஆரோக்கியத் தீர்வுப்பொதி**

* இளமையில் வயதாதல் (Premature Aging) மற்றும் துரித வயதாதலைக் கட்டுப்படுத்த உதவி சருமத்திற்கும் மற்றும் முகத்திற்கும் புதுப்பொலிவையும் புத்துணர்ச்சியையும் வழங்க உதவுகிறது.

*கல்லீரலின் மூலம் உடலின் நச்சகற்றல் செயன்முறையை இலகு படுத்துவதனால் உடல் வினைத்திறனை அதிகரிக்கின்றது.

*உடலுக்குத் தேவையான விற்றமின் மற்றும் கனியுப்புக்களை வழங்கி உடலின் சீரான மற்றும் நேர்த்தியான செயற்பாட்டிற்கு உதவுகிறது.




**02) ஆரோக்கியமான இதயத் திற்கான தீர்வுப்பொதி**

* இதயத் தசைகளுக்கு சக்தியை அளித்து அவற்றை ஆரோக்கியமானதாக்க உதவுகின்றது.

* இதயத் துடிப்பை சீரானதாக்க உதவுகிறது.

*உடலுக்குத் தீங்கு செய்யும் கொலஸ்ட்ரோல் மட்டத்தைக் குறைக்க உதவுகிறது.

*இருதய நோய்களுக்கு ஏது செய்யும் காரணிகளின் மட்டத்தை குருதியில் குறைக்க உதவுகிறது.

**03) ஆரோக்கியமான வயிறு மற்றும் சமிபாட்டிற்கான தீர்வுப்பொதி**

* வயிறு மற்றும் சமிபாட்டுத் தொகுதியின் நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்க உதவுகிறது.

* கேஸ்ட்ரைடிஸ், குடற்புண் (Ulcer) மற்றும் குடற் புற்றுநோய் போன்ற நோய்களிலிருந்து நிவாரணம் பெற உதவுகிறது.

* அஜீரணம் மற்றும் சகல விதமான வயிறு சம்பந்தமான கோளாறுகளிலிருந்தும் மீட்சி பெற உதவுகிறது.

*சமிபாட்டுத் தொகுதியில் நன்மை செய்யும் பற்றீரியாக்களினளவை அதிகரித்து நல்ல ஜீரணத்திற்கு உதவுவதோடு ஒவ்வாமை, சளித்தொல்லை, முகப்பரு மற்றும் இன்னோரன்ன தொற்றுக்கள் போன்ற உடலுக்குத் தீங்கு செய்யும் பற்றீரியாக்களின் மூலம் ஏற்படும் பிரச்சினைகளிலருந்து நிவாரணம் பெற உதவுகிறது.

**04) ஆரோக்கியமான எலும்பு, தசை மற்றும் மூட்டுகளுக்கான தீர்வுப்பொதி**

* மூட்டு, எலும்பு மற்றும் தசைகளின் முழுமையான ஆரோக்கியத்திற்குத் தேவையான போஷணையை வழங்க உதவுகிறது.

* மூட்டுகளில் வீக்கம், நோவு மற்றும் மூட்டுவாதம் என்பவற்றிலிருந்து மீட்சி பெற உதவுகிறது.

* இழந்த மூட்டுக்களின் மீள்தன்மையை (Flexibility) மீள் வருவிக்க உதவுகிறது.

**05) உடல் எடைக் குறைப்பிற்கான தீர்வுப் பொதி**

* உடலுக்குக் குறைந்தளவு சக்தியை வழங்கி நாளாந்த உணவிலிருந்து பெறப்படும் சக்தியினளவை வெகுவாகக் குறைக்கின்றது.

* தரமுயர்ந்த நார்ப்பொருட்கள் அடங்கியிருப்பதனால் வயிறு நிரம்புவதுடன் பசியின்மையையும் ஏற்படுத்துகின்றது.

* உயர்தரமான புரதக்கூறுகள் (சுத்திகரிக்கப்பட்ட பால் மற்றும் சோயாப் புரதம்) ஜீரணத்தின் போது சக்தி விரயத்தை அதிகரிக்கிப்பதனால் உடல் எடைக் குறைவிற்கு உதவுகிறது.


**06) உடலுள அமைதி மற்றும் ஆழ்ந்த தூக்கத்திற்கான தீர்வுப் பொதி**

*நல்ல தூக்கத்தைத் தருவிக்கும் ஹோர்மோன்களின் சுரப்பைத் தூண்டுகின்றது.


*மூளை, நரம்புகள் மற்றும் தசைத்தொகுதியை ஆறுதற்படுத்தி நல்ல மனநிலையை ஏற்படுத்துகின்றது.

இதற்கு மேலதிகமாக இலங்கையில் சுமார் ஒன்றரை வருடங்களுக்கு முன் காலடி பதித்த இந்நிறுவனமானது FKC I Asia (Pvt) Ltd என்ற தனது தெற்காசியப் பிராந்திய அலுவலகத்தினை இங்கு நிறுவி அதன் மூலம் பன்முகப்படுத்தப்பட்ட தனது சேவையை வழங்கி வருகின்றது. புற்று நோயாளர்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் வகையில் மஹரகம புற்றுநோய் வைத்தியசாலை நோயாளிகளுக்குத் தமது உற்பத்திகளை அண்மையில் இலவசமாக விநியோகித்ததுடன் தமது ஓராண்டுப் பூர்த்தியை நினைவு கூரும் வகையில் மத்திய சுற்றாடல் அதிகார சபையுடன் இணைந்து ஐம்பது நா மரங்களை பாராளுமன்ற மைதானத்திற்கு முன் நட்டு சூழல் மாசடைவதைத் தடுப்பதற்கான ஒரு முன்னோடியான முயற்சியை மேற்கொண்டுள்ளது. மேலும் சுதேச வைத்திய அமைச்சின் உதவியுடன் ஆரோக்கிய வைத்திய முகாம்களை (Medical Health Camps) மாதந்தோறும் நடாத்தி வருவதுடன் அங்கவீனர்களுக்கும் மற்றும் சமூகத்தில் வறிய மட்டத்தில் இருப்போருக்கும் அவர்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகளைப் போக்கும் வகையில் தமது ஒன்றிணைந்த சமூகரீதியான பொறுப்புக்கூறும் (Corporate Social Responsibility) திட்டம் மூலம் உதவிகளைச் செய்து வருகின்றது.

# இன்றைய ஈழத்தமிழ் தேசியவாதமும் எதிர் வினைகளும்



தமிழ்த்தேசியவாதம் என்பது தனியே அரசியல் கோரிக்கை மட்டுமல்ல அக்கோரிக்கை சார்ந்து செயற்படுபவர்கள் அதன் ஆழத்தை முழுமையாக



உணர்ந்து கொள்ள வேண்டும். தேசியவாதக் கோரிக்கையின் உள்ளடகத்தை அல்லது அது உள்ளடங்கும் பகுதிகளை அதன் சட்டகத்தின் எல்லைகளை அறிந்து வைத்திருக்க வேண்டியது அவசியமானது. அக்கோரிக்கை கடந்த காலங்களில் ஏற்படுத்திய பாதிப்புக்கள் எவை? அக்கோரிக்கையின் சில நடைமுறைகளால் பாதிப்பிற்கு உள்ளாகக் கூடிய தரப்புக்கள் எவை? என்பது போன்ற விடயங்களை மிகத்தெளிவாக வரையறை செய்யும் போதே அதன் ஆரோக்கியமான திசைவழியைத் தீர்மானிக்கக்கூடியதாக இருக்கும். இவ்வகையான தீர்மானங்களுக்கு வராமல், 70 களில் அல்லது 80 களில் இருந்திருக்கக்கூடிய விடயத்தைத் தூசு தட்டி எடுத்து, காவுவது நிச்சயமாகக் சரியான அறுவடையைத் தரப்போவதில்லை. அதுமாத்திரமன்றி, குறித்த அரசியல் கோரிக்கைக்குள்ள உண்மையான தேவையையும், காரணங்களையும் படிப்படியாக இல்லாததாக்கும் சூழலை உண்டு பண்ணும் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். இல்லையெனில், நாம் வரலாற்றில் இருந்து எதையும் படிக்கைவில்லை என்றே கருத வேண்டும்.

இக்காலத்தைய தமிழ்த்தேசியவாதத்தின் பிரயோக வடிவம் "ஒரே நேரத்தில் கட்டவிழ்ப்பு அணுகு முறையும் ஆக்கவூர்வமான அணுகுமுறையும் தமது பிரயோக நடைமுறையாகக் கொண்டிருக்க வேண்டிய சந்தர்ப்பத்தை "உலக சிந்தனை போக்கு" உருவாக்கியுள்ளது. இந்த முரணியக்கமே பின்- காலனித்துவ தேசங்களது - தற்காலத் தேசியவாதத் தின் ஆரோக்கியமான பண்பாக இருக்க முடியும்."


இலங்கையில், தமிழ்த்தேசியம் என்ற சட்டகத்திற்குள் வரக்கூடியவர்கள் அல்லது குறித்த சட்டகத்துடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருக்கும் சமூகங்கள் எவை என்பது தொடர்பானதுமான புரிதலை மேம்படுத்த வேண்டியுள்ளது. முஸ்லிம் மற்றும் மலையக சமூகங்கள் சார்ந்த புரிதலை கடந்த 30 ஆண்டு களில் வளர்த்துள்ளோம்? இன்று தமிழ்த்தேசியக் கோரிக்கையை முன்னெடுப்பவர்கள் மேற்படி சமூகங்கள் சார்ந்து எவ்வகையான நிலைப்பாடுகளில் உள்ளார்கள்? அதற்கு எவ்வகையான நடவடிக்கைகளை எடுக்கப்பட்டிருக்கின்றது? போன்ற விடயங்கள் தொடர்பாக எவ்விதமான தயக்கமுமற்று உரையாட வேண்டியுள்ளது. எமக்கருகில் உள்ள தமிழ்நாட்டிலும் உலகச்சிந்தனைப் போக்கிலும் சமகாலத்தில் உரையாடப்படும் விடயங்களை வெறுமனே எமது அரசியல் கோரிக்கையை பலவீனமாக்கும் செயற்பாடுகள் என்று நிராகரித்துவிட்டு நகருபவர்கள் தமிழ்த்தேசியம் தொடர்பான அக்கறையற்றவர்கள் என்றே கருத வேண்டும்.

தேசியவாதம் இயங்கும் முறையை நாம் தெளிவாக இனங்கண்டுகொள்ள வேண்டும். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தேசியவாதம் முற்போக்கான வடிவில் இயங்குவதில்லை. சமூகத்தின் அடையாள உறுதியாக்கம் நிகழ்ந்த போது - அதன் வெளிப்பாட்டு வடிவமாகவே இக்கோரிக்கை முதன்மை பெற்றிருக்க முடியும். வரலாற்றுப் போக்கில், தமிழ்த்தேசியம் என்ற அடையாள உறுதியாக்கம் ஒற்றைப் பரிமாணமானதல்ல. பல்வேறுபட்ட வாழ்முறைகளினது வித்தியாசங்களது கூட்டிணைவினால் உருவாகிய அடையாள உறுதியாக்கம். தேவைகள் - அரசியல் கோரிக்கைகள் போன்றவற்றால் உருவாகியிருக்கக்கூடியது. தொடர்ச்சியான இயக்கத்தில் ஒற்றை பரிமாணத்தை முதன்மைப்படுத்த எத்தனிக்கும். உலகில் உள்ள அனைத்துத் தேசியவாதங்களினது தவிர்க்க முடியாத பிற்போக்கான பாத்திரமே இதுதான். ஒருகட்டத்தில் ஒற்றைப் பரிமாணத்தை அடையும் தேசியவாதம் - அதே மூர்க்கத்தோடு மேலிருந்து கீழாக இயங்கத் தொடங்கும். இதன் போது ஒவ்வாமைகளுடனும் தனித்துவங்களுடமிருக்கின்ற சமூகங்களை தனது பரப்பிற்குள் அபகரித்துக் கொள்வது மாத்திரமன்றி - தனது கோரிக்கைகளையும் ஒற்றை அடையாளத்தையும் வித்தியாசங்களை மறுத்துத் திணிக்கத் தொடங்கும் தன்மை கொண்டது. அதற்கான கருத்தியல் ரீதியான நியாயத்தை, பிரயோகிப்பவர்களுக்குக் கொடுக்கக் கூடியது. அதை இயக்க முற்படுபவர்களது கைகளைத் தாண்டி தானாக - மூர்க்கமாக இயங்கும் வல்லமை தேசியவாதத்திடம் உண்டு. தேசியவாதத்தைக் கையாளுபவர்கள் இப்புரிதலை வளர்த்துக் கொள்ள வேண்டியது மிக அவசியமானது.

இன்றுள்ள சூழலில், தமிழ்த் தேசியவாத உணர்வையும் அதன் வெளிப்பாட்டையும் மறுக்க முடியாத நிலமை உள்ளது. இன்றுள்ள தமிழ்த் தேசியவாதக் கூறுகளின் கணிசமான பகுதி, சிங்கள பெருந் தேசியவாதத்தின் எதிர்வினையென்பதை மறுக்க முடியாது. ஆக, தேசியவாதத்தை "உள்வாங்கும்" தன்மை கொண்டதாக எவ்வாறு கட்டியமைக்க முடியும் என்ற பகுதிக்குள் புகவேண்டியுள்ளது. பன்மைத்துவக் கூறுகள் நிரம்பியதாக - போதுமானளவு ஜனநாயக வெளிகள் நிரம்பியதாக எவ்வாறு வளர்த்துச் செல்ல முடியும் என்ற வகையிலும் சிந்திக்க வேண்டியது அவசியமாகின்றது. தேசியவாதம், தன்னைச் சிதைத்துக் கொண்டும் நகர வேண்டியதன் அவசியமும், தேசியவாதத்தின் முதன்மைக் குணாம்சமே.

ஒருவரது அரசியல் நிலைப்பாடுகளை தெளிவாக வரையறை செய்து அணுக முடியாது. அரசியல் நிலைப்பாடுகள் நிறமாலை போன்றது. வெவ்வேறு கற்றைகளுக்குள் அலைந்து திரியும் தன்மை கொண்டது. தீவிர தமிழ்த் தேசிய நிலைப்பாட்டு வரையறைக்குள் தம்மை நிலைநிறுத்திக் கொள்பவர்கள் எதிர் தீவிர தமிழ்த்தேசிய எதிர்ப்பு வரையறைக்குள் தம்மை நிலைநிறுத்திக் கொள்பவர்கள் என்ற இருவகை அரசியல் நிலைகளை வைத்துக் கொண்டுதான் சகலதையும் பார்க்க வேண்டிய துரதிஷ்டவசமான நிலையில் உள்ளோம். எவ்வாறிருப்பினும், அரசியல் அக்கறை குறைந்த - அரசியல் அக்கறை தொடர்பில் தமது நிலைப்பாடுகளை குறித்த எல்லைக்குட்படுத்திக் கொண்ட "மூன்றாவது தரப்பு" எப்போதும் பெருமளவான எண்ணிக்கையாக இருந்து கொண்டேயிருக்கும். அதாவது, மேற்கூறிய இரண்டு தரப்புக்களையும் இரண்டு எதிரெதிர் புள்ளிகளில் நிலைநிறுத்துவோமேயாக இருந்தால் இடையில் உள்ள ஏராளமான புள்ளிகளில் அலைவுறுவோரின் எண்ணிக்கையே அதிகமானது. கறுப்பு - வெள்ளை பிரதேசங்களில் இயங்கும் - எவருடைய வெற்றியும் கறுப்பும் வெள்ளையும் அல்லாத சாம்பல் வெளியில் உள்ளவர்களாலேயே தீர்மானிக்கப்படுகின்றது. அதாவது, தனது கருத்தியல் வெற்றி பெற வேண்டும் என்று உண்மையாகவே நினைக்கும் தரப்பு - சாம்பல் வெளிகளை வெற்றி கொள்வதைப் பற்றிய அக்கறையுடன் செயற்படும். அதற்கு மாறாக, வெளியொதுக்கலுடன் கூடிய மனதுடன் இயங்கும் தரப்பிற்குத் தனது கருத்தியல் சார்ந்த அக்கறையை விட - வெறுமனே தனது இருப்பு சார்ந்த அக்கறையே அதிகமானதாக இருக்கும்.

இன்று, தம்மை தமிழ்த் தேசியத்தின் காவலர்களாகவும் பிரதிநிதிகளாகவும் கருதிக் கொள்ள கூடிய பலர் மூன்றாவது வெளியை வெல்வதை விடுத்து, அவ்வெளியை முற்றாக தமிழ்த்தேசியத்தில் சட்டகத்தில் இருந்து அந்நியப்படுத்தும் செயற்பாடுகளை



மேற்கொண்டு வருவதை காணக்கூடியதாக உள்ளது. இதனாலேயே, தேசியவாத்தின் அடிப்படைக் குணாம்சத்தைத் தெரிந்து வைத்துக் கொண்டே அதனை கையிலெடுக்க வேண்டும். உண்மையான செயற்பாட்டாளனுக்கே, பல தரப்புக்களையும் வெற்றி கொள்ள வேண்டியதன் அவசியமும்- அதன் தேவையும் புரியக் கூடியதாக இருக்கும். தமிழ் மக்கள் சார்ந்து அக்கறை உள்ளவர்கள் நிச்சயமாக பல்வேறு தரப்புக்களையும் வெற்றி கொள்வதைப் பற்றி யோசிக்கத் தொடங்க வேண்டும். தமிழ் நாட்டில் உள்ள தமிழர்கள் போன்று ஈழத்தமிழர்களும் - அதே பாணியில் "வெளியொதுக்கலுடன" கூடிய அரசியலை முன்னிறுத்தி வருவது ஆபத்தானது. முற்றுமுழுதாக தமிழ்நாட்டு அரசியலில் இருந்து வேறுபட்ட - ரத்தமும் சதையுமான அரசியல் நம்முடையது. "வெளியொதுக்கல்" அணுகுமுறையால் நாம் எதனையும் அடைய முடியாது. எம்மிடம் இருக்க வேண்டியது மற்றைய தரப்புக்களை வெல்லும் நோக்குடன் கூடிய அணுகுமுறையே. கறாரான - அல்லது தெளிவான வரையறைகளுடன் கூடிய உரையாடல்கள் நிகழ்வது பிரச்சனையல்ல. ஆனால், அவை மற்றைய தரப்புக்களை களத்தில் இருந்து அகற்றுவதில் போய் முடிவடையக்கூடாது.

கடந்த காலங்களில் தேசியவாதம் தொடர்பான ஏராளம் உரையாடல்கள் தமிழிலேயே நடைபெற்றிருந்தது. தேசியவாதத்தின் சரி அல்லது பிழை தொடர்பாக போதுமான உரையாடல்கள் நடைபெற்றுள்ளதாகவே கருத வேண்டும். ஆயினும், அவற்றில் பெரும்பாலானவை ஒரு கருத்தியலின் உருவாக்கம் தொடர்பாகவும், நிபந்தனைகள் தொடர்பாகவும் விசேட கவனத்தைச் செலுத்தவில்லை. ஒரு கருத்தியலை அக்கருத்தியலின் தோற்றம் - பின்னணி - சூழல் போன்றவற்றுடன் இணைத்துப் பார்க்கப்பட வேண்டியது மிக அவசியமான நிபந்தனையாகும்.

உதாரணமாக மேற்கத்தைய இடதுசாரிகளின் தேசியவாதம் தொடர்பான பார்வைகள், பின்நவீன நிபந்தனைகளுடன் கூடிய தேசியவாதம் தொடர்பான பார்வைகள், பின் காலனித்துவ கால பார்வைகள் என்று பலவிதமாக வகைப்படுத்த முடியும். ஈழத்தமிழ் தேசியவாதத்தின் நிபந்தனை-களை சரியாகப் பட்டியலிடும் போது - அதன் பிரயோக வடிவம் சார்ந்து சரியான வரையறைகளுக்கு வர முடியும். வெறுமனே அமெரிக்கா, சீனா, இந்தியா என்ற அரசியல் அதிகார ஒழுங்குநிபந்தனைகளை முன்வைத்து மாத்திரம் பேசுவதில் நிறைய போதாமைகள் உண்டு. அடையாள அரசியலின் எழுச்சி, பின்னவீன - பின்காலனித்துவ கருத்தியல் தொடர்ச்சி, இறையாண்மை நோக்கிய பயணம், தேசியவாதத்தின் சக பயணிகள் போன்ற பல்வேறு நிபந்தனைகளையும் இணைத்தே இன்றைய ஈழத் தமிழ்த் தேசியவாத்தின் பிரயோக வடிவத்தை மீள்வரையறை செய்ய முடியும்.

**நன்றி: இணையம்.**

19ஆம் திகதி விநாயகர் சதுர்த்தி விரதம்

# வெவ்வினையை வேரறுக்கவல்ல விநாயகப் பெருமான்



எந்தவொரு கருமத்தைத் தொடங்கும் போதும், சைவர்களாகிய நாம் விநாயகரை வழிபடுவதை எமது வழக்கமாக்கிக் கொண்டுள்ளோம். விநாயகரை வழிபட்டுத் தொடங்கும் கருமங்கள் எல்லாம் எந்தவித தடையன்றித் தொடருமென்பது சைவர்கள் நம்பிக்கை. விக்கினங்களை நீக்குபவன் என்பதால், இடையூறுகள் இடையே புகுந்து குறுக்கீடு செய்யாத வகையில் காத்தருள வேண்டுமென வேண்டிக் கொள்வது போன்று ஆரம்பத்திலேயே விநாயகருக்கு வணக்கம் செலுத்துகின்றோம். இந்த எண்ணத்தின் பிரதி பலிப்பாகவே அவரை விக்னேஸ்வரன் என்று அழைக்கப்படுகிறது.

வயிரவர் வழிபாடு போன்று விநாயக வழிபாடும் எளிதானது. அதைவிட எளிதானது என்று கூடச் சொல்லலாம். ஆல், அரசு முதலான மரத்தடிகளிலும் ஆற்றங்கரை, குளத்தங்கரை, தெருக்களின் சந்திப்பு முதலான இடங்களிலும் விநாயகரை வழிபடுகின்றோம். பசுவின் சாணி, மஞ்சள், மா, சந்தனம் முதலியவை கொண்டு பிள்ளை [illegible]ர் பிடிக்கலாம். அதிலே [illegible]றுகைச் சாத்தி வழிபடமுடியும்.


விநாயகரை வழிபடும்போது மூன்றுமுறை சிரசிலே குட்டி, வலக்கையால் இடக்காதையும் இடக்கையால் வலக்காதையும் பிடித்துக் கொண்டு மூன்று முறை தோப்புக்கரணம் போட்டு வணங்குவது உவப்பான வழிபாடாகும். உடல் நலமில்லாதவர்கள் தோப்புக்கரணம் போட்டு வழிபடுதலை தவிர்த்துக் கொள்ளலாம்.

விநாயகரை நினைந்து அனுட்டிக்கப்படக்கூடிய சிறப்பான விரதங்கள் மூன்றாகும். அவற்றுள் விநாயகர் சதுர்த்தி சிறப்பானதெனச் சிந்திக்கப்படும். மாதந்தோறும் சதுர்த்தித் திதி இருமுறை வரும். அவற்றில் [illegible]ய்பிறைக் காலத்திய சதுர்த்தி [illegible]கடஹர சதுர்த்தி எனப் பெயர் பெறும். துன்பந் தரும் நிலைமைகளை நீக்கிக்கொள்ள வேண்டி இந்தச் சதுர்த்தி விரதம் அனுட்டிக்கப்படுகிறது. ஆவணி மாத வளர்பிறைக் காலத்திய சதுர்த்தியே விநாயக சதுர்த்தி எனப்படும். விநாயகர் தோன்றிய தினம் அது என்பதொரு கருத்து நிலவுவதே அதற்கான காரணமாகலாம். விநாயக சதுர்த்தி விரதம் அனுட்டிக்க விரும்புவோர் ஆவணி மாதத்து வளர்பிறைக் காலத்திய சதுர்த்தியிலே ஆரம்பித்து, மாதந்தோறும் வரும் சதுர்த்தித் திதிகளிலும் தொடர வேண்டும். இப்படி இருபத்தொரு ஆண்டுகள் விரதமிருக்கலாம். இருபத்தொரு ஆண்டுகள் தொடர்ந்து விரதத்தை அனுட்டிக்க முடியாதவர்கள் ஏழு ஆண்டுகள் ஆயினும் தொடர்ந்து அனுட்டித்து நிறைவு செய்யலாம். அதுவும் முடியவில்லை யெனில் இருபத்தொரு சதுர்த்தித் தினங்களுக்குக் குறையாது விரதத்தைக் கைக்கொண்டு அடுத்து வரும் விநாயக சதுர்த்தியிலே நிறைவு செய்யலாம்.

விரதமிருப்போர் அதிகாலை நித்திரை விட்டெழுந்து செய்ய வேண்டிய காலைக்கடன்களை முடிக்கும் வகை நித்திய கரும விதிகளை நிறைவு செய்து, வீட்டில் ஓரிடத்தைப் புனிதப்படுத்தி மலர் மாலை, தோரணம் என்பவற்றால் அலங்கரித்து விநாயகரை எழுந்தருளப்பண்ணி வழிபடலாம். விநாயகர் திருவுருவை வசதிக்கேற்ப, சாணம் மஞ்சள் மா கொண்டும் அமைக்கலாம். தங்கம் வெள்ளி என்பவற்றால் ஆக்கப்பட்ட திருவுருவையும் பயன்படுத்தலாம். தோத்திர பாராயணம், நிவேதனம், தீபாராதனை என்பன செய்து வழிபடலாம். இருபத்தொரு பத்திரம், இருபத்தொரு பூ, இருபத்தொரு அறுகம்புல் என்பவை கொண்டு தனித்தனியாக அர்ச்சித்தல் சிறப்பானதென்பர். பின்னர் ஆலயமொன்றுக்குச் சென்று சுவாமி தரிசனஞ் செய்தபின் மதிய உணவு கொள்ளலாம். இரவு உணவைத் தவிர்த்தல் நல்லது. விட முடியாதவர்கள் பால் பழம் அல்லது பலகார வகை உண்ணலாம்.

*- எம்.எஸ். ஸ்ரீதயாளன்*
*(அர்த்தமுள்ள சம்பிரதாயங்கள்)*

## ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த மகோற்சவம்



வரலாற்றுச் சிறப்புமிகு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானத்தின் வருடாந்த மகோற்சவம் இன்று (14.09.2012) வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 17 நாட்கள் நடைபெறவிருக்கிறது.

இம்மாதம் 27ஆம் திகதி (வியாழக்கிழமை) சப்பரத் திருவிழாவும், மறுநாள் 28ஆம் திகதி (வெள்ளிக்கிழமை) இரதோற்சவமும், 29ஆம் திகதி (சனிக்கிழமை) சமுத்திர தீர்த்தமும், 30ஆம் திகதி (ஞாயிற்றுக்கிழமை) கேணித் தீர்த்தமும் இடம்பெறும்.

ஆலய சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் இடம்பெற்றுவரும் வாராந்த ஆன்மீக நிகழ்ச்சித் தொடரில் எதிர்வரும் 16ஆம் திகதியன்று கு. விக்னேஸ்வரன் "இறை தியானம்" என்ற பொருளிலும், 23ஆம் திகதியன்று செஞ்சொற்செம்மல் இரா.கேதீஸ்வரன் "சிறியன் சிந்தியாதான்" என்ற பொருளிலும், 30ஆம் திகதியன்று ரி.ரி. சண்முகநாதன் "சனாதன தர்மம்" என்ற பொருளிலும் நிகழ்த்தும் சொற்பொழிவுகள் இடம்பெறவிருக்கின்றன.

# சமய தீபம்

## வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் வருடாந்த மகோற்சவம்


யாழ் மாநகரின் வண்ணையம் பதியில் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாளின் வருடாந்த மகோற்சவப் பெருவிழா எதிர்வரும் 17ஆம் திகதி (திங்கட்கிழமை) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. அன்றைய தினம் காலை 10.00 மணிக்கு கொடியேற்றக் கிரியைகள் இடம்பெறும்.

இம்மாதம் 25ஆம் திகதி (செவ்வாய்க்கிழமை) காலை 9.30 மணிக்கு இரதோற்சவமும், மறுநாள் 26ஆம் திகதி காலை 9.00 மணிக்கு தீர்த்தோற்சவமும், 27ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு திருவூஞ்சல் உற்சவமும் நடைபெறவிருக்கின்றன.

தினமும் பகல் உற்சவம் காலை 9.30 மணிக்கு ஸ்தம்ப பூஜையுடன் ஆரம்பமாகி, 10.15 மணிக்கு வசந்த மண்டபப் பூஜை நடைபெற்று சுவாமி வீதிவலம் வருதல் நிகழும். இரவு உற்சவம் மாலை 5.00 மணிக்கு ஸ்தம்ப பூஜையுடன் ஆரம்பமாகி 6.00 மணிக்கு வசந்த மண்டபப் பூஜை நடைபெற்று சுவாமி வீதிவலம் வருதல் நிகழும்.

ஈழத்து திருப்பதி எனப் போற்றப்படும் இவ்வாலயம் நூற்றாண்டு காலத்திற்கும் மேற்பட்ட வரலாற்றுப் பெருமை கொண்டது.

## வேலணை சாட்டி சிந்தாதிரை மாதா பெருவிழா



கத்தோலிக்க மக்களின் யாத்திரைத் ஸ்தலங்களின் ஒன்றான வேலணை-சாட்டி சிந்தாதிரை மாதா ஆலய வருடாந்தப் பெருவிழா நாளை (15ஆம் திகதி) சனிக்கிழமை காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

ஆலயத்தில் கடந்த ஒன்பது தினங்களாக நவநாள் வழிபாடுகள் இடம்பெற்று வரும் வருகின்றன. இதனை அயலில் உள்ள பங்கு மக்கள் சிறப்பாக நடத்தி வருகின்றனர்.

இன்று (வெள்ளிக்கிழமை) மாலை நற்கருணைத் திருவிழாவும், நாளை (சனிக்கிழமை) காலை யாழ்.மறைமாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் கூட்டுத் திருப்பலித் திருவிழாவும், தொடர்ந்து திருச்சொருப பவனியும் இடம்பெறவுள்ளது.

*(தகவல்: டொ. ஜீவகன்)*

# இவ்வார சமய நிகழ்வுகள்

**இந்துக்களுக்குரிய விசேட தினங்கள்**

15.09.2012 சனி: அமாவாசை விரதம்
16.09.2012 ஞாயிறு: ஆவணி கடைசி ஞாயிறு
17.09.2012 திங்கள்: புரட்டாதி மாதப் பிறப்பு
19.09.2012 புதன்: விநாயகர் சதுர்த்தி விரதம்

**கிறிஸ்தவர்களுக்குரிய விசேட தினங்கள்**

14.09.2012 வெள்ளி: திருச்சிலுவை மகிமை விழா
15.09.2012 சனி: வியாகுல அன்னை நினைவு

## கிறிஸ்தவ நற்சிந்தனை

- நேர்மையாளரின் வழி வாழ்வு தரும். முரணானவரின் வழி சாவில் தள்ளும்
- நேர்மையாக நடப்போரை நீதி பாதுகாக்கும். பொல்லாரை அவர்களின் பாவம் கீழே வீழ்த்தும்
- கடும் உழைப்பு எப்போதும் பயன் தரும். வெறும் பேச்சினால் வருவது வறுமையே
- சோம்பேறிக்கு எவ்வழியும் முள்நிறைந்த வழியே. சுறுசுறுப்பானவர்கள் செல்லும் பாதையோ நெடுஞ்சாலையாகும். கனிவான மொழி கடும் சினத்தையும் ஆற்றிவிடும், கடுஞ் சொல்லோ சினத்தை எழுப்பும்

*- ரிஷானி அலோசியஸ்*
*புனித விவிலியத்தின் நீதிமொழிகள் நூலிலிருந்து)*

## இஸ்லாமிய நற்சிந்தனை

இஸ்லாத்தின் அடிப்படை அம்சங்களான ஐம்பெரும் கடமைகளில் மிகப்பிரதான அடிப்படையானதும் மூலாதாரமுமான ஐவேளைத் தொழுகை இஸ்லாத்தின் நுழைவாயிலாக அமையப்பெற்ற கலிமா என்ற விசுவாசக் கொள்கைக்கு அடுத்தபடியாக நோக்கப்படுவதிலிருந்து தொழுகையின் முக்கியத்துவம் நன்குணரப்படுகின்றது. சுவர்க்கத்தின் திறவுகோலான தொழுகை ஒருவரை முஸ்லிமென அடையாளப்படுத்தும் சின்னமாகவும் திகழ்கின்றது.

மறுமையில் ஓர் அடியான் முதலில் தொழுகை பற்றியே விசாரிக்கப்படுவான் (தபரானி)
தொழுகையை விடுவது குப்ருக்கு வழிவகுக்கும். கொழுந்து விட்டெரியும் நரக வேதனையை அநுபவிப்பர். (அல் குர்ஆன்)

இவ்வாறான சிறப்பம்சங்களும், நன்மைகளும் பொதிந்துள்ள ஐவேளைத் தொழுகையில் முதலாக விதிக்கப்பட்ட சிறிய எண்ணிக்கையும் குறுகிய நேரமும் கொண்ட சுபஹ் தொழுகை, அன்றாடம் மனித வாழ்வில் முதலாவதாகப் புரியப்படும் அமலாகத் திகழ்கின்றது. அதிகாலை வேளையில் நித்திரையிலிருந்து விழித்தெழுந்து இறைவனைத் தொழுதுவிட்டு அன்றாடக் கடமைகளில் ஈடுபடுவதன் மூலம் மேற்கொண்டு முன்னெடுக்கும் அனைத்து செயற்பாடுகளும் சிறப்பாக அமைவதற்கு அதிகாலையில் புரியும் சுபஹ் தொழுகை ஒரு உந்து சக்தியாக இருக்கிறது.

## கிருஷ்ண பரமாத்மாவின் கீதோபதேசம்



பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் இடையிலான பகையையும், அதன் விளைவாக உண்டான போரைப்பற்றியும் அறியாதவர்கள் இல்லை என்றே சொல்லலாம். இந்த மகாபாரத யுத்தத்தின்போது போர்க்களத்தில் அர்ச்சுனனுக்கு தேர்ச் சாரதியாக இருந்தவர் கிருஷ்ண பகவான்.

நீதிக்கும் அநீதிக்கும் இடையே நடந்த ஒரு மோதலாக இதனைக் குறிப்பிடுவதுண்டு. சிறுபான்மையினரான பாண்டவர்களுக்கும் பெரும்பான்மையினரான கௌரவர்களுக்கும் இடையே போர் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. போர்க்களத்தில் எதிர்த்தரப்பில் உற்றார், உறவினர்களைக் கண்ட போது அருச்சுனன் மனநிலை சலனமடைகிறது. ஆயுதங்களை நிலத்தில் போடுகிறான்.

இந்த நிலையில் தேர்ச் சாரதியாகவிருந்த கிருஷ்ணன் போர்க்களத்தில் வைத்தே அருச்சுனனுக்கு உபதேசம் செய்கிறான். அருச்சுனன் மனவலிமை பெறுகிறான். போரில் வெற்றியும் கிடைக்கிறது.

போர்க்களத்தில் கிருஷ்ணனிடமிருந்து அருச்சுனன் பெற்றுக்கொண்ட உபதேசமே பகவத்கீதையாக மலர்ந்தது.

கீதை சொல்லும் செய்தி மிகப் பெறுமதி வாய்ந்தவை, காத்திரமானவை. நாம் நமது கடமைகளை விருப்பு, வெறுப்பு இன்றிச் செய்தல் வேண்டும். சேவை செய்யும்போது பலனைக் கருதாமல் செயற்படுதல் வேண்டும். நான் எனது என்னும் அகந்தையை விடுத்து, இறைவனின் கருவி என்ற பணிவுணர்வுடன் செயலாற்ற வேண்டும். வாழ்க்கையில் உயர்மட்டம், கீழ் மட்டம் ஆகிய இரு நிலைகளிலுமுள்ள மக்களையும் சமமாக நேசிக்கும் நல்லுணர்வு வேண்டும்.

நண்பன் எதிரி என்ற வேறுபாடின்றி செயலாற்றும் மனப் பக்குவம் வேண்டும். வெற்றி தோல்வி என்ற இரண்டையும் சமமாக நோக்கும் மனவலிமை வேண்டும்.

இத்தகைய சாராம்சங்களை உள்ளடக்கியதாக அமைந்துள்ள பகவத்கீதை இந்து மக்களின் புனித நூலாகப் போற்றப்படுகிறது.

மற்ற எல்லாவற்றையும் விட அதி முக்கியமானதாகக் காற்றாடி யந்திரத்தின் தேவைகளைக் கருத வேண்டும் என்றது அது. பண்ணையின் எதிர்கால சுபீட்சம் காற்றாடி யந்திரத்தைப் பொறுத்தது என்பதனால் அது அத்தியாவசியமாயிற்று என்றது. ஆகவே வைக் கோல் போர்களில் சிலவற்றையும், அறுவடை செய்த கோதுமையில் ஒருபங்கையும் விற்கவேண்டியது என்றுதான் தீர்மானித்து விட்டதாக அறிவித்தது.

நெப்போலியன் பின்னர், இன்னும் பணம் வேண்டியதாக இருந்தால், கோழிகள் இட்ட முட்டைகளையும் விற்க வேண்டி நேரிடலாம். வில்லிங்டன் கிராமத்தில் கோழி முட்டைகளுக்கு எப்போதுமே கிராக்கியுண்டு. விலை போகும். காற்றாடி யந்திரத்தை நிர்மாணிக்க கோழிகள் செய்யும் பிரத்தியேகத் தியாகமாக இதை எண்ணி, அவை ஏழேழு ஜன்மத்துக்கும் பெருமைப்படலாம் என்றது நெப்போலியன். மீண்டும் மிருகங்களிடையே ஒரு அதிருப்தியும் அவநம்பிக்கையும் தலைதூக்கின.

மனிதர்களுடன் எந்த மாதிரியும் பழகுவதில்லை, வியாபாரத்தில்




எக்காரணம் கொண்டும் ஈடுபடுவதில்லை. பணத்தைக் கையிலும் தொடுவதில்லை - என்பவையெல்லாம் புரட்சிக்கே ஆதாரமான கொள்கைகள் அல்லவா? ஜோன்ஸை அடித்து விரட்டியவுடன் மிருகங்கள் கூடித் தீர்மானித்துக் கொண்ட அடிப்படை விஷயங்கள் அல்லவோ அவையெல்லாம்? விலங்குப் புரட்சி வெற்றியின் அஸ்திவாரமே அவை தானே? இப்படித் தீர்மானங்கள் செய்த விஷயம் பல மிருகங் களுக்கும் நன்றாகவே ஞாபகம் இருந்தது. அல்லது ஞாபகம் இருப்பதுபோல இருந்தது.


நெப்போலியன் விவாதக் கூட்டங்கள் தேவையில்லை என்று சொன்னபோது, அதை எதிர்த்து இரண்டு வார்த்தைகள் கூறிய நான்கு வாலிபப் பன்றிகள் இப்போதும் அதிகத் தெம்பில்லாமல், இது பற்றித் தங்கள் சந்தேகங்களை வெளியிட்டன. ஆனால் அவர்களைப் பார்த்து வேட்டை நாய்கள் உறுமத் தொடங்கியவுடனே வாயை மூடிக்கொண்டு விட்டன.

உடனே ஆடுகள் "நாலுகால் நல்லது, இரண்டுகால் கெட்டது" என்கிற பாட்டைத் தொடங்கியதும், துணிச்சலற்ற எதிர்ப்புக் குரல்கள் யார் காதிலும் விழவேயில்லை. யாரோ எதிர்த்தார்கள் என்கிற அசட்டுக் காரியமே அமுங்கிப் போய்விட்டது. கடைசியில் மௌனமாக இருங்கள் என்பதற்கு அறிகுறியாக நெப்போலியன் ஒரு காலைத் தூக்கிக் காட்டிவிட்டு ஏகமனதாக நிறைவேறிய இந்தத் தீர்மானத்தின்படி செயலாற்ற வேண்டியதற்கான வழிகளெல்லாம் ஏற்கனவே செய்யப்பட்டுவிட்டதாக அறிவித்தது.

விலங்குகளில் எதுவும் எந்த மனிதனையும் அணுகவேண்டிய அவசியமே கிடையாது. அப்படி நேர்ந்தால் அது நல்லதற்கல்ல என்கிற அபிப்பிராயத்தை அது ஆணித்தரமாகத் தெரிவித்தது.

(திங்கள்)

## வரைவோம் வாருங்கள்!



# நாயும் முதலையும்

நாய்க்குத் தாகம் அதிகமாய் இருந்தது. ஆற்றில் போய்த் தண்ணீர் குடிக்கலாம்.

ஆனால் அதில் முதலைகள் இருந்தபடியால் அங்கே போகப் பயந்தது. அதற்காக ஒரு தந்திரம் செய்தது. கரையோரமாக ஓடிக் கொண்டே இடையிடையே தண்ணீரை நக்கியது.


இதைப் பார்த்த முதலை, "ஏன் இவ்வளவு



அவசரப்படுகிறாய் நண்பா? நிதானமாக நின்று தண்ணீர் குடியேன் எனக்கும் உன்னிடம் அளவளாவ வேண்டும் என்று வெகு நாட்களாக ஆசை" என்று சொல்லிற்று.

நாய், "அடடா, என்ன அன்பு! நான் உன் வாயில் அகப்பட்டால் உனக்கு ஆனந்தமாய் இருக்கும் என்பது எனக்குத் தெரியாதா? அதற்காகத்தான் நான் இப்படி ஓடிக்கொண்டே தண்ணீரைக் குடிக்கின்றேன்" என்று பதில் கூறியது. முதலை தலையைத் திருப்பிக் கொண்டு திரும்பிச் சென்றது.

## வர்ணம் தீட்டுவோம்



## சிறுவர் அமுதம்

## கிழமைகள்

பள்ளி திறக்கும்
திங்கள்தான் பார்! பார்!
அடுத்து செவ்வாய்தான்
புதனே அடுத்து வரும்
நாளாம்! வியாழன் என்றால்
வெறுப்புண்டோ?
வீட்டைச் சுத்தம் செய்கின்ற
வெள்ளிக்கிழமை
தெரியாதோ? தலையில்
எண்ணெய் தேய்த்தே நான்
குளிக்கும் நாளே
சனியாகும்! அடுத்த நாளே
நமக்கெல்லாம்
படுத்து உறங்கிச் சுகம்
காணக்
கொடுத்து வைத்த
திருநாளாம் அந்த நாளைத்
தெரியாதோ? அதுதான்
ஞாயிறு புரியாதோ?
வார நாட்கள் ஏழாகும்
வா! வா! தம்பி!
தெளிவாகும்.

## விடுகதைகள்




1.பிறப்பும் இறப்பும் ஒரு மாதத்தில் அடங்கும் ஒருவனுக்கு. அவன் யார்?
2.பார்ப்பதற்கு உருவம் உண்டு. எடுப்பதற்கு உடல் இல்லை. அது என்ன?
3.பாதுகாப்பான பெட்டிக்குள் பலரும் விரும்பும் கடிகாரம். அது என்ன?
4.பார்த்தால் பார்க்கும், சிரித்தால் சிரிக்கும், அடித்தால் பத்துச் சில்லாகும். அது என்ன?
5.திரியாமல், மேயாமல் நின்ற இடத்தில் ஒரு குடம் பால்.

விடைகள்:
1. நிலா 2. தண்ணீர்
3. இதயம் 4. கண்ணாடி
5. பனைமரம்

சுடோக்கு எண் 51 விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 3 | 4 | 2 | 9 | 7 | 1 | 5 | 8 |
| 2 | 5 | 7 | 1 | 8 | 3 | 9 | 4 | 6 |
| 9 | 1 | 8 | 6 | 4 | 5 | 7 | 3 | 2 |
| 7 | 9 | 3 | 4 | 6 | 8 | 5 | 2 | 1 |
| 8 | 4 | 6 | 5 | 2 | 1 | 3 | 9 | 7 |
| 1 | 2 | 5 | 3 | 7 | 9 | 6 | 8 | 4 |
| 3 | 7 | 1 | 8 | 5 | 4 | 2 | 6 | 9 |
| 4 | 6 | 9 | 7 | 3 | 2 | 8 | 1 | 5 |
| 5 | 8 | 2 | 9 | 1 | 6 | 4 | 7 | 3 |

சுடோக்கு எண் 52

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 5 | 6 | 2 | |
| | | | 4 | 3 | | | | 9 |
| | 5 | | | | 9 | | | 3 |
| 9 | | | | | 7 | 8 | | 5 |
| | 8 | | | | | | 7 | |
| 2 | | 1 | 5 | | | | | 6 |
| 3 | | | 7 | | | | 9 | |
| 5 | | | | 6 | 2 | | | |
| | 2 | 4 | 3 | | | | | |

**குழந்தைகளே!**


3 முதல் 12 வயது வரையான பிள்ளைகளின் பிறந்தநாள் வாழ்த்து தமிழ்நாதத்தில் பிரசுரமாகும். நீங்கள் செய்யவேண்டியது இதுதான்:

ஏதாவதொரு விடயத்தைப் பூர்த்தி செய்தல். அத்துடன் பெயர், ஊர் பிறந்ததினம் என்பவற்றை மாத்திரம் எழுதி உங்கள் புகைப்படத்தையும் இணைத்து எமக்கு தபாலில் அனுப்பிவைக்க வேண்டும்.

**சிறுவர் அமுதம், தமிழ்நாதம், 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

# ‘ஈழத் தமிழர்’ என்பதில் தமிழ் பேசும் இலங்கையர் அனைவரும் உள்ளடங்கவில்லை

பேராசிரியர்: எம்.ஏ. நு:.மான்



(நேற்றைய தொடர்ச்சி)

**சிங்கள ஆட்சியாளர்கள் முறையாகக் கையாளாததற்கு அவர்கள் சிங்கள ஆதரவாளர்களாக மட்டும் இருந்ததுதான் காரணமா?**

அப்படித்தான் சொல்ல வேண்டும். அதற்குக் காரணம் இருந்தது. தமிழ்நாட்டில் பார்ப்பனர் சிறுபான்மையினராக இருந்தாலும் பிரித்தானிய ஆட்சியில் ஆங்கிலக் கல்வி காரணமாகப் பொருளாதாரரீதியிலும் கல்வியிலும் அவர்களே மேலாதிக்கம் பெற்றிருந்தனர். இதற்கு எதிராகவே 1930களிலிருந்து இடைப்பட்ட சாதியினர் பார்ப்பனிய எதிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர். இதை ஒத்த நிலைமை இலங்கையிலும் காணப்பட்டது. பிரித்தானிய ஆட்சியில் ஆங்கிலக் கல்வி வாய்ப்பு அதிகம் பெற்ற யாழ்ப்பாண உயர்சாதி நடுத்தர வர்க்கத்தினர் நிருவாகத் துறையில் முக்கியத்துவம் பெற்றிருந்தனர். சிங்கள நடுத்தர வர்க்கத்தினர் இதற்கு எதிராகச் செயற்படத் தொடங்கியதன் விளைவுதான் சிங்களம் மட்டும் ஆட்சிமொழிச் சட்டம். அதன் பிறிதொரு விளைவுதான் இன ஒதுக்கல். இன்று அரச நிருவாக யந்திரம் முழுமையாகச் சிங்களமயமாக்கப்பட்டுவிட்டது. இன்று மொத்த அரச ஊழியர்களில் தமிழ் பேசும் சமூகங்களைச் சேர்ந்தவர்கள் 8 விழுக்காடுதான் இடம்பெற்றுள்ளனர். இதில் பள்ளி ஆசிரியர்களும் உள்ளடக்கம். இந்தப் புறக்கணிப்பும் பாராபட்சமும்தான் யுத்தத்துக்கும் புலப்பெயர்வுக்கும் இட்டுச்சென்றன.

**தமிழரசுக் கட்சி முன்னெடுத்த உரிமைப் போராட்டம் என்பது எதை வலியுறுத்தியது?**

அவர்கள் முதலில் மொழி உரிமையைத்தான் வலியுறுத்தினார்கள். தங்கள் மொழிக்குச் சம உரிமை இல்லாத சமூகத்தினர் இரண்டாந்தரக் குடிமக்களாகிவிடுகின்றனர். அதனால் அவர்கள் அதை எதிர்த்தனர். அடுத்து அதிகாரப் பரவலாக்கலை - சமஷ்டி ஆட்சிமுறையைக் கோரினார்கள். தொடக்க காலத்தில் மொழி உரிமைக் கோரிக்கையைச் சில சிங்கள இடதுசாரிக் கட்சிகளும் ஆதரித்தன. பிரபலமான இடதுசாரித் தலைவர்களுள் ஒருவரான கொல்வின் ஆர். டி. சில்வாவின் புகழ்பெற்ற கூற்று ஒன்று உண்டு. **"One language two nations, two languages one nation"** ஆனால் 1970களில் இந்த இடதுசாரிகளும் நாடாளுமன்ற சந்தர்ப்பவாதத்துக்கு இரையாகிச் சிங்களப் பேரினவாதத்துடன் சமரசப்பட்டுவிட்டனர்.

**வர்க்க ரீதியான ஒற்றுமை அங்கே உருவாகவில்லையா?**

1960களில் வர்க்கரீதியான ஒற்றுமை ஓரளவு காணப்பட்டது. ஆனால் 70களில் இனவாதம் உக்கிரமடைந்த பிறகு அந்த ஒற்றுமை போய்விட்டது. இடதுசாரிக் கட்சிகளும் தமிழ் எதிர்ப்புக் கோஷங்கள் எழுப்ப வேண்டிய நிலைமை உருவாகிவிட்டது. தமிழரசுக் கட்சியின் தீவிர வலதுசாரி நிலைப்பாடும் இதற்கு ஒரு காரணம் எனலாம். ஆயினும் மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் இதற்குள் வரவில்லை.

**மலையகத் தமிழர்களின் பிரச்சினைகளை இவர்கள் பேசவில்லையா?**

பேசினார்கள்தான். ஆயினும் மலையகத் தமிழர்களின் அரசியல் பொருளாதார நலன்கள் இவர்களால் சரியாக முன்னெடுக்கப்படவில்லை. அவர்கள் பல்வேறு தொழிற்சங்க இயக்கங்களுள் வலுவாகப் பிணைக்கப்பட்டிருந்தனர். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்தான் அவர்களது பெரிய தொழிற்சங்கமாகவும் அரசியல் கட்சியாகவும் செயல்பட்டது. அதன் தலைவர் தொண்டமான் பலம் மிக்க அரசியல் தலைவராக விளங்கினார். சிங்கள ஆளும் கட்சிகளுடன் இணங்கிச் செயல்பட்டார். தமிழர் பிரச்சினையில் சில சமரசங்களுக்கும் முயன்றார். தமிழர் விடுதலைக் கூட்டணி யிலும் இணைந்தார். ஆயினும் அக்கூட்டு நீடிக்க வில்லை. தமிழ் ஈழக் கோரிக்கை மலையகத்தை உள்ளடக்கவில்லை. அதை உள்ளடக்குவதும் சாத்தியமல்ல. அது அவர்களுடைய கோரிக்கையும் அல்ல. இந்த நிலைப்பாடுதான் இஸ்லாமியர் மத்தியிலும் இருந்தது. ஆயினும் தமிழ் ஈழக் கோரிக்கையால் அவர்கள் இருசாராருமே மிக மோசமாகப் பாதிக்கப்பட்டார்கள்.

**இலங்கையின் மூத்த திறனாய்வாளரான பேராசிரியர் எஃ.ஏ.நுஃமான் இந்திய மாதாந்த இலக்கிய சஞ்சிகையொன்றுக்கு வழங்கிய நேர்காணல்**

**மொழிப் பிரச்சினைதான் இந்த இனப் பாகுபாடுகளுக்குக் காரணமா?**

மொழிப் பிரச்சினையுடன்தான் இன முரண்பாடு உக்கிரமடைந்தது. ஆரம்பத்திலேயே இது தீர்க்கப்பட்டிருந்தால் மற்ற பிரச்சினைகள் இந்த அளவுக்குத் தலையெடுத்திருக்க மாட்டா. பிரிவினைவாதம்வரை அது சென்றிருக்காது. ஆனால் சிங்கள ஆளும் வர்க்கம் அதற்குத் தயாராக இருக்கவில்லை. அவர்களுக்கு அரசியல் தீர்க்கதரிசனம் இருக்கவில்லை. இன முரண்பாட்டை நாடாளுமன்ற ஆசனத்தைப் பிடிப்பதற்கான குறுக்கு வழியாக அவர்கள் பயன்படுத்தினர். தமிழ்த் தேசியவாதிகளுக்கும் அதுவே வாய்ப்பாக அமைந்தது.

**யாழ்ப்பாணத் தமிழர்களின் மேலாதிக்கத்திற்கெதிராகத் தான் சிங்களவர்கள் மத்தியில் தமிழ் எதிர்ப்புணர்வு உருவாகிறது என்கிறீர்கள். இதை யாழ்ப்பாணத் தமிழ் இயக்கங்கள் உணர்ந்திருந்தனவா?**

அப்படிச் சொல்ல முடியாது. இந்த மேலாதிக்கம் என்பது திட்டமிட்டு வந்ததல்ல. இயல்பாக அவர்களின் ஆங்கிலக் கல்வி மூலமாக வந்ததுதான். ஆனால் தமிழர்கள் தங்கள் வாய்ப்புகளைத் தட்டிப் பறித்துக் கொண்டதாகச் சிங்களவர்கள் நினைத்தார்கள். சிங்கள மத்திய தர வர்க்கமும் அரசியல்வாதிகளும் அந்தக் கண்ணோட்டத்தைத்தான் கொண்டிருந்தனர். அந்தவகையில் எல்லாத் துறைகளிலும் சிங்கள மேலாதிக்கத்தை உறுதிப்படுத்துவதே சுதந்திரத்துக்குப் பிந்தைய சிங்கள ஆட்சியாளர்களின் செயல்பாடாக இருந்தது.

**நிலம் முக்கியமான பிரச்சினையாக இருக்கிறதா?**

ஆம். சுதந்திரத்துக்குப் பின் நிலம் ஒரு பிரச்சினையாக வளர்ந்துவிட்டது. சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் என்ற பேதமின்றி எல்லாருக்கும் இப் பிரச்சினை இருக்கிறது.

நிலப் பற்றாக்குறை, குடிசனப் பெருக் கம், திட்டமிட்ட குடியேற்றம் என்பவற்றின் விளைவு இது. உதாரணத்துக்கு அம்பாறை மாவட்டத்தை எடுத்துக்கொள்ள லாம். தமிழர்களும் இஸ்லாமியரும்தான் இங்குப் பெரும்பான்மையினர். இவர்கள் சுமார் அறுபது சதவீதத்தினர். ஆனால் 30 சதவீதத்துக்குக் குறைவான நிலம்தான் இவர்களிடம் இருக்கிறது. இந்த நிலப் பற்றாக் குறை காரணமாகக் கடலுக்கு மிக அருகிலும் வாழ்விடங்கள் உருவாகியுள்ளன. கடற்கரையை அண்டிய குறுகிய நிலப்பகுதியிலேயே இவர்கள் வாழ்கின்றனர். இதனால் சுனாமியின்போது பெரிய உயிரிழப்புகள் இங்குதான் நிகழ்ந்தன.

இலங்கையின் மொத்த உயிரிழப்பில் மூன்றில் ஒரு பகுதி, சுமார் பத்தாயிரம் பேர் இங்கு உயிரிழந்தனர். நிலப்பற்றாக்குறை காரணமாகத் தங்கள் நிலத்தைப் பாதுகாப்பதற்கும் பிறரின் நிலத்தைக் கைப்பற்றுவதற்கும் நடக்கும் முயற்சிகளில் இனங்களுக்கிடையிலான பிரச்சினை தொடர்ந்து கொண்டுதான் உள்ளது.

**இந்த நிலப் பிரச்சினைத் தீர்வுக்கு அரசு என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது?**

சிங்களவரின் நிலப்பிரச்சினையைத் தீர்ப்பதே அரசின் பிரதான குறிக்கோளாக இருந்துவருகிறது. 1950களிலிருந்தே சிங்களக் குடியேற்றங்களைத்தான் தொடர்ந்து செய்கின்றனர். அரசுக்குத் தேசிய நிலப்பங்கீட்டு, குடியேற்றக் கொள்கை என எதுவும் இல்லை.

அப்படி ஏதும் இருந் தால் இது சிறுபான்மையினர் அடர்த்தியாக வசிக்கும் பிரதேசங்களில் நிலமற்ற சிங்களவர்களைக் குடியேற்றுவதும் அதன் மூலம் சிறுபான்மையினரின் அடர்த்தியைக் குறைப்பதும்தான் அக்கொள்கை எனக் கூறலாம். இத்திட்டத்தை அவர்கள் வெற்றிகரமாகச் செயற்படுத்தி வருகிறார்கள்.

உதாரணமாகத் திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் சிங்களவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வந்திருப்பதைக் காட்டலாம். வடக்கில் மட்டும்தான் இது குறைவாக இருந்தது.

ஆனால் போருக்குப் பிந்தைய அரசின் நடவடிக்கைகள் அங்கும் சிங்களக் குடியேற்றங்கள் அதிகரிக்கும் சாத்தியத்தைக் காட்டுகின்றன.

---

# சிலாபம் கடற்பரப்பில் 86 பேருடன் சென்ற படகு கைப்பற்றப்பட்டது



படகுமூலம் சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்குசெல்லமுயன்ற 86 பேரைசிலாபம் கடற்பரப்பில் கடற்படையினர் இன்றுகைதுசெய்துள்ளனர். இதன்மூலம், இவ்வருடம் கைதுசெய்யப்பட்டசட்டவிரோதபுகலிடக் கோரிக்கையாளர்களின்எண்ணிக்கை 1900 ஆக உயர்ந்துள்ளது.

நேற்றுக் காலைசெனேஷாதுவ எனும் படகில் பயணம் செய்த 58 தமிழர்கள், 9 சிங்களவர்கள் உட்பட 67 பேர் கைதுசெய்யப்பட்டனர். செனேஷாதுவஎனும் படகிலிருந்து 14 தமிர்கள் 5 சிங்களவர்கள் உட்பட 19 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

சிலாபம் கரையோரத்திலிருந்து 20 கடல் மைல் தொலைவில் இவர்களின் படகுகள் வழிமறிக்கப்பட்டன.

யாழ்ப்பாணம்,முல்லைத்தீவு,வவுனியா,கிளிநொச்சி,சிலாபம்,மன்னார், நீர்கொழும்பு,ஆனமடுவஆகியபிரதேசங்களைச் சேர்ந்தவர்களே கைது செய்யப்பட்டுள்ளதாகபொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்டஅனைவரும் முகத்துவாரம் மீன்பிடிதுறைமுகத்துக்குஅழைத்துவரப்பட்டுள்ளதுடன் இவர்கள் மேலதிகவிசாரணைக்காககுற்றப்புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

---

# ஒரு கட்சிக்குள் மோதல் தாக்குதலுக்குள்ளானவர் மரணம்

கடந்த வாரம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அனுராதபுரக் கூட்டத்தின்போது தாக்குதலுக்குள்ளான நபர் ஆறு நாட்களின் பின்னர் காலமானார்.

தேர் தல் நடைபெறுவதற்கு இரு தினங்கள் முன்னதாக அநுரகுமார என்ற அந்த நபர் தனது வீட்டிற் குள் வைத்தே தாக்கப்பட்டார்.

எஸ்.அநுரகுமார என்ற இந்த 40 வயது நபர் ஐக்கிய மக்கள் சுதந் திர முன்னணி வேட்பாளர் எஸ். எம்.ரஞ்சிதின் நெருங்கிய ஆதர வாளர் ஆவார். ரஞ்சித்தே இந் தத் தேர்தலில் ஆகக்கூடிய விருப்பு வாக்குளை வட மத்திய மாகா ணத்தில் பெற்றுள்ளார்.

முன்னாள் முதலமைச்சரும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளருமான பேர்ட்டி பிரேம்லால் திஸ்ஸநாயக்காவின் ஆதரவாளர்களால் இவரும் இவரது மனைவியும் மிக மோசமாகத் தாக்கப்பட்டனர் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

---

# வடக்கு கிழக்கு மக்களுக்குப் பொலிஸ் எச்சரிக்கை

வடக்கு கிழக்கு மாகாணங்களில் காணப்படும் வித்தியாசமான பொருட்களை எடுத்து விளையாட வேண்டாமென்று பிள்ளைகளுக்கு அறிவுறுத்துமாறு பெற்றோர்களையும், ஆசிரியர்களையும் அறிவுறுத்துமாறு பொலிஸ் திணைக்களத்தின் பொதுசன தொடர்புகள் பிரிவு கேட்டுக் கொண்டுள்ளது. அண்மைக் காலங்களில் வடக்கு, கிழக்கில் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்ட வெடி பொருட்களை எடுத்து விளையாடிய பிள்ளைகள் பலர் கொல்லப்பட்டனர். இன்னும் பலர் காயமுற்றனர் என்றும் பொலிசார் தெரிவித்தனர்.

---

# வலிகாமம் கல்வி வலயத்தில் ஆசிரியர் தினப் போட்டிகள்

மருதனார்மடம்

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் திறமைகளைப் பாராட்டு முகமாகவும் ஆசிரியர்களின் தொழில்சார் வாண்மையை மேம்படுத்து முகமாகவும் நான்கு போட்டிகளை நிகழ்த்தவுள்ளனர். கற்றல் - கற்பித்தல் துணைச்சாதனங்கள் தயாரித்தல், மாதிரி வகுப்பொன்றை நடத்துதல், முறையான பாட முன்னாயத்தக்குறி பொன்றைத் தயாரித்தல், வலைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம் என்பனவாகும். கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், வரலாறு, புவியியல், ஆரம்பக்கல்வி ஆகிய பாட ஆசிரியர்கள் பாடரீதியாகப் பங்குபற்ற முடியும்.

வலைப்பந்து, கரப்பந்தாட்டப் போட்டிகள் நான்கு கோட்டங்களிலும் 4 குழுக்கள் வீதம் பங்குபற்ற முடியும். இப்போட்டிகள் இம்மாதம் 22, 23ம் திகதிகளில் அளவெட்டி அருணோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

ஏனைய போட்டிகள் 22ம் திகதி காலை 9 மணிக்கு சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும் பங்குபற்ற விரும்பும் ஆசிரியர்கள் 17ம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை வலிகாமம் கல்வி வலயத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவிக்கின்றார். வெற்றியாளருக்குரிய பரிசில்களும் சான்றிதழ்களும் வலிகாமம் வலய உலக ஆசிரி யர் தினக் கொண்டாட்டத்தில் வழங்கப்படும்.

# உலக பார்வை

## கனடாவில் விலைவாசி உயர்வை மிஞ்சும் கல்விக் கட்டணம்



கனடாவில் சராசரி வருமான உயர்வையும், விலைவாசி உயர்வையும் விட கல்விக் கட்டணம் மூன்று மடங்கு அதிகரித்துள்ளது தற்போது தெரியவந்துள்ளது.

கடந்த 1990ஆம் ஆண்டு முதல் கட்டாயக் கல்விக் கட்டணம் 6.2 சதவிகிதம் ஆண்டொன்றுக்கு உயர்ந்து வருகிறது.

ஆனால் பணவீக்கம் 2 சதவிகிதம் என்ற அளவு தான் உள்ளது என்று கொள்கை மாற்றங்களுக்கான கனடா மையம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

கனடா பல்கலைக்கழகங்களில் தற்போது சராசரியாக ஒரு வருடத்துக்குரிய கல்விக் கட்டணம் 6186 டொலராகும். இக்கட்டணத்தில் உணவு, புத்தகம் மற்றும் விடுதிச் செலவு சேர்க்கப்படவில்லை.

இடதுசாரிச் சிந்தனையாளர்கள் இக்கல்விக் கட்டணம் வரும் நான்காண்டுகளில் 7330 டொலராக உயரக்கூடும் என்று கருதுகின்றனர்.


நியூஃபவுண்ட்லாண்ட், லேப்ரடார் போன்ற குறைந்த கட்டணச் செலவுடைய மாநிலங்களில் 2861 டொலர் ஆகவும், கியூபெக்கில் 3278 டொலராகவும், ஒண்டோரியோ, ஆல்பெர்ட்டா மாநிலங்களிலும் முறையே 7513 மற்றும் 7330 டொலராகவும் இருக்கும்.

எதிர்வரும் நான்காண்டுகளில் நியுஃபவுண்ட்லாண்டில் குறைந்த கட்டணமாக 2893 டொலரும், ஒண்டோரியோவில் அதிகக் கட்டணமாக 9231 டொலரும் வசூலிக்கப்படலாம்.

கட்டண உயர்வு குறித்த அறிக்கையை தயாரித்தவர்களில் ஒருவரான எரிக்கா சேகர், நடுத்தர குடும்பங்களை கல்விக் கட்டண சுமை அழுத்துகிறது. அரசும் கட்டணத்தைக் குறைக்காமல் கடனை உயர்த்தியும் திருப்பிச் செலுத்தும் முறைகளை எளிமைப்படுத்தியும் தருகிறது.

மேலும் படித்து முடித்துவிட்டு ஒருவர் வேலைக்குப் போகும் போது சராசரியாக 27000 டொலர் கடனோடு தனது வாழ்க்கையைத் தொடங்குகிறார் என்றார்.

## அமெரிக்க ஜனாதிபதி தேர்தல்: ஒபாமாவுக்கே ஆதரவு அதிகம்



சென்ற வாரம் நிறைவடைந்த ஜனநாயகக் கட்சியின் மாநாட்டிற்கு பிறகு தேசிய அளவில் ஒபாமாவுக்கு 52 சதவிகித வாக்காளர்கள் ஆதரவு கிடைத்துள்ளது என சி.என்.என் கருத்துக் கணிப்பின் மூலம் தெரியவந்துள்ளது.


ஜனநாயகக் கட்சி மாநாட்டிற்கு முந்தைய கருத்துக் கணிப்பில் இது 48% - 48% என ஒபாமாவுக்கும், மிட் ரோம்னிக்கும் சரிசமமாக இருந்தது.

மாநாட்டில் க்ளின்டனின் ஆதாரப்பூர்வமான பேச்சும், ஒபாமாவின் ஏற்புரை பேச்சும் இந்த மாற்றத்திற்கு பெருமளவில் காரணமாகக் கருதப்படுகிறது.

நிறைவேற்றப்பட்ட திட்டங்கள், இன்னும் நிறைவேற்ற வேண்டியவைகள் என ஒபாமா விளக்கமாக பட்டியலிட்டார். அவரது பேச்சு தெளிவான கொள்கைகளை வெளிப்படுத்தியதோடு மட்டுமல்லாமல், பொதுவான வாக்காளர்களுக்கு அவர் மீது நம்பகத் தன்மையை அதிகரிக்கவும் காரணமாக அமைந்து விட்டது எனவும் கூறப்படுகிறது.

நாட்டை வழி நடத்த யார் சிறந்த தலைவர் என்ற தனிப்பட்ட செல்வாக்கிலும் ரோம்னி 41 சதவிகிதத்துடன் பின் தங்கி, ஒபாமா 51 சதவிகிதம் பெற்று முன்னிலையில் இருக்கிறார் என சி.என்.என். எனத் தெரிவித்துள்ளது.

## என்னை யாராவது கொன்று விடுவார்கள்: பயத்தில் 11 வயது கிறிஸ்தவச் சிறுமி



என்னை யாராவது கொன்று விடுவார்கள், எனக்குப் பயமாக இருக்கிறது என பாகிஸ்தானில் மத நிந்தனை வழக்கில் விடுதலை செய்யப்பட்ட 11 வயது சிறுமி கூறியுள்ளார்.

பாகிஸ்தானில் குரான் புத்தகத்தில் இருந்த பக்கங்களை கிழித்து எரித்ததாக 11 வயது கிறிஸ்தவ சிறுமி ரிம்ஸா மாஸி மீது குற்றம் சாட்டப்பட்டது.

இவரது பக்கத்து வீட்டை சேர்ந்த முஸ்லிம் இமாம் காலித் ஜடூன் மற்றும் அவரது ஆதரவாளர்கள் நூற்றுக்கணக்கானோர் ரிம்ஸா வீட்டை முற்றுகையிட்டு மத நிந்தனை புகார் கூறியதை அடுத்து சிறுமி கைது செய்யப்பட்டார்.

இவ்வழக்கின்படி சிறுமிக்கு ஆயுள் தண்டனை கிடைக்கலாம் என்ற நிலையில், இமாம் போலியாக ஆதாரங்களை உருவாக்கி இருப்பதாக மற்றொரு முஸ்லிம் மத தலைவர் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இதையடுத்து ரிம்ஸா விடுதலை செய்யப்பட்டு ஹெலிகாப்டர் மூலம் அடையாளம் தெரியாத பகுதிக்கு பெற்றோருடன் கொண்டு செல்லப்பட்டார். அதன் பின் இமாம் கைது செய்யப்பட்டார்.

இந்நிலையில் சி.என்.என் பத்திரிகை நிருபர் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு ரிம்ஸாவுடன் பேசினார்.


அப்போது தன்னை யாராவது எப்படியும் கொன்று விடுவர் என பயப்படுவதாக ரிம்ஸா மிரட்சியுடன் தெரிவித்துள்ளார்.

மேலும் குரான் புத்தக பக்கங்களை எரிக்கவேயில்லை என அவர் மறுப்புத் தெரிவித்தார். ரிம்ஸாவின் சட்டத்தரணி குறிப்பிடுகையில், சிறுமி மீது இமாமுக்கு விருப்பம், அதற்கு சிறுமி ஒத்துக் கொள்ளவில்லை. அதனால் ஏற்பட்ட விரோதம் காரணமாக மத நிந்தனைக் குற்றச்சாட்டை அவர் சுமத்தி இருக்கிறார் என்று தெரிவித்தார்.



சிங்கப்பூரில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பிரிட்டன் இளவரசர் வில்லியம் மற்றும் கேற் மிடில்ரன் அங்குள்ள தாவரவியல் பூங்காவைச் சுற்றிப் பார்த்தனர்.

## ஒசாமாவை காட்டிக்கொடுத்த மருத்துவரை கேவலமாக நடத்திய ஐ.எஸ்.ஐ.



அல்கொய்தா தலைவர் ஒசாமா பின்லேடனைக் காட்டிக் கொடுத்த பாகிஸ்தான் மருத்துவரை ஐ.எஸ்.ஐ. அதிகாரிகள் சிகரெட்டால் சுட்டு கொடுமைப்படுத்தியதுடன் நாய் போன்று சாப்பிட வைத்துள்ளனர்.

பாகிஸ்தானின் அபோதாபாத்தில் அல்கொய்தா தலைவர் ஒசாமாவை அமெரிக்காவிடம் காட்டிக் கொடுத்தவர் பாகிஸ்தான் மருத்துவர் ஷகில் அப்ரிதி.

அவர் சிஐஏவுக்கு உளவாளியாக இருந்ததாகக் குற்றம்சாட்டப்பட்டு அவருக்கு 33 ஆண்டு சிறைத் தண்டனை விதித்தது பாகிஸ்தான் நீதிமன்றம்.

முன்னதாக பாகிஸ்தானின் உளவு நிறுவனமான ஐ.எஸ்.ஐ. பிடியில் கடந்த மே மாதம் 23ஆம் திகதி ஹயாத்தாபாத்தில் இருந்தபோது தான் அனுபவித்த கொடுமைகள் குறித்து அப்ரிதி தற்போது தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், ஐ.எஸ்.ஐ. ஆட்கள் எனது ஆடைகளை கழற்றச் செய்தனர். அதன் பிறகு ஒரு பழைய கந்தலான ஆடையை அணியும்படி மேஜர் ஒருவர் என்னை வற்புறுத்தினார்.

நானும் வேறு வழியில்லாமல் அணிந்தேன். உணவு உண்ணக் கூட கடினமாக இருந்தது. நான் மண்டியிட்டு நாய் போன்று உணவு உண்டேன். தரையில் அமர்ந்தேன். அவர்கள் சிகரெட் துண்டுகளை வைத்து எனக்கு சூடுபோட்டனர்.

ஐ.எஸ்.ஐ. எனது வங்கிக் கணக்கில் இருந்த கோடிக்கணக்கான ரூபாயை எடுத்துக் கொண்டது. நான் கோடிக் கணக்கில் சம்பாத்தித்து எனது குடும்பத்தையும், எனது சகோதரரின் குடும்பத்தையும் பார்த்துக் கொண்டேன். தற்போது அந்த பணம் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டனர் என்றார்.

## பெண் தீவிரவாதியை விடுதலை செய்யக்கோரி வீடியோ வெளியீடு

பாகிஸ்தானில் கடத்தப்பட்ட அமெரிக்கரான வாரன் வெயின்ஸ்டீன் தங்களிடம் இன்னும் பிணையக் கைதியாக உயிருடன் இருப்பதாக அல்கொய்தா இயக்கத்தின் தலைவரான அய்மான் அல் ஜவாஹிரி தெரிவித்துள்ளார்.

ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்ட பிறகு ஜவாஹிரியிடமிருந்து வீடியோக்கள் வெளியாவது குறைந்திருந்த நிலையில், இப்போது அவரது புதிய வீடியோவை அல்கொய்தா வெளியிட்டுள்ளது. சில அல்கொய்தா இணையத்தளங்களில் இந்த வீடியோ வெளியாகியுள்ளது.

அதில் பேசியுள்ள ஜவாஹிரி, கடந்த ஆகஸ்ட் மாதம் லாகூரில் வைத்து கடத்தப்பட்ட வாரன் வெயின்ஸ்டீனை இன்னும் உயிருடன் தான் வைத்துள்ளோம். அவரை விடுவிக்க வேண்டுமானால் அமெரிக்க சிறையில் உள்ள ஓமர் அப்துல் ரஹ்மான், ஆபியா சித்திகி ஆகியோரை அமெரிக்கா விடுவிக்க வேண்டும்.

கண் பார்வையற்றவரான ஓமர் அப்துல் ரஹ்மான் நியூயார்க்கைச் சேர்ந்தவர். 1990ஆம் ஆண்டில் நியூயோர்க்கில் தீவிரவாத தாக்குதலுக்கான சதித் திட்டத்துக்கு உதவியதாக கைது செய்யப்பட்டு ஆயுள் தண்டனை பெற்று சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

## தொலைக்காட்சியில் அரைகுறை ஆடையுடன் பெண்கள்: சட்டப்படி நடவடிக்கை எடுக்க உத்தரவு

அரைகுறை ஆடை பெண்களை காட்டி மக்களின் ஒழுக்கத்தை சீர்குலைப்பதாக கூறி இரண்டு தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு எதிராக ஆப்கான் அரசு சட்டப்பூர்வ நடவடிக்கைக்கு உத்தரவிட்டுள்ளது.

இது குறித்து ஆப்கான் கலாசாரத் துறை அமைச்சக அதிகாரி ஜலால் நூரானி கூறுகையில், ஆப்கானில் சாபா, செதாரா என்ற தொலைக்காட்சி நிறுவனங்கள் ஒளிபரப்பிய பாடல்களில் பெண்கள் அரைகுறை ஆடைகளுடன் மக்களின் ஒழுக்கத்தை சீர்குலைக்கும் வகையில் காணப்பட்டனர்.

இக்காட்சிகள் விதிமுறைகளுக்கு புறம்பானவை என்று அரசு சார்பாக இயங்கும் கமிட்டி முடிவு செய்துள்ளது.

இது தொடர்பாக விசாரணை நடத்துமாறு அட்டார்னி ஜெனரல் அலுவலகத்துக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

### தீவிரவாதத்திற்கு எதிரான போர்:

# இந்தியாவின் வலுவான கூட்டாளியாக செயல்படுவோம்

## கனடா அறிவிப்பு



தீவிரவாத அமைப்புகளுக்கு எதிரான போரில் இந்தியாவின் வலுவான கூட்டாளியாகச் கனடா செயல்படும் என்று அந்நாட்டின் வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஜான் பெர்ட் தெரிவித்துள்ளார்.

புதுடெல்லியில் நடைபெற்ற சந்திப்பில், இந்திய மற்றும் கனடா நாடுகளின் வெளிவிவகாரத்துறை அமைச்சர்களான எஸ்.எம். கிருஷ்ணா, ஜான் பெர்ட் சந்தித்து பேசினர்.

அப்போது ஜான் பெர்ட், பயங்கரவாத பிரச்சினைகளைப் பொறுத்தவரை இந்தியாவும், கனடாவும் ஒரே நிலைப்பாட்டில்தான் உள்ளன.

பயங்கரவாதத்தை எதிர்கொள்ள இன்னும் அதிக ஏற்பாடுகள் தேவைப் படுகின்றன என்றார்.

மத பயங்கரவாதம்,தீவிரவாதத்துக்கு எதிரான போரில் இந்தியாவின் வலுவான கூட்டாளியாக கனடா செயற்படும்.


கனடாவில் காலிஸ்தான் ஆதரவு தீவிரவாதக் குழுவினரின் நிகழ்ச்சிகளில் சில கனடா அதிகாரிகளும், அரசியல் பிரமுகர்களும் பங்கேற்றுள்ளனர். அவர் உயர் நிலை யிலானவர்கள் அல்லர். அவர்களுக்கு இக்குழுவினரின் மத நோக்கமோ, பயங்கரவாத நோக்கமோ தெரிந்திருக்க நியாயமில்லை.

இது போன்ற சில குழுக்களை தீவிரவாதக் குழுக்களாக 2003ம் ஆண்டு அறிவித்திருக்கிறோம்.

கனடாவில் உள்ள இதுபோன்ற குழுக்களுக்கு எதிராக, சட்டத்துக்கு உட்பட்டு என்னவெல்லாம் செய்ய இயலுமோ அவற்றை கனடா அரசு நிச்சயம் செய்யும்.

இது குறித்து அதிகாரிகள், அரசியல்வாதிகள் மற்றும் இராணுவ அளவில் போதிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும் என்றார் ஜான் பெர்ட்.

# கடலுக்குள் இறங்கி கூடங்குளம் மக்கள் போராட்டம்



தமிழ்நாட்டில் பற்றி எரியும் கூடங்குளம் அணு உலைக்கான போராட்டம் தற்போது அடுத்த கட்டத்தை எட்டியுள்ளது.

பொலிஸாரின் கைது செய்யும் நடவடிக்கைகளைக் கைவிட வலியுறுத்தி கூடன்குளம் போராட்டக் குழுவினர் இன்று கடல்நீருக்குள் இறங்கிப் போராட்டம் நடத்தப் போவதாக அறிவித்துள்ளனர்.

காலை 10 மணி முதல் மாலை 5 மணிவரை இந்தப்போராட்டம் நடைபெறும் என்று தெரிவித்துள்ள போராட்டக்குழுவினர், கூடங்குளம் அணு உலையில் யுரேனியம் நிரப்பும் பணியை மேற்கொள்ளக் கூடாது, கைது செய்யப்பட்டவர்களை எந்த நிபந்தனையும் இன்றி விடுவிக்க வேண்டும் என கோரிக்கைகளை முன் வைத்துள்ளனர்.

காவல்துறையினரின் வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் ஆகிய 4 கோரிக்கைகளை வலியு றுத்தி இந்தப் போராட்டத்தை நடத்தப் போவதாக அவர்கள் கூறியுள் ளனர்.

இதற்கிடையில் தலைமறைவாகியுள்ள கூடங்குளம் போராட்டத்திற்கான ஒருங்கிணைப்பாளர் உதயகுமாரை தேடும் பணியில் பொலிஸார் களமிறங்கியுள்ளனர்.

நேற்று அன்னா ஹசாரே குழுவின் பிரதான உறுப்பினரான அரவிந்த் கெஜ்ரிவால், கூடங்குளம் மக்களை சந்தித்து ஆறுதல் கூறினார்.

அரசின் இந்த நடவடிக்கைகளை கண்டித்து பேசிய அவர், உதய குமார் சரணடையக்கூடாது எனவும் வலியுறுத்திச் சென்றார்.

மத்திய அரசுக்கு எதிராக செயற்படும் ஒரு குழு, மாநில அரசிற்கு எதிராக போராட்டம் நடத்துபவர்களுக்கு ஆதரவு அளித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

மேலும் கூடங்குளம் போராட்டக் குழுவினர் தங்களது இரவுப் பொழுதினை தினசரி இடிந்தகரை ஆலயத்திலே கழித்து வருகின்றனர்.

# சந்தனக்கடத்தல் வீரப்பன் படத்தை வெளியிட மனைவி முத்துலட்சுமி மறுப்பு



தென் மாநிலங்களில் சந்தன மரங்கள் மற்றும் யானை தந்தங்களை வெட்டி எடுத்து முறைகேடாக கடத்தல் செய்து விற்று வந்தவர் வீரப்பன்.

எனவே இவர் சந்தனக்கடத்தல் வீரப்பன் என்றே அறியப்படுகிறார்.

நீண்ட நாட்களாக தமிழக காவல் துறையின் கண்களில் சிக்காத இவர், கடந்த 2004ம் ஆண்டு சிக்கி துப்பாக்கிக்கு பலியானார்.

இந்நிலையில் அவரது வாழ்க்கையை பற்றிய படம் வனயுத்தம் என்ற பெயரில் தமிழில் வெளிவருகின்றது.

இப்படத்திற்கு வீரப்பனின் மனைவி கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.


இப்படத்தில் தன்னுடைய கதாப் பாத்திரம் அவலமாக சித்திரிக்கப்பட்டுள்ளதாக அவர் கருதுகின்றார்.

இது தொடர்பாக முத்து லட்சுமி சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார்.

இப்படம் வெளிவந்தால் தன்னுடைய பிள்ளைகளின் வாழ்க்கை சீர்குலைந்து விடுமெனவும் தெரிவித்துள்ளார்.

இப்படத்தில் அர்ஜுன் பொலிஸாகவும் கிஷோர் வீரப்பனாகவும் நடிக்கின்றனர்.

# தேசிய சின்னங்களை அவமதித்த கார்டூனிஸ்டின் தேசத் துரோக வழக்கு இரத்து




தேசிய சின்னங்களை அவமதித்து கார்டூன் வரைந்த அசீம் திரிவேதி சிறையிலிருந்து விடுதலை பெற்றார்.

இந்தியாவின் தேசிய சின்னமான நான்கு சிங்க முகம் அடங்கிய அசோக சின்னத்தை நரி முகத்துடன் கூடிய கார்டூனை வரைந்து சர்ச்சையில் சிக்கினார்.

இந்த விவகாரத்தில் மும்பை பொலிஸாரால் 8ம் திகதி கைது செய்யப்பட்டார். அரசியலமைப்பை அவமதித்து கார்டூன் வெளியிட்டதாக, தேசதுரோக வழக்குப் பதிவு செய்தனர்.

மும்பை பந்த்ரா நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு ஆர்தர் சாலை சிறையில் அடைக்கப்பட்டார்.

இந்நிலையில் பிணை கோரியதை தொடர்ந்து, அவர் நேற்று 1.30 மணி அளவில் விடுதலையானர்.

அவர் மீதான தேச துரோக வழக்கு இரத்து செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின் றன.

விடுதலையானதை தொடர்ந்து அவரை ஆதரவாளர்கள் வரவேற்றனர்.



# இந்திய செய்திகள்

### ரூ.200க்காக கிராமவாசியின் கை துண்டிப்பு:

# ஜார்கண்டில் நிகழ்ந்த துயரம்



இந்தியாவின் ஜார்கண்ட் மாநிலத்தில் தனக்கு வர வேண்டிய ரூ.200ஐ திருப்பி கேட்ட கிராமவாசி ஒருவரது கை துண்டிக்கப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

ஜார்கண்ட் மாநிலம் கர்வா மாவட்டத்தில் மஞ்சியாவோன் பகுதியில் இச்சம்பவம் நடந்துள்ளது.

அலியார் என்ற பெயருடைய இவர்,மதுபான உற்பத்தி தொழிற்சாலைக்கு அக்கம் பக்கத்து காடுகளில் இருந்து விறகு கொண்டு வந்து கொடுக்கும் வேலையை செய்துவந்துள்ளார்.

அவர் ஒரு தடவை கொடுத்த விறகுக்கு தொழிற்சாலை நடத்துபவர்கள் பணம் கொடுக்கவில்லை என்றும் அந்தப் பணத்தை கேட்ட போது அவர் தாக்கப்பட்டுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடுமையான ரத்தப்போக்குடன் மாநிலத் தலைநகர் ராஞ்சியில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த அலியார் தற்போது அபாய கட்டத்தை தாண்டிவிட்டார் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இச்சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். மற்றவர்களைத் பொலிஸார் தேடிவருகின்றனர்.

# விரைவில் மத்திய அர்சில் ஆட்சி அமைப்போம்

முலாயம் சிங்



நாட்டில் பல்வேறு ஊழல்களில் சிக்கியுள்ள காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசு திணறி வருவதாக சமாஜ்வாடி கட்சியின் தலைவர் முலாயம் சிங் யாதவ் தெரிவித்துள்ளார்.

முலாயம் சிங்கின் சமாஜ்வாடி கட்சி காங்கிரஸுக்கு வெளியில் இருந்து ஆதரவு தெரிவித்து வருகின்றது.

காங்கிரஸுடன் கூட்டணி வைக்காவிட்டாலும் ஜனாதிபதி தேர்தலில் பிரணாப் முகர்ஜிக்கு ஆதரவாகவே சாமாஜ்வாடி செயற்பட்டது.

இதற்கிடையில் மத்திய அரசில் ஏற்படும் குழப்பங்களுக்கும் சமாஜ்வாடி விமர்சிக்க தவறியதில்லை.

இந்நிலையில் கொல்கத்தாவில் நடந்த நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்ட சமாஜ்வாடி கட்சியின் தலைவர் முலாயம் சிங் யாதவ், மத்தியில் ஆளும் காங்கிரஸ் அரசு பல்வேறு ஊழல்களால் திணறி வருகிறது.


ஆட்சி அதிகாரத்தைப் பயன்படுத்தி நாட்டு மக்களுக்கு எந்த நன்மையையும் காங்கிரஸ் கட்சியால் செய்ய முடியவில்லை.

பாஜக ஆட்சியில் இருந்த போது நாட்டு முன்னேற்றத்துக்கு எதுவும் செய்யவில்லை.

சமாஜ்வாடி கட்சி மத்தியில் பொறுப்பேற்கும் நேரம் வந்துவிட்டது.

வரும் 2014ம் ஆண்டு நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலில் சமாஜ்வாடி கட்சியே மத்தியில் ஆட்சி அமைக்கும் என்றும் முலாயம் சிங் யாதவ் கூறியுள்ளார்.

# பாகிஸ்தான் உளவாளி இந்தியாவில் கைது?



ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ. அமைப்புடன் தொடர்புடைய பயங்கரவாதி ஒருவன் கைது செய்யப்பட்டான்.

பாகிஸ்தான் அரசின் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ தீவிரவாத செயல்களை ஊக்குவிக்கும் பொருட்டு பயங்கரவாதிகளை இந்தியாவிற்குள் அனுப்பி வைக்கிறது.

காஷ்மீர் மாநிலம் கீத்ஸ்வார் நகரில் பயங்கரவாதி ஒருவன் பதுங்கியிருப்பதாக அம்மாநில பொலிஸாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

இதன் அடிப்படையில் பொலிஸார் ஜாவியத் அகமத் எனும் பெயருடைய தீவிரவாதியை கைது செய்தனர்.

ஏற்கனவே இவர் மீது 1996 ஆம் ஆண்டில் நடந்த லஜபத் நகர் குண்டுவெடிப்பு சம்பவத்திலும், ஆப்கானிஸ்தானில் நடந்த காந்தஹர் விமான கடத்தல் சம்பவத்திலும் நெருங்கிய தொடர்பிருப்பதும் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட ஜாவியத் அகமது, கடந்த 20 ஆண்டுகளாக போலி ஆவணம் மூலம் இந்தியாவில் தங்கியிருப்பது தெரிய வந்துள்ளது.

# முரளி நல்லிணக்கக் கிண்ணம்: சென். பீற்றர்ஸ் அணி சம்பியன்

முரளி நல்லிணக்க கிண்ண ருவென்ரி-20 இறுதிப் போட்டியில் யாழ். இணை அணியை வீழத்திய சென். பீற்றர்ஸ் அணி சம்பியனானது.

ஒட்டு சுட்டான் ஓவல் மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் நாணய சுழற்சில் வெற்றி பெற்ற யாழ். இணை அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

ஆரம்பம் முதல் துடுப்பாட்டத்தில் சிறப்பாக பிரகாசிக்காத யாழ். இணை அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 90 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. இதில் கோகுலன் மாத்திரம் அதிகூடுதலாக 25 ஓட்டங்களை பெற ஏனைய வீரர்கள் சொற்ப ஓட்டங்களுடன் அரங்கு திரும்பினர்.

சென். பீற்றர்ஸ் அணியின் பந்து வீச்சில் அபாரமாக பந்து வீசிய ஜுலியன் டி சில்வா 3 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

இந்நிலையில் 91 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கிய சென். பீற்றர்ஸ் அணி 18.1 ஓவர்களில் வெற்றி இலக்கை அடைந்து கிண்ணத்தை கைப்பற்றியது.

அணியின் துடுப்பாட்டத்தில் நிமந்த (13), ஜேசன் (12), ஜீலியன் (14) ஓட் டங்களை பெற்று அணியின் வெற் றியை உறுதி செய்தனர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக பந்து வீச்சிலும் துடுப்பாட்டத்திலும் அசத்திய ஜுலியன் தெரிவு செய்யப்பட்டார்.



## 9 மாதங்களின் பின் மெண்டிஸ்



9 மாதங்களாக சர்வதேசப் போட்டிகளில் பங்குபற்றியிருக்காத இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளர் அஜந்த மெண்டிஸ், தான் சர்வதேசப் போட்டிகளில் மீண்டும் பங்குபற்றுவதற்குத் தயாராக உள்ளதாகவும் ஆர்வமாகக் காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளார். உலகக் கிண்ண ருவென்ரி-20 தொடரில் சிறப்பாகச் செயற்பட எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

முதுகு உபாதை காரணமாக 9 மாதங்களாகப் போட்டிகளில் பங்குபற்றியிருக்காத அஜந்த மெண்டிஸ், இலங்கையில் இடம்பெறவுள்ள உலகக் கிண்ண ருவென்ரி-20 தொடருக்கான 15 பேர் கொண்ட இலங்கை அணியில் இடம்பெற்றுள்ளார்.

இந்நிலையில் இலங்கை சார்பாக தொடரில் பங்குபற்ற எதிர்பார்ப்பதாகத் தெரிவித்த அஜந்த மெண்டிஸ், தனது 5 வகையான வித்தியாசமான பந்துவீச்சு வகைகளையும் இத்தொடரில் பயன்படுத்த எதிர்பார்ப்பதாகத் தெரிவித்துள்ளார்.

தனது முதுகு உபாதை காரணமாக முன்னர் சிறப்பாகப் பந்துவீச முடிந்திருக்கவில்லை எனத் தெரிவித்த அவர், சில வகையான பந்துவீச்சுக்களை வீசுவதற்கு கடினத்தை எதிர்கொண்டதாகவும் தெரிவித்தார். தற்போது தனது முதுகு உபாதை குணமாகியுள்ள நிலையில் தன்னால் சிறப்பாகப் பந்துவீச முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.இந்தியத் துடுப்பாட்ட வீரர்கள் தனது பந்துவீச்சைச் சிறப்பாகக் கணித்து ஆடத் தொடங்கியுள்ளார்கள் எனத் தான் நம்பவில்லை எனத் தெரிவித்த அஜந்த மெண்டிஸ், தன்னால் மிகச்சிறப்பாகச் செயற்பட முடியும் எனவும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இலங்கை அணி தனது முதலாவது போட்டியில் சிம்பாவே அணி செப்டெம்பர் 18ஆம் திகதி எதிர்கொள்ளவுள்ளது.

## இலங்கை அணிக்கு புதிய சீருடை



ருவென்ரி-20 உலகக் கிண்ணத்தில் பங்கேற்க உள்ள இலங்கை அணிக்கான புதிய சீருடை நேற்று கொழும்பில் அறிமுகப்படுத்தப்பட்டது.

உலக கிண்ண ருவென்ரி-20 கிரிக்கெட் தொடர் இலங்கையில் இம் மாதம் 18ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. மாஸ் நிறுவனம் இலங்கை அணிக்கான புதிய சீருடையை வடிவமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தேசிய கரப்பந்தாட்டம் நாளை ஆரம்பம்
# வடமாகாண அணிகள் இன்று புறப்பாடு

தெல்லிப்பழை

தேசியமட்ட கரப்பந்தாட்டப்போட்டி நாளை சனிக் கிழமைறும் மறுதினம் ஞாயிற்றுக் கிழமையும் கொழும்பு றொறிங்ரன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிகளில் பங்கெடுப்பதற்காக வடமா காண கரப்பந்தாட்டஅணிகள் இன்று புறப்படுகின்றன.

இவ்வணி களுக்கு பொறுப்பாக கோப்பாய் பிர தேசசெயலக விளையாட்டு உத்தியோகத்தர் அகல்யா தெல்லிப்பழை பிரதேச செயலக விளையாட்டு உத்தியோ கத்தர் வல்லவக்குமரன் ஆகி யோர் செல்லவுள்ளனர். வடமாகாண ஆண்கள் அணி தனது முதலாவது போட்டியில் ஊவா அணியுடனும் பெண்கள் அணி சப்ரகமுவ அணியுடனும் மோதவுள்ளன.





## கலந்துரையாடல்

தெல்லிப்பழை

தெல்லிப்பழை பிரதேச செயலகத்திற்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான கலந்துரையாடல் 18,09,2012 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை மாலை 3 மணிக்கு தெல்லிப்பழை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. 21 வயதிற்குட்பட்டவர்களுக்கான உதைபந்தாட்ட போட்டியை நடாத்துவது தொடர்பாக நடைபெறும் இக்கலந்துரையாடலில் போட்டிக்கான அட்டவணை தயாரிப்பும் இடம்பெறும் என்பதனையும் தெல்லிப்பழை பிரதேச செயலக உத்தியோகத்தர் வல்லவக்குமரன் தெரிவித்துள்ளார்.

# இலங்கை வந்தது இந்திய அணி



உலகக் கிண்ண ருவென்ரி-20 தொடரில் பங்குபற்றுவதற்காக இந்திய அணி நேற்றைய தினம் இலங்கையை வந்தடைந்தது. நேற்று சென்னையில் இடம்பெற்ற நியூசிலாந்திற்கெதிரான ருவென்ரி-20 சர்வதேசப் போட்டியை முடித்துக் கொண்டதன் பின்பே இந்திய அணி இன்று இலங்கையை வந் தடைந்தது.

மகேந்திரசிங் டோனி தலைமையிலான இந்திய அணி இரண்டாவது தடவையாக உலகக் கிண்ண ருவென்ரி-20 கிண்ணத்தை வெல்வதற்கான எண்ணத்துடன் இலங்கையை வந்தடைந்துள்ளது.

ஏற்கனவே முதலாவது தடவையா க 2008ஆம் ஆண்டு இத் தொடர் இடம்பெற்றபோது மகேந்திரசிங் டோனி தலைமையில் இந் திய அணி சம்பியன் பட்டம் வென்றிருந்தது.

இந்திய அணியில் நீண்ட காலத்திற்குப் பின் இணைந்துள்ள யுவராஜ் சிங், ஹர்பஜன் சிங் ஆகியோரோடு இந்திய அணி புதிய பலம் பெற்றுள்ளதாகக் கருதப்படுகிறது. குறிப் பாக நியூசி லாந்திற்கெதிரான நேற்றைய போட்டியில் யுவ்ராஜ் சிங் சிறப்பாக ஆடியமை யுவராஜ் சிங் மீதான அழுத்தங்களை இல்லாது செய்திருக்கும் என டோனி ஏற்கனவே தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் இலங்கையை வந் தடைந்த ருவென்ரி-20 போட்டிகள் ஆகியவற்றின் மாற்றங்களுக்கேற்பதங்களை மாற்றிக் கொண்டு ஆட வேண்டும் எனத் தெரிவித்ததோடு, இந்திய அணி இக்கிண்ணத்தை வெல்லும் என்ற நம்பிக்கை காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்திய அணி தனது முதலாவது போட்டியில் செப்ரெம்பர் 19ஆம் திகதி ஆப்கானிஸ்தானைச் சந்திக்கவுள்ளது.

## தேர்வுக்குழுவினரின் கருணையால் சச்சின் அணியில் இடம்பிடிக்கக்கூடாது-இம்ரான்கான்



தேர்வுக்குழுவினரின் கருணையால் அணியில் இடம்பிடிக்காமல், புகழின் உச்சத்தில் இருக்கும் போதே சச்சின் ஓய்வுபெற வேண்டும் என்று பாகிஸ்தான் முன்னாள் அணித்தலைவர் இம்ரான் கான் தெரிவித் துள்ளார். கிரிக்கெட்டில் பல்வேறு சாதனைகளைப் படைத்திருக்கும் சச்சின், நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் 3 முறை ஸ்டெம்பை பறிகொடுத் தார். இதையடுத்து அவர் ஓய்வுபெற வேண்டும் என முன்னாள் வீரர்கள் பலர் கருத்துத் தெரிவித்தனர்.

இந்த நிலையில் இம்ரான் கான் மேலும் கூறியிருப்பது: சச்சின் மிகச் சிறந்த வீரர். அவருடைய இடத்தில் நான் இருந்தால் புகழின் உச்சத்தில் இருக்கும்போதே ஓய்வுபெற விரும்புகிறேன் என்று சொல்ல முடியும். தேர்வுக்குழுவினரின் கருணையால் அணியில் இடம்பிடிக்கக்கூடாது என்பதற்காகவே நான் சிறப்பாக விளையாடியபோதே ஓய்வுபெற்றேன்.

இருப்பினும் சச்சினின் ஓய்வு குறித்து அவர் மட்டுமே முடிவு செய்ய முடியும். அவர் மிகச்சிறந்த பேட்ஸ்மேன். கிரிக்கெட் ரசிகர்களின் உணர்வுகளோடு ஒன்றியவர். சச்சின் இல்லாத கிரிக்கெட்டை அவர்களால் கற்பனை செய்துகூட பார்க்க முடியாது என்றார்.

இப்பத்திரிகை இன்ஃபோமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 14.09.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது